(ALL RIGHTS RESERVED)
இந்தப் பத்ரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE.

ஜி. ஏ. வைத்யராமன், பி.ஏ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. | ஆனந்த ஹூ ஆனிமீ —JUNE 1914. | ஸஞ்சிகை 6. No. 6.

பொருளடக்கம்.

வ்யாஸங்கள்—	பக்கம்.
ரெவினியூ ஸெட்டில்மெண்டு	... 282
நன்செய் புன்செய்க்கு வேலி —எம். கோபாலன்	... 284
ஒட்டுமாஞ்செடி பயிர் செய்வது —என். எஸ். க்ருஷ்ணஸாமி அய்யர்	... 286
நூதன முறைகள்	... 288
சென்னை ராஜதானி கால் நடைகளைப் பற்றிய ஆராய்ச்சி	... 289
செடிகளின் உயிர் வாழ்க்கை	... 290
எலும்பு உரங்கள்	... 292
ஒரு புதுவகையான கோவாபரேடிவ் ஸங்கம்	... 293
மாட்டுத்தோல் ஆட்டுத்தோல் வ்யாபாரம்.	297
வட்டி கணக்கிடுதல்	... 301
விற்பனையா அடமானமா ?	... 305
நமது ஜனங்களின் க்ஷீணம்	... 309
ஈ	... 313
நெய், பால் தொழில் —எம். வைத்யநாதன்	... 317
ஆனரபிள் மிஸ்டர் ஜி. கே. கோகலே	... 321
அரசனும் துறவியும்	... 323
விவஸாயப் பகுதி	... 282
கோவாபரேஷன் பகுதி	... 293
வ்யாபாரப் பகுதி	... 297
வித்யாவிஷயப் பகுதி	... 301
வ்யவஹாரப் பகுதி	... 305
ஸுகாதாரப் பகுதி	... 309
பையன்கள் பகுதி	... 313
ஸ்த்ரீகள் பகுதி	... 317
ஜீவ்ய சரித்ரம்	... 321
சிறு கதைகள்	... 323
பகுதிக்குறிப்புகள்	... 325
மாஸ வர்த்தமானம்	... 329
காலஸ்திதி	... 335
பஞ்சாங்கம்	... 336

CONTENTS.

Articles—	PAGES
LAND REVENUE SETTLEMENT	... 282
FENCING FOR NUNJA AND PUNJA LANDS —M. Gopalan	... 284
GRAFT MANGO CULTIVATION —N. S. Krishnaswami Iyer, Salem	... 286
NEW METHOD	... 288
CATTLE SURVEY OF MADRAS	... 289
PLANT LIFE	... 290
BONE MANURES	... 292
A NEW TYPE OF CO-OPERATIVE SOCIETY	... 293
HIDES AND SKINS TRADE	... 297
HOW TO COMPUTE INTEREST	... 301
SALE OR MORTGAGE ?	... 305
THE DETERIORATION OF OUR RACE	... 309
THE FLY	... 313
DAIRYING INDUSTRY —M. Vaithyanathan	... 317
HON. MR. G. K. GOKHALE	... 321
A KING AND A SAINT	... 323
The Agricultural World	... 282
The Co-operative World	... 293
The Commercial World	... 297
The Educational World	... 301
The Legal World	... 305
The Sanitary World	... 309
The Boys' World	... 313
The Ladies' World	... 317
Biography	... 327
Short Stories	... 323
Departmental Notes	... 325
Diary of the Month	... 329
Season Report	... 335
Calendar	... 336

G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetti Street, Georgetown, Madras.
ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3 & 4, சுங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

Books at Concession Rates to Subscribers of "The Practical Life."

The Life and Teachings of Buddha.—By the Anagarika Dharmapala. Price As. 12. To Subscribers, As. 8.

Essentials of Hinduism.—A Symposium by representative Hindus. Price As. 8. To Subscribers, As. 6.

King George's Speeches on Indian Affairs.—Part I A complete collection of all the speeches made by His Majesty during his tour in India as Prince of Wales.

Part II. *Full text of all the speeches delivered by His Majesty during the Coronation Durbar Tour.* Price Re. 1. To Subscribers, As 12.

My Indian Reminiscences.—By Dr. Paul Deussen, Professor of the University of Kiel, translated by A. King. Price Re 1-4. To Subscribers, Re. 1

The Improvement of Indian Agriculture *: Some Lessons from America. By Cathelyne Singh.* Price Re. 1. To Subscribers, As. 12

Aspects of the Vedanta.—By various writers, The book also contains the opinions of Max Muller Dr. Goldstucker, Schopenhauer, Victor Cousin, and Dr. P. Deussen on the Vedanta. Second Edition, As. 12 To Subscribers, As 8.

Dadabhai Naoroji's Speeches and Writings—An up-to-date exhaustive and comprehensive collection of his speeches and writings. With a portrait Price. Rs. 2. To Subscribers, Re. 1-8.

Glimpses of the Orient To-day.—By Saint Nihal Singh. In this book, Mr. Singh describes the transition that has taken place in Asia during the last few decades, traces the causes of the awakening and offers a prophecy as to its ultimate effect Price Re. 1. To Subscribers, As. 12.

The Indians of South Africa.—Helots within the Empire ! How they are treated. By H. S. L. Polak. This book is the first extended and authoritative description of the Indian Colonists of South Africa, the treatment accorded to them by their European fellow-colonists, and their many grievances. Price Re. 1. To Subscribers, As 12.

Essays on Indian Art, Industry and Education.—By E. B. Havell, late Principal of the School of Arts, Calcutta. The subjects dealt with are "The Taj and its Designers," "The Revival of Indian Handicraft," "Art and Education in India," "Art and University Reform," "Indian Administration and Swadeshi," "The Uses of Art." Price Re. 1-4. To Subscribers, Re. 1.

All about Delhi.—With 30 illustrations. Price Re. 1-8. To Subscribers, Re. 1-4.

Essays on Indian Economics.—By the late Mahadev Govind Ranade Price Rs 2. To Subscribers, Re. 1-8.

The Depressed Classes.—A symposium by His Highness the Gaekwar of Baroda, Mrs. Annie Besant, The Hon'ble Mr. Gokhale, Sir Valentine Chirol, Rt. Rev. The Lord Bishop of Madras, The Hon'ble Sir Narayan Chandavarkar, The Hon'ble Mr. V. Krishnaswami Aiyar, The Anagarika Dharmapala and others. Price Re 1. To Subscribers, As. 12.

Light on Life.—A Selection of Five Spiritual Discourses by Baba Premananda Bharati. Price As. 8. To Subscribers, As. 6.

The Indian National Congress.—An account *of its origin and growth. Full text of all the Presidential* Addresses. Re-print of all the Congress Resolutions Extracts from all the Welcome Addresses. Notable Utterances on the Movement. Portraits of all the Congress Presidents. Cloth Bound. Over 1,100 pages. Crown 8vo Rs. 3. To Subscribers, Rs 2.

A Fragment on Education.—By J. Nelson Fraser, M.A., *(Oxon.)*, Principal, Secondary Training College, Bombay. Price Re. 1 To Subscribers, As. 12.

Morley's Indian Speeches.—An enlarged and up-to-date collection. Price Re 1. To Subscribers, As. 12

Gokhale's Speeches.—*An exhaustive* and comprehensive collection of his speeches, with a biographical sketch and a portrait. Over 1,000 pages. Crown 8vo Price Rs 3. To Subscribers, Rs. 2-8.

Swami Vivekananda.—An exhaustive and comprehensive collection of his speeches and writings. *Crown 8vo. 800 pages, with four portraits* Third *Edition, revised and enlarged. Price Rs. 2. To* Subscribers, Re 1-8

Sri Sankaracharya's Select Works.—The Text in Sanskrit, Devanagiri type, and an English Translation By S. Venkataramanan, B.A. Containing more than 700 *verses* in all and including all his important works Bound in Cloth Price Re 1-8. To Subscribers, *Re. 1.*

The Swadeshi Movement.—A Symposium by Representative Indians and Anglo-Indians. Re. 1. To Subscribers, As. 12.

Sri Ramanujacharya.—His Life and Times. By S. Krishnaswami Aiyangar, M.A. His Philosophy. By T Rajagopalachariar, M.A., B.L. *Price As. 12. To* Subscribers, As. 8.

Sri Madhwa and Madhwaism.—A Short Historic Sketch. By C. N. Krishnaswami Aiyar, M.A. Price As 12 To Subscribers, As. 8.

The Vaishnavite Reformers of India.—Critical Sketches of their Lives and Writings. By T. Rajagopalachariar, M.A., B.L. Price Re. 1. To Sub*scribers, As. 12.*

Shakespeare's Chart of Life: Being Studies of King Lear, Macbeth, Hamlet, and Othello. By Rev. William Miller, LL.D, C.I.E. Rs 4. To Subscribers, Rs. 3.

Essays in National Idealism.—By Ananda K. Coomaraswamy, D. Sc. Popular Edition with 6 illustrations. Re. 1. To Subscribers, As 12.

Industrial India.—By Glyn Barlow, M.A. Second Edition. Price. Re. 1. To Subscribers, As. 12.

Lift Irrigation.—By A. Chatterton. Second Edition. Price Rs. 2. To Subscribers, Re. 1-8.

☞ *The subscription for the "Practical Life" is Rs. 4 per annum post free. Subscription may commence from any month. Any one who wishes to buy books at the reduced rates must remit one year's subscription in advance. Those in arrears cannot have concession rates.*

G. A. NATESAN & CO., BOOKSELLERS, 4, SUNKURAMA CHETTY STREET, MADRAS.

SUPPLEMENT TO THE "PRACTICAL LIFE."
'பிழைக்கும் வழி'க்கு அனுபந்தம்.

HON'BLE Mr. G. K. GOKHALE, C.I.E.
கனம் கோகலே, ஸி.ஐ.இ.

பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

PRACTICAL LIFE

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர். — G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. — ஆனந்த௵ ஆனி௴, JUNE 1914. — ஸஞ்சிகை 6. No. 6.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of *general information and instruction devoted largely* to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for *use in the agricultural stations and by several Local* Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.		*Foreign.* Rs. A. P.
Per annum ...	4 0 0	... ...	6 0 0
Single copy ...	0 6 0	... ...	0 8 0
Sample copy ...	0 4 0	... ...	0 6 0

RATES OF ADVERTISEMENT.

1 Page	...	5 0 0	per month.
½ do	...	2 8 0	do
¼ do	...	1 4 0	do
1/10 do	...	1 0 0	do

The above rates are all *net* and subject to no discount whatever Orders should be accompanied with advance.

Notice to Contributors:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.		அந்ய நாடு.
வருஷம் 1க்கு ...	4 0 0	...	6 0 0
தனிப்ரதி ...	0 6 0	...	0 8 0
மாதிரி காபி ...	0 4 0	...	0 6 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம்	ஒன்றுக்கு	5 0 0
½ பக்கத்திற்கு	,,	,,	2 8 0
¼ பக்கத்திற்கு	,,	,,	1 4 0
1/10 பக்கத்திற்கு	,,	,,	1 0 0

வ்யாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருபநேயர்கள் அறியவேணும்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, & 4, சங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ் டவுன்,
மதராஸ்.

The Agricultural World.

விவஸாயப் பகுதி.

LAND REVENUE SETTLEMENT.

ரெவினியூ ஸெட்டில்மெண்டு.

ஸமீபத்தில் நடந்த செங்கல்பட்டு ஜில்லா கான்பரென்ஸில் சென்னபட்டணத்தில் ப்ரபல ஹைகோர்ட்டு வக்கீலான மிஸ்டர் எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கார் அக்ராஸனம் வகித்து ஒரு திறமான ப்ரஸங்கம் செய்தார். அதில் அவர் ரெவினியூ ஸெட்டில்மெண்டைப் பற்றிப் பேசின விஷயங்கள் புத்திசாலித் தனமாயும் எல்லாரும் கவனிக்கத் தக்கவையாயும் இருக்கின்றன.

அவைகளின் சாராம்சம் பின்வருமாறு.—விவஸாயிகளின் கஷ்ட நஷ்டங்களைப் பற்றிப் பேசுகையில் அவைகளுக்கு முக்யமான காரணங்களை எடுத்துக் காட்டினார். முதலாவது, க்ராமங்களில் கூலியாட்கள் அகப்படுவது கஷ்டமாகிக் கொண்டுவருகிறது. விலைவாசிகள் உயர்ந்து விட்டதாலும், பட்டணங்கள் வரவர பலத்து வருவதாலும், க்ராமாந்தரங்களில் வேலை செய்யும் கூலிகள் பட்டணங்களுக்குப் போய்விடுகிறார்கள். போதாக் குறைக்கு, க்ராமாந்தரங்களி லிருந்து அக்கரைச் சீமைகளுக்குக் கூலி வேலை செய்வதற்கும் போய் விடுகிறார்கள். இவைகளோடு, கவர்ன்மெண்டாரும் நிலவரியை ஒவ்வொரு ஸெட்டில்மெண்டிலும் உயர்த்திக்கொண்டே போகிறார்கள். நிலத்திலிருந்து வரும் வரும்படி குறைந்துகொண்டே வருகிறது. இதற்கு உடனே செய்யக்கூடிய பரிகாரம் கவர்ன்மெண்டார் நிலவரியை மட்டுப்படுத்துவதுதான். விவஸாயிகள் க்ஷேமமா யிருந்தால்தான் இந்தியா க்ஷேமப்படு மென்பது எல்லாரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். சென்னை ராஜதானியிலுள்ள 4,18,70,160 ஜனங்களில் 2,86,21,449 ஜனங்கள், அதாவது 100-க்கு 68-ப்பேர்கள், விவஸாயத்தையே நம்பி இருப்பவர்கள். இவர்கள் செலுத்தும் நிலவரியானது இந்த ராஜதானியில் ஸர்க்காருக்குக் கிடைக்கும் வரும்படியில் 100-க்கு 40-வீதம் ஆகிறது.

சில காலத்துக்கு முன்னால் இந்தியா கவர்ன்மெண்டார் ப்ரசுரம் செய்த ஒரு தீர்மானத்தில் நிலத்தீர்வை வஸூல் செய்யும் விஷயத்தில் ரொம்ப ஜாக்ரதையாயும் தயாளமாயும் இருக்கவேண்டுமென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் என்ன விதமாய், எப்படி தயாளத்தைக் காண்பிக்கிறது என்று கேட்கும்பொழுது, பெரிய உத்யோகஸ்தர்களுக்குள் அபிப்ராய பேதம் ப்ரமாதமாகிறது. ஆதியில் இங்க்லீஷ் கவர்ன்மெண்டார் எண்ணியபடியே நிலத்தை சாச்வதமாக ஸெட்டில் செய்துவிடுவதே சரியான வழியாகும். இதை அடைவதற்கே பொதுஜனக் கூட்டங்களெல்லாம் முயலவேண்டும். விவஸாயிகள் முன்னுக்கு வருவதற்கு இதுவே வழி என்று எல்லாரும் ஒப்புக்கொள்வார்கள். பெரிய நிலஸ்வான்களின் நிலங்களை இப்படி சாச்வதமாக ஸெட்டில் செய்யமுடியாத பக்ஷத்தில் சிறு ஸ்வான்கள் நிலங்களையாவது அப்படி செய்வதற்கு யாதொரு ஆக்ஷேபணையும் தோன்றவில்லை.

இந்த விஷயத்தில் கவர்ன்மெண்டார் கவனிக்க வேண்டிய முக்ய விஷயங்கள் என்னவென்றால், நிலத்தில் வரும்படி வருமோ வராதோ 100-க்கு ஸுமார் 40 வீதம் கட்டுக் குத்தகையாய் கவர்ன்மெண்டார் வரிவாங்கிக்கொள்வது ந்யாயமாகுமா? விவஸாயிகள் க்ஷேமமாயிருக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் சொல்வது உறுதியானால், நிலத்தீர்வையை

சாச்வதமாக்கின லொழிய அவர்கள் கடைத்தேரக்கூடுமா? 10-ரூபாயும் அதற்குக் குறைந்தும் தீர்வை செலுத்துகிறவர்களுடைய குடும்பம் மனுஷ்ய ஜீவனமாக ஜீவனம் செய்யக் கூடுமா?

வருமான வரி வஸூல் செய்வதில், கொஞ்ச வருமானமுள்ள, அதாவது வருஷத்திற்கு 1000-ரூபாய்க்கு குறைந்த வருமானமுள்ளவர்களிடத்திலிருந்து அந்த வரி வாங்குகிறதில்லை. சிறு விவஸாயிகளிடத்தி லிருந்தோ, குழிநிலம் இருந்தாலும், அதற்கு வரி வாங்கிவிடுகிறார்கள். ஸமீபத்திலெடுத்த ஸென்ஸஸ் கணக்குப்படி ஒரு ஸாதாரண விவஸாயி குடும்பத்தில் 5-பேர்கள் இருப்பதாகத் தெரிகிறது. ஒரு மனிதன் 3-வேளை சாப்பிடவேண்டும். குறைந்த பக்ஷம் ஒவ்வொரு தடவைக்கும் ஒரு அணாவாவது செலவாகும் இப்படிக் கில்லாமல் ஸாதாரண விவஸாயி குடும்பத்தில் 2-வேளைதான் சாப்பிடுவதாக வைத்துக்கொள்வோம். அதற்கு தடவை ஒன்றுக்கு ½-அணாத்தான் செலவாகுமென்றும், வைத்துக் கொள்வோம். ஆக, தினம் 5-பேருக்கு 5-அணா வீதம் மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்திற்கு 150-அணாவாகிறது. இன்னம் குடியிருக்க இடம், துணி, புகையிலை, கல்யாணம், சாவு, வாழ்வு, சீக்கு, இவைகளை யெல்லாம் சேர்த்துப் பார்க்கும் பொழுது, குறைந்த பக்ஷம் 10-ரூபாய்க்குக் குறைந்து ஒரு மாதத்திற்கு காலக்ஷேபம் செய்ய முடியாதென்று ஏற்படுகிறது. இந்த ராஜதானியில் 10ரூபாய்க்கும் அதற்குக் குறைந்தும் ஸர்க்காருக்கு நிலத்தீர்வை செலுத்துகிறவர்கள் 100-க்கு 67-பேர்களுக்குமேல் இருக்கிறார்கள். 30ரூபாயும் அதற்குக்குறைந்துமுள்ள பட்டாக்களை எடுத்துப் பார்த்தால் 100-க்கு 90-வீதம் ஆகிறது. சராசரியில் ஸர்க்கார்த்தீர்வையானது மொத்த நில வரும்படியில் 5-ல் ஒன்று அல்லது 6-ல் ஒன்றுதான் என்று வைத்துக்கொண்டாலும், 10-ரூபா வாய்தாக் கட்டும் நிலத்திலிருந்து வருஷத்திற்கு 50-அல்லது 60-ரூபாய்க்கு மேல் கிடைக்காது. இதிலிருந்து 10-ரூபா வாய்தாவைத் தள்ளி விட்டால், விவஸாயின் குடும்ப காலக்ஷேபத்திற்கு 40-அல்லது 50-ரூபாய்தான் மீதமாகிறது. இன்னும், ஸர்க்கார்த் தீர்வையானது மொத்த வரும்படியில் 10-ல் ஒன்றுதான் என்று வைத்துக்கொண்டாலும், விவஸாயிக்கு 90-ரூ. தான் தற்கால விலைப்படி மீதமாகிறது. ஆனால் சின்ன விவஸாயி விஷயத்தில் விலைவாசியை இப்படி பிடித்துப் பார்ப்பது சரியாகாது, ஏனென்றால், விளைச்சல்,* ஒரேவிதமாக இருக்குமாகையாலும், விளைந்த தானியங்களை அவர்கள் சாப்பாட்டுக்கு வைத்துக்கொண்டு விற்பதற்கில்லையாதலாலும், விலைவாசி ஏற்றத்தால் சிறுவிவஸாயிகள் ஒருவித லாபத்தையும் அடைய முடியாது.

சாசவத ஸெட்டில்மெண்டு செய்யும் பக்ஷத்தில் அதனாலுண்டாகும் பலனை உழுது பயிர் செய்கிறவர்கள் அனுபவியாமல் நடுவிலுள்ள நிலஸ்வான் அடித்துக்கொண்டுபோய் விடுவான் என்று சிலா சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்வது சரியாகாது. செங்கல்பட்டு ஜில்லாவைப் பற்றிய மட்டில், பள்ளிகளும், பறையர்களும் நிலம் வாங்கி வருகிறார்களென்றும், ஊரில் குடியிருந்து சாகுபடி செய்யாத நிலஸ்வான்கள் குறைந்து வருகிறார்களென்றும், விவஸாயிகள் அல்லாத முதலாளிகள் நிலம் வாங்கி வருகிறார்களென சொல்வதற்கில்லை யென்றும, ஸ்பெஷல் ஸெட்டில்மெண்டு ஆபீஸர் சொல்லியிருக்கிறார்.

சாச்வத ஸெட்டில்மெண்டு செய்யும் பக்ஷத்தில், சிறு நிலஸ்வான்களிடத்திலிருந்து அவர்கள் நிலம் விற்பனை யாகிவிடுமென்று பயப்படும் பக்ஷத்தில், அப்படிப்பட்ட நிலங்களை, சிறு விவஸாயிகளுக்கே விற்கவேண்டுமென்று சட்டம் செய்து விடலாம். இன்னும் இப்படிப்

பட்ட நிலங்களை வாரிஸில்லாமற் போனல் தான் விற்கலாமென்றும், அல்லது ரெவினியூ அதிகாரிகள் ஒப்புக்கொண்டால்தான் விற்கலாமென்றும் செய்து விடலாம். இப்படிச் செய்துவிட்டால் க்ராமாந்தரங்களி லிருந்து ஜனங்கள் அக்கரைச் சீமைக்குபோவது குறைந்து போய், சிறு நிலஸ்வான்கள் க்ஷேமப் படுவார்கள். விவசாயமும் தீவிரமாய்நடக்கும். பெரிய முதலாளிகள் நிலத்தை ஒழித்து வேறு கைதொழில்களில் முதலைசெலுத்த இறங்குவார்கள்.

மேற்சொன்னவைகளெல்லாம் 10-ரூபாயையும் அதற்குக் குறைந்த நிலத்தீர்வையையும் பற்றிய வையானலும், 30-ரூபாயும் அதற்குக் குறைந்தும் செலுத்தும் நிலங்களுக்கும் பொருந்தும். 30-ரூபாய்க்கு மேல்பட்ட நிலஸ்வான்களும் முன்னுக்கு வரவேண்டுமென்ருல், அவர்கள் விஷயத்திலும் சாச்வத ஸெட்டில்மெண்டு செய்வது அவச்யமாகும். அப்படிச் செய்வது முடியாதென்ருல் மறு ஸெட்டில்மெண்டு செய்யும்பொழுது விலைவாசி ஏறியிருந்தாலொழிய மறு ஸெட்டில்மெண்டு செய்யக் கூடாதென்றும், அப்படிச் செய்தாலும் ரூபாய்க்கு 2-அணவுக்கு மேல் வரியை ஜாஸ்தி பண்ணக்கூடாதென்றும், கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொண்டு, போராடவேண்டும். அதிகாரப் பிரிவினை கமிட்டியார் சிபார்சு செய்தபடி ரெவினியூ ஸெட்டில்மெண்டைப் பற்றிய கொள்கைகளையும், இத்தனை வருஷத்திற்கு ஒரு தடவை ஸெட்டில் செய்யவேண்டியதென்பதைப் பற்றியும், ஏன் இதுவரையில் சட்டம் செய்யவில்லையோ தெரியவில்லை.

பெரிய நிலஸ்வான்கள் நிலத்தை சாச்வத ஸெட்டில்மெண்டு செய்வதால் ஸர்க்கார் வரும்படி குறைந்து போகும் என்று பயப்படவேண்டியதில்லை. வாரிஸுகள் பட்டத்திற்கு வரும் பொழுதும், நிலங்கள் விற்பனையாகும் பொழுதும் தகுந்த வரிகள் போடுவதோடு, நில வரும்படியின்மேல் இன்கம்டாக்ஸ் வரியும் போடலாம். இப்படிச் செய்தால் தண்ணீர்த் தீர்வை முதலிய ஸெஸ்களையெல்லாம் ஒழித்து விடலாம். அடிக்கடி ஸர்வே ஸெட்டில்மெண்டு செய்வதற்கு ஏற்படும் செலவும் நீங்கும். ரெமிஷன், கொடுப்பது, நிலங்களை ஜப்தி செய்வது போன்ற தொந்திரவுகளும் நீங்கும்.

FENCING FOR NANJA & PUNJA LAND

BY
M. GOPALAN.

நன்செய் புன்செய்க்கு வேலி.

நமது நாட்டில் கர்ண பரம்பரையாயுள்ள விவஸாய வழக்கங்கள் ஆயிரம் வருஷங்களுக்கு முன் இருந்தவைபோலவே இந்தக்காலத்தில் பெரும்பாலும் நடைபெற்று வருகின்றன வென்றாலும், சில புதிய வழக்கங்கள் அநுஷ்டானத்தில் வந்திருக்கின்றன. அவற்றுள் வேலிவைக்கும் விதம் கொஞ்சம் மாறுபாடு அடைந்திருக்கிறது.

மண்சுவர் எழுப்புவது, கள்ளியை சுற்றுப்புறம் வளர்ப்பது, மூங்கில் முள்ளை படலாகக் கட்டி நிறுத்துவது முதலிய விதங்கள் தொன்று தொட்டு வழங்கி வருகின்றன. தற்காலத்தில் இரும்புமுள் வேலி தலைப்பட்டிருக்கிறது. மண்சுவர் சள்ளை பிடித்த வேலை. அஸ்திவாரம் கல்லாயிராவிட்டால் ஒருமழை பெய்தவுடன் சுவர் கீழே விழுந்து விடுகிறது. சுவற்றிற்கு மேல் ஓடுபோட வேண்டியிருக்கிறது. சுவர் வைக்க நாள் பிடிக்கிறது. 30-சதுர அடியுள்ள ஒரு கொல்லைக்கு இரண்டு படை யெழுப்ப 10-ரூபாய்க்கு மேல் ஆகிறது. அதுவுமல்லாமல் இடத்தை அடைத்துக் கொண்டு பார்வைக்கு லக்ஷணமாயில்லை. கள்ளி வேலி ஸுலபமான வேலையாயிருந்தாலும் உபயோகப்படுகிறதில்லை. எங்கே பார்த்தாலும் பரந்து வளர்ந்து விடுகிறது. பூச்சி பொட்டு அடைகிறபடி

யால் இருட்டுவேளையில் போவதற்கு பீதியாயிருக்கிறது. மேலும், முள்ளுகள் சுற்றுப்புறங்களில் விழுந்து காலில் தைத்து உபத்திரவத்திற்கு இடமாகிறது. இதல்லாமல், இடைஇடையே இண்டு இடுக்குகள் ஏற்படுகிறபடியால், ஆடுமாடுகள் புகுந்து உள்ளே வந்து பயிர் பச்சையை அழித்து விடுகின்றன. மூங்கில் முள்வேலி உபயோகமேயில்லை, மாடுகள் வேலியைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்து விடுகிறதை நமது அநுபோகத்தில் காண்கிறோம். வேலியை உயரமாக வைக்கவும் முடிகிறதில்லை. ஒரு பூனை போகும்படியான இடை வெளியில் ஒரு ஆடு போட்டடித்து தனது சரீரத்தை சரிப்படுத்தி சென்று விடுகிறது. ஆடு நுழையும்படியான இடத்தில் கன்றுக் குட்டி ஒரு கை பார்க்கிறது. இப்படியே பெரியமாடுகளும் வழிகள் பண்ணிவிடுகின்றன. சில மாடுகள் முள்வேலிகளை தாண்டிக் குதிக்கின்றன. முள் அகப்படுவது ச்ரமம். நாலுகட்டு முள் வேண்டுமென்றால் மூங்கில் கொத்தையுடைய அடுத்த வீட்டு சேஷன் காலில் விழவேணும். முள்ளை வாங்கினால் மாத்திரம் போதுமா? படல் கட்டுவது சள்ளைபிடித்தவேலை. பாளைவேண்டும். இவ்வளவு கஷ்டப்பட்டு வேலிவைத்தால் ஒரு வருஷங்கூட நிற்கிறதில்லை. வருஷாவருஷம் பழுது பார்க்கவேண்டும்.

இந்தக்கஷ்டங்களையெல்லாம் போக்கடிக்க இரும்பு முள்ளு தலைப்பட்டது நமது அதிர்ஷ்டம். இந்த முள்ளை நெருக்கமாகப் போட்டால் ஆடுமாடு நுழைய முடியாது. நுழைந்தால் அவைகள் தோலை இரவல் கொடுக்கும்படி நேரிடும். ஸுமார் 500-கஜ நீளமும் ஒரு அந்தர் நிறையுமுள்ள ஒரு சுருள் வீட்டுவாசலுக்கு வந்து சேர 13-ரூபாயில் முடியும். இதற்கு வேண்டிய ஆணிகளுக்காக அரை கால் செலவிட்டால் போதும். ஐந்தாறு அடிக்கொரு தாம் ஒரு புவாசுக்கட்டையை நட்டு முள் கம்பியை அந்தக்கபபத்தில் அடித்து முடுக்கினால் கெட்டியாகிவிடும். வருஷாவருஷம் பழுது பார்க்க வேண்டியது அவசியமில்லை. கட்டைக்கு பதிலாக தண்டவாளதுண்டுகளை நிறுத்தலாம். கனம், உறுதி, நாள்பட்டுநிற்கும். ஆனால் அந்தத் துண்டுகளின் விலை ஜாஸ்தி. ஸ்வல்ப ஐவேஜியுள்ளவர்கள் அவைகளை வாங்கமுடியாது. ஸாதாரணமாய் கட்டைகளும் போத்துகளும் போதும்; போத்துகள் வளரக்கூடியவையாயிருந்தால் தான் நல்லது. பட்டுப்போகும் கட்டைகளைப்போட்டால் அடிக்கடிவேறு கட்டைகளைப் போடவேண்டியிருக்கும். அதுமெனக் கட்ட வேலை. இநதமாதிரி ஒருதரம் கவனித்து இரும்புமுள் வேலி வைக்கும் பட்சத்தில் 10-வருஷத்திற்கு அப்பு அழுக்கில்லாமல் நிற்கும. தஞ்சாவூர் ஜில்லாவில் பல க்ராமங்களில் இம்முள்ளை உபயோகித்து வருகிறார்கள். 10-வருஷத்திற்கு மறற வேலிகளுக்கு செலவு செய்கிறதில் பாதிகூட இநத இரும்பு முள் வேலிக்காகாது என்பது நிசசயம்.

வெகு ஜனங்களுக்கு இந்த முள்ளை எங்கே வாங்குகிறதென்று தெரியாது. ஏனென்றால் அவாகள் இங்கிலீஷ் ஸமாசாரப்பத்ரிகைகளை வாசிக்கிறதில்லை. அவர்கள் வாசிக்கிற தமிழ் பேபர்களில் இந்த முள்ளைப்பற்றி ப்ரசாரங்கள் இருக்கிறதாக எனக்கு ஞாபகமில்லை.

இப்படி விலைப்போகும் படியான சரக்கை வைத்திருக்கும் பெரிய கமபெனிக்காரர்கள் லாபம் சம்பாதிக்காமலிருப்பது ஒரு வியப்புதான், சென்னை பம்பாய், கல்கத்தா இம்மூன்று பட்டணங்களிலும் நேராக சீமையிலிருந்து வரவழைக்கும கம்பெனிகள் இருக்கின்றன. இவாகளிடமிருநது நேரே எழுதி வரவழைத்தால் தான் நயம். அவாகளிடம் வாங்கி சில்லரையாக விற்கும் சிறு பட்டணங்களிலுள்ள சில்லரைக் கடைக்காரர்களிடத்தில் வாங்கினால்

க்ராக்கி. இரண்டு மூன்று ரூபாய்க்குக் குறை யாமல் ஏமாந்துபோகவேண்டியது தான். இன்னும் பல சூதுகள் உள்ளன. அவைகளைப் பற்றி இந்த வியாஸத்தில் எடுத்துச் சொல்ல இடம் கொடாது. ஒரு கூடைக்கு விலை சராசரியாக ரூபா 12. ரயில் சார்ஜ் 200 மைலினுக்குள்பட்டு 4 அணுவாகும். வண்டிச் சத்தம் முதலிய சில்லரைச் செலவு 12 அணு. ஆக 13 ரூபாய்க்குள் முடியும்.

எம், கோபாலன்.

GRAFT MANGO CULTIVATION.

BY

N. S. KRISHNASWAMI IYER, SALEM.

ஒட்டுமாஞ்செடி பயிர்செய்வது.

போன மார்ச்சு மாஸத்து ஸஞ்சிகையில் ஒட்டுச் செடிகள் 50 வருஷங்களுக்கு முன் வங்காளத்திலிருந்து சேலத்துக்கு ஒரு துரையால் கொண்டு வரப்பட்டு பயிராக்கப்பட்டனவென்று சொன்னேன். வங்காளிகளுக்கு செடிகளை ஒட்டும்விதம எப்படித் தெரிந்திருக்குமோவெனில் அவாகள் கப்பல் யாத்ரை செய்து ஆஸ்திரேலியா முதலான இடங்களுக்குப் போய் அவ்விடங்களின் தோட்டக்காரர்கள் ஒட்டுச் செடிகள் தயார் செய்வதைப் பார்த்து வந்து தாங்களும் அம்மாதிரிச் செய்ததாய்த் தெரியவருகிறது. ஒட்டுச் செடிகள் தயார் செய்து வைப்பானேன்? நாட்டுச் செடிகளையே பயிர் செய்யக் கூடாதா வெனில், நாட்டுச் செடிகளைத் தோப்பாக வைத்துப் பயிர் செய்வதில் சில மரங்கள் நல்ல மாதுர்யமான நாரில்லாத பருத்த பழங்களைக் கொடுக்கின்றன. வேறு சில மரங்களின் காய்கள் சிறுத்து, புளிப்பு, நார், மஞ்சள் நாற்றம் இவைகள் மேலிட்டுப் பக்கத்து மரங்களின் குணங்களையும் கெடுத்துவிடுகின்றன. அவ்விதத்தோப்புகளாயுள்ள இடங்களில் கெடுதலான மரங்களையெல்லாம் வெட்டிவிட்டு சற்று மேன்மையான மதுரமானதும் நாரில்லாதவையும், பருத்த காய்கள் காய்ப்பதுமான சில மரங்களை நிறுத்துவதனுல் அம்மரங்கள் மேன்மையடைகின்றன. அவ்விதமரங்களின் கொட்டைகளை யெடுத்து வேறிடங்களில் நட்டுப் பயிராக்கினுல் மரங்கள் அவைபோலவே பிரா. சற்று வித்யாஸப்படும். இம்மரங்கள் பெரிதாய் வளர்ந்தபின் வேறிடங்களில் பெயர்த்து வைப்பதும் கூடாமையாயிருக்கிறது. ஆகையால் இவைகளில் ஒட்டுகள் கட்டினுல் அவைகளை வேறிடங்களில் வைத்து பயிராக்கலாம். இம்மாதிரி பொறுக்கி யெடுத்த மரங்களில் ஒட்டுகள் தயார் செய்துதான் ஆதியில் பங்காளிகள் ஒட்டுச் செடிகளை வ்ருத்தி செய்ததாய்த் தெரியவருகிறது.

நான் தென் ஜில்லாக்களில் சில இடங்களுக்குப் போய்ப் பார்த்ததில் நாட்டுச்செடிகளிலும் மேன்மையான பழங்கள் காய்க்கின்றன. அப்படிக் காய்க்குமிடங்களிலுள்ள சில மரங்களைப் பொறுக்கி யெடுத்து அவைகளிலும் ஒட்டுகள் தயார் செய்து வேறிடங்களில் நட்டுப் பயிராக்கி அப்படியே அவைகளை வ்ருத்தி செய்தால் அவைகளும் சேலத்து ஒட்டுகளுக்கு ஸமமாகும். இதுவே சாஸ்த்ரோக்தமான வழி.

சேலத்தைப் போலவே சித்தூர், பெங்களூர் முதலான இடங்களிலும் ஒட்டுமாஞ்செடிகளை ஏராளமாய்ப் பயிராக்கி அவ்விடங்களிலும் அநேக தோட்டக்காரர்கள் ஒட்டுச் செடிகளை விற்று வருகிறார்கள். அந்த ஊர்ச் செடிகளுக்கும், சேலத்துச் செடிகளுக்கும் வெகு பேதமுண்டு. சேலத்து மாஞ்செடிகள் எவ்வித உஷ்ண ப்ரதேசத்திலும் பயிராகும். குளிர் அதிகமாயுள்ள இடங்களிலும் பயிராகும். ஆனுல் பெங்களூர், சித்தூர் முதலான விடங்களிலுள்ள ஒட்டுமாஞ்செடிகளை அதிக உஷ்ண ப்ரதேசங்களில் பயிரிட்டால் அவைகளிலுண்டாகும் பழங்களில் புழுக்கள்

உற்பத்தியாகின்றன. இந்தக் கெடுதலான குணத்தைப் பற்றி என்னிடம் அநேகர் சொல்லக் கேட்டிருக்கிறேன். ௭ வருஷங்களுக்குமுன் நான் போடிநாயக்கனூர் போயிருந்தபோது அவ்விடத்து ஜமீன்தார் தோட்டத்தில் ஷை ஜமீன்தார் காலத்தில் பெங்களூர் தோட்டக்காரின் ஒருவனை வைத்துக்கொண்டு, அவ்விடத்திய செடிகளையே தருவித்துப் பயிராக்கினார். அவைகள் அந்த பூஸாரத்திற்கு அதிகமாய்ப் பருத்து வளர்ந்து பெரிய தோப்பாகி, அவைகளில் காய்கள் செவ்வையாய்ப் பருத்துக் காய்க்கின்றன. ஆனால் புழுவுண்டாகும் துர்க்குணமட்டு மிருக்கிறது. இந்த விஷயம் இப்போதிருக்கும் ஜமீன்தாரினி யம்மாளவர்களும் என்னிடம் நேரில் சொன்னார்கள். சேலத்துப் பழங்களுக்கோ இவ்விதத் துர்க்குணங்களில்லை யென்பது நிச்சயம்.

பெங்களூர், சித்தூர் முதலான இடங்களுக்கும் ஆதியில் வங்காளத்திலிருந்தே ஒட்டுச் செடிகள் கொண்டுவந்து பயிராக்கி யிருக்க வேண்டும். அவ்விடங்களின் சீதோஷ்ண ஸ்திதியை கவனிக்கும்போது அதிக குளிர்ச்சியே மேலிட்டிருப்பதால், அவ்விடங்களிலுண்டான ஒட்டுச்செடிகளை உஷ்ணம மேலிட்ட இடங்களாகிய தென் ஜில்லாக்களில் பயிரிட்டால் அவைகளின் பழங்கள் வெயிலின் கொடுமை பொறுக்கமுடியாமல் உள்ளிருக்கும் சதை சற்று வெம்பலாய் சென்னிற மடைகின்றன. அதனால்தான் புழு உண்டாவது வங்காளமோ நம் தென்னிந்தியாவைவிட எவ்வளவோ குளிர் மிகுந்த பூமி. அவ்விடத்திலுண்டான ஒட்டுச் செடிகளை ஆதி முதல் உஷ்ணம் மிகுந்த சேலத்தில் வைத்துப் பயிராக்கினதால் அவைகளின் குணம் மாறிவிட்டன. அதுபோல் பெங்களூர், சித்தூர்ச் செடிகளின் கெடுதலான குணங்கள் மாறுவதற்கு வெகுகாலம் செல்லும். அப்போதும் சாஸ்த்ரோக்தமான வேறு வழியைச் செய்தேயாகவேண்டும். அப்படிச் செய்வதானால் அதிக பணச் செலவாகும் அந்தப் பணச்செலவை யுத்தேசிக்காமலே பெங்களூர் தோட்டக்காரர்களும் இப்போது 5-6-வருஷங்களாய் நான் சொன்ன சாஸ்த்ரோக்தமான வழிகளைச் செய்து வருகிறார்கள் அவையாவன:—உஷ்ணம் மிகுந்த ஊராகிய சேலத்திலுண்டாகிய கொட்டை நாற்றுகளை அதிகப் பணங்கொடுத்து வாங்கிப்போய் அந்த நாற்றுகளைத் தங்கள் ஊரிலுள்ள பெரிய மரங்களின் கிளைகளில் ஒட்டி யெடுத்த செடிகளை விற்கிறார்கள். இதுவே சாஸ்த்ரோக்தமான வழி. இப்படி ஒட்டுவதால் அடி வேருள்ள செடியின் குணங்கள் மேல் கிளைக்குஞ் சென்று மேல் செடியின் கெடுதலான குணத்தை மாற்றி விடுகின்றன. இம்மாதிரியாகவே இதுவரையில் பெங்களூர் செடிகளை வைத்துப் பயிராக்கி யிருப்பவர்களும் தங்கள் ஊர்களிலேயே வுள்ள நாட்டு மாங்களின் கொட்டைகளை நாற்றுப் பாவி அவைகளைச் சட்டிகளில் எடுத்து வைத்து பெரியவையாய் வளாந்திருக்கும் பெங்களூர், சித்தூர்ச் செடிகளில் ஒட்டுசள் கட்டி வேறிடங்களில் வைத்துப் பயிராக்கினால் மேற்சொல்லிய கெடுதலான குணங்கள் நீங்கும். அவ்வாறு ஒட்டுக் கட்டிவைத்த செடிகள் வளர்ந்து பலனுக்கு வந்த பிறகு பழைய செடிகளை வெட்டி விடலாம்.

தோட்டப் பயிர் செய்வது மனதுக்கு அதிக சந்தோஷத்தை யுண்டாக்கக் கூடியது. பணச் செலவுஞ் செய்து சரீரப்ரயாஸைப்பட்டே யாக வேண்டி யிருக்கிறது. இவ்வாறு பாடுபடுவது லாபத்தை உத்தேசித்துத் தான். அப்படி யிருக்க, கெடுதலான பலன் கிடைக்கும் செடிகளை வைத்துப் பயிர் செய்வதால் என்ன லாபம்? லாபத்தை உத்தேசித்து ஒட்டுமாஞ் செடிகள் வைத்துப் பயிர் செய்பவர்கள் மேற்சொல்

ஷிய ஒவ்வொரு விஷயத்தையும் செவ்வையாய்க் கவனித்தே நடத்த வேண்டும்.

என். எஸ். க்ருஷ்ணஸாமி அய்யர்.

MANURE FOR THE BANANA.

வாழைக்கு எரு.

மிஸ்டர் பார்ட்லெட் என்பவர் ஷிலோனைச் சேர்ந்த வாழைக்கு எருவிடும் விஷயமாக ஆராய்ச்சிகள் செய்துவந்ததில் வாழையின் எருவில் முக்யமான பாகம் பொட்டாஷ் என்று தெரியவருகிறதாம். ஆகையால் பொட்டாஷ் இல்லாத எரு ப்ரயோஜனமில்லையென்று அவர் சொல்லுகிறார். ஒவ்வொரு வாழைக்கும் 4-ராத்தல் உலர்ந்த ரக்தம், 2-ராத்தல் ஸல்பேட் அப் பொட்டாஷ், 2½-ராத்தல் ஸூபர் பாஸ்பேட் வீதம் எருவிட்டால் ரொம்பலாபம் கிடைக்கும் என்று சொல்லுகிறார்.

TO IMPROVE FLOOD STRICKEN CATTLE.

வெள்ளத்திலடிபட்ட மாடுகள் தேற.

சிதம்பரத்தில் வெள்ளத்திலடிபட்டு இளைத்துப்போன மாடுகளுக்கு ஒரு பட்டணம் படி கொள்ளு பிடிக்கும் பருமனுள்ள பூஷணிக்காயை தாராளமாய் கைநுழையைக்கூடிய விதமாய் காம்புள்ள பக்கத்தில் வட்டமாக○ மாதிரி அறுத்து விதையை எடுத்துவிட்டு அதில் கல்லில்லாத நல்லகொள்ளை நிரப்பி மேல்பில்லையை மூடி குப்பைமேட்டில் ஒரு அடி ஆழத்தில் நன்றாய்ப் புதைத்துவைத்து ஐந்நாளைக்குப் பிறகு எடுத்து உள்ளிருக்கும கொள்ளைக் காயவைத்து மாவாய் அறைத்துக் கொண்டதையும், பூஷணிக்காயை மூடியுடன் பசுஞ்சாணத்தால் நன்றாய் மேற்பூச்சிட்டு 15-எரு முட்டை மத்தியில் வைத்து தீ இட்டு வேகச்செய்தபின் ரஸம் வீணாகாமலெடுத்து உரலிலிட்டு மசியச்செய் தெடுத்துக்கொண்டதையும், நல்ல புதிய கள்ளில் தயிர் மாதிரி கெட்டியாகும் வரையில் சேர்த்துக் கரைத்து மூங்கில் குழாய்வழியாய் மாடுகளுக்கு காலை 9-மணிக்கு உள்ளுக்குக் கொடுத்து அன்று தண்ணீர் காட்டாமல் நிழலிட்டில் வைக்க மாடுகள் வியாதியற்று நல்ல புஷ்டியுடனிருக்கின்றன என்று கிருஷிகனில் ஒரு நிருபர் எழுதியிருக்கிறார்.

NEW METHODS

நூதன முறைகள்.

நூதன முறைகளைச் செய்து பார்க்கவோ, அல்லது புதியபயிர் ஏதாவது ஸாகுபடி செய்து பார்க்கவோ, வேண்டுமானால், ரொம்ப உபயோகமற்ற நிலத்திலாவது ரொம்ப உயர்ந்த நிலத்திலாவது புது முறைகளையும் (புதிய பயிரையும். செய்து பார்க்கக்கூடாது. நடுத்தரமான நிலத்தில்தான் பயிரிட்டுப்பார்க்க வேண்டும், ஏற்கெனவே அனுபோகமில்லாதவர்கள் உபயோகமற்ற நிலத்தில் புதிதான பயிரை சாகுபடி செய்தோ அல்லது நூதனமுறைகளை அனுஷ்டித்தோ பார்த்தால் நல்லபலன் கிடைக்காமல் போகக்கூடும். அதனால் அவைகளில் அத்ருப்தி ஏற்பட்டு விடக்கூடும். உயர்ந்த நிலத்தில் புதுப்பயிரை சாகுபடி செய்து நல்ல பலன்கிடைத்தால் நல்ல நிலமானதால்தான் இப்படி நல்லபலன் கிடைத்ததென்று சொல்லி நூதன முறையை அலக்ஷ்யம் செய்யத் தோன்றும்.

நடுத்தரமான நிலத்தில் நூதனமுறைகளையோ, புதியபயிரையோ உபயோகித்து நல்ல பலன் கண்டால், நல்ல நிலத்திலும் அந்த முறையை அனுஷ்டிக்கவும், புதுப்பயிரை ஸாகுபடி செய்யவும் தைர்யமுண்டாகும். அனுபோகம் ஏற்பட்டபிறகு கீழ்த்தரநிலத்திலும் புது முறையையும் புதுப்பயிரையும் உபயோகித்து லாபமடைவது ஸுலபமாகும்.

CATTLE SURVEY OF MADRAS.

சென்னை ராஜதானி கால் நடைகளைப் பற்றிய ஆராய்ச்சி.

சென்னை ராஜதானியில் தென் ஸர்க்கிள் விவஸாய டிப்டி டைரெக்டராகிய மிஸ்டர் எச். ஷி. ஸாம்ப்ஸன் இந்த ராஜதானியிலுள்ள கால்நடைகளைப்பற்றிய ஆராய்ச்சி செய்து கவர்ன்மெண்டாருக்கு அனுப்பிய ரிபோர்ட்டை அவர்கள் தங்கள் உத்திரவோடு வெளியிட்டிருக்கிறார்கள். அதில் கால் நடைகளைப் பற்றிய பல விஷயங்கள், அதாவது, அவைகளை வளர்ப்பது, அவைகளுக்கு தீனிசேகரிப்பது, கறவை மாடுகள், பால் தயிர் வ்யாபாரம் செய்தல், மாடுகள் வளர்த்து வ்யாபாரம் செய்தல் முதலிய விஷயங்களைப்பற்றி மிஸ்டர் ஸாம்ப்ஸன் எழுதியிருக்கிறார்.

இந்தியாவில் விவஸாயமே முக்யத்தொழிலானாலும் ஆடுமாடுகள் வளர்ப்பதில் இன்னும் விவஸாயிகள் கவனம செலுத்தவில்லை. மேற்கு தேசங்களில் ஆடு, மாடு, பன்றி, குதிரை முதலியவைகளை விவஸாயிகளும் நில ஸ்வான்களும் ரொம்ப சாஸ்த்ரோக்தமாயும் ஆசையுடனும் வளர்த்து லாபம் அடைந்து வருகிறார்கள். இந்தியாவிலோ வென்றால், நில ஸ்வான்களில் அநேகர் தங்கள் ஊர்களிலிருந்து நிலங்களை உழுது பயிர் செய்கிறதில்லை. அப்படிச் செய்யும் குடியானவர்களுக்கோ கால் நடைகள் வைத்து வளர்ப்பதற்கு வேண்டிய முதலுமில்லை, புத்தியும் போதாது. விவஸாயிகள் விவஸாய ஸம்பந்தமான தொழில்களைச் செய்து தங்கள் வரும்படியை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். பட்டணங்களில் நல்ல பால், தயிர், வெண்ணெய், நெய் இவைகளுக்கு ரொம்ப க்ராக்கி இருப்பதால், மாடுகளை வளர்த்து ஷை வியாபாரத்தை செய்தால் நல்ல லாபமுண்டு. மாடுகள் வளர்ப்பதால் நிலத்தை உழுவதற்கும், கபிலை அடிப்பதற்கும், எருச்சோப் பதற்கும், மட்டு மல்லாமல் மேற் சொன்னவாறு பால் நெய் முதலியவைகளை விற்று லாபம் அடைவதற்கும் ரொம்ப ஹேது இருக்கிறதென்பதை விவஸாயிகள் நன்றாய் அறியவேண்டும்.

மிஸ்டர் ஸாமப்ஸன் செய்த ஆராய்ச்சியினால் நிலங்களை உழுவதற்கும் வண்டிகளை இழுப்பதற்கும் தற்காலத்துக்கு போதுமான மாடுகள் இருக்கின்றன வென்று தெரியவருகிறது. அவைகளின் ஸங்க்யை பின் வருமாறு.

1890-1891.	149,70,813
1894-1895	154,29,325
1899-1900	150,57,180
1904-1905	166,90,261
1900-1910	200,89,397

1890-91 ஞு 5,126,368 காளைமாடுகள் இருந்தன. 1909 - 102 - ம் வருஷத்தில் 7,603,387 காளைமாடுகள் இருந்தன. இத்தவருஷங்களில் சாகுபடியான நிலம் 23,702,280 ஏக்கர்களிலிருந்து 32,217,353 ஏக்கர்களாக அதிகரித்ததினால் சாகுபடியான நிலத்துக்கும் அதற்குவேண்டிய மாடுகளுக்கும் உள்ள விகிதம் மாறவில்லை. அதாவது, முன் போலவே ஒன்பது ஏக்ராவுக்கு ஒரு ஜோடிமாடுகள் இருக்கின்றன. ஆனால் சில ஜில்லாக்களில் மட்டும் வேண்டிய அளவுக்கு மாடுகள் கிடைப்பதில்லையாம். இருந்த போதிலும் தற்காலம் மாடுகளின் விலை ரொம்ப அதிகமாக இருப்பதால, ஸ்வல்ப குடிகள்கூட மாடுகள்வைத்து அவைகள் பொறுக்கித் தின்னதுதான் தீனி என்று விடாமல நன்றாக போஷித்து விற்று லாபமடைந்து வருகிறார்கள். ஆகையால் இனிமேலும் வேண்டிய அளவுக்கு மாடுகள் கிடைக்காமல் போகாவென்று கவர்ன்மெண்டார் அபிப்ராயப்படுகிறார்கள்.

மிஸ்டர் ஸாம்ப்ஸன் தாம் செய்திருக்கிற ரிபோர்ட்டில் மாடுகளை வ்ருத்திசெய்ய கவர்ன்

மெண்டார் என்னவிதமாக ஒத்தாசை செய்யலாமென்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார். அதில் முக்யமான சிபார்சு என்னவென்றால், 'கோயம்புத்தூர் ஜில்லா காங்கேயம் ப்ரதேசத்தில் ஒரு பண்ணை ஏற்படுத்தி அதில் கால் நடைகளை வளர்க்க வேண்டுமென்பது. விவஸாய இலாகாவில் கால் நடைகள் வளர்ப்பதில் அனுபோகமுள்ள ஒரு டிப்டி டைரெக்டரை நியமித்து, அவரைக் கொண்டு நல்ல ஜாதிமாடுகளுள்ள ப்ரதேசங்களில் மாடு வளர்க்கும் பண்ணைகள் ஸ்தாபிக்க வேண்டுமென்கிறார். இந்தப்பண்ணைகளில் மாடுகளை பொறுக்கி எடுத்து பொலிய விட்டு, நல்ல ஜாதியான காளைமாடுகளையும் கறவை மாடுகளையும் உண்டாக்குவார்கள். இதோடு, கறவை மாடுகள் கறக்கும் பாலுக்கு கணக்குகள் வைத்து லாபமில்லாத மாடுகளைத் தள்ளவும், நல்லமாடுகளை வைத்துக் கொள்ளவும், மாட்டுக்காரர்களுக்கு காட்டப்படும்.

கால் நடைகளை வ்ருத்தி செய்ய இன்னொரு வழி என்னவென்றால், வேண்டியவர்களுக்கு நல்ல பொலிகாளைகள் ஸப்ளை செய்வது. இப்பொழுது கவர்ன்மெண்டார் நல்ல பொலிகாளைகளை ம்ருகவைத்ய இலாகா வழியாய் வேண்டியவர்களுக்குக் கொடுத்து வருகிறார்களானாலும், தற்போதைய ஏற்பாட்டில் சில குறைகளிக்கின்றன. மாடுகள் வளர்ப்பதற்காக புதிதாக ஏற்படப் போகும் டிப்டி டைரெக்டர் நியமனமானதும், மாடுவளர்க்கும் ஸம்பந்தமான ஸகல விஷயங்களையும் விவஸாய இலாகா அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்து, அவர்களிடத்தில் இன்னும் ஜாஸ்தி பொலிகாளைகளைக் கொடுத்து, இன்னும் சில ம்ருக வைத்யர்களுக்கும், கவர்ன்மெண்டு பண்ணை விவஸாய மானேஜர்களுக்கும், மாடுகள் மேய்ச்சல் விஷயமாய் ஏற்பட்டுள்ள பஞ்சாயத்தார்களுக்கும் காளைகளைக் கொடுத்து உதவுவார்கள்,

மிஸ்டர் ஸாம்ப்ஸன் மாடுகளை மந்தைகளாகச் சேர்த்து மேய விடுவதாலுண்டாகும் கெடுதிகளைப் பற்றி விவரித்திருக்கிறார். மாடுகளை வளர்ப்பதில் என்ன ஜாக்ரதையாக இருந்தாலும், மந்தைகளில் விட்டு மேய்ப்பதால் அவைகள் ஒருபோதும் திறமாக மாட்டா. மந்தைகளில் காளைகளும் கிடாரிகளும் கண்டபடி பொலிந்து விடுவதால் அதனால் உண்டாகும் ஸந்ததிகள் மட்டமாக இருப்பதோடு பல வித வ்யாதிகள் உண்டாகவும் இடமாகிறது. ஆகையால் விவஸாயிகள் அவரவர்கள் கால் நடைகளை அவரவாகள் நிலங்களில் தனிமையாக மேயவிடவேண்டும். இப்படிச் செய்வதானால் புல் உண்டாக்குவதற்கு வேண்டிய விதைகளை இனாமாகவோ அல்லது கொள் முதலுக்கோ கவர்ன்மெண்டார் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள்.

மிஸ்டர் ஸாம்ப்ஸன் இந்த ராஜதானியில் அங்கங்கே நடந்துவரும் கால் நடைக்காட்சியைப் பற்றியும் எழுதியிருக்கிறார். கோயம்புத்தூர் ஜில்லா திருப்பூரிலும், நெல்லூர் ஜில்லா வங்கவோலிலும் நடந்துவரும் கால் நடைக் காட்சிகளைத் தவிர, மற்ற காட்சிகளால் யாதொரு ப்ரயோஜனமுமில்லை' என்றார். கவர்ன்மெண்டார் இந்த அபிப்ராயத்தை அங்கீகரித்து மேற்சொல்லிய இரண்டு இடங்களில் நடக்கும் காட்சிகளைத் தவிர மற்ற கால்நடைக் காட்சிகளுக்கு பணஉதவி செய்வதில்லையென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

PLANT LIFE

செடிகளின் உயிர்வாழ்க்கை.

செடிகளுக்கு ஜீவனுண்டு. அவைகள் வளர்கின்றன. இதற்காக அவைகள் உணவு உண்கின்றன. மனிதரைபோல் சுவாசிக்காவிட்டாலும் ஒருவகையில் மூச்சுவிடுகின்றன. ஜீவஜந்துக்களைப்போல் அவைகளுக்கு சரியான உணர்ச்சியில்லை, என்றாலும் ஒருவகையான

உணர்ச்சி அவற்றிற்கும் இருப்ப தாகத் தெரி கிறது. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத் துக்கு அவைகள் போக முடியாது. அவை கள் நிலத்தில் வேரூன்றி ஒரே இடத்தில் நிலை யாய் நிற்கும்.

செடிகள் தங்கள் வேர்களின்மூலமாயும் இலைகளின் வழியாகவும் ஆகாரத்தை உண் கின்றன. இலைகளுக்கு ஆகாரம் ஆகாயத்தி லிருந்து கிடைக்கிறது. வேர்களுக்கு வேறு விதமான ஆகாரங்கள் மண்ணிலிருந்து கிடைக் கின்றன. ஆனால் மண்முழுவதுமே செடிக ளுக்கு உணவாகிறதென்று எண்ணக்கூடாது.

செடிகள் மண்கட்டிகளை அப்படியே தின்ன முடியாது. அவற்றின் ஆகாரம் வேர்களில் புகுந்துபோகும், தண்ணீரில் கரைந்துதான் உட்செல்லவேண்டும். ஆகையால் செடிகள் ஆகாரம் தின்னக்கூடும் என்று சொல்லாமல் கிரகிக்கக்கூடும் அல்லது குடிக்கக்கூடும் என்று சொல்லலாம்.

செடிகள் தங்கள் இலைகளின்வழியாய் உணவு உட்கொள்ளவும் சுவாசிக்கவும் செய் கின்றன; அதாவது ஒருவகையான வாயுவை உட்கொண்டு, வேறு ஒருவகையான வாயு வை வெளியே விடுகின்றன. ஒரு ஜீவஜந்து வானது தனக்கு அவசியமான வாயுவை சுவா சிக்காவிட்டாலும், தனக்கு ஏற்ற ஆகாரத்தை சாப்பிடாவிட்டாலும் செத்துப்போகின்றது. அதைப்போலவேதான் செடிகளும்.

அழகான புஷ்பங்களுக்காகவும், அல்லது பழங்களுக்காகவும் நாம் அநேக செடிகளை வைத்து வளர்க்கின்றோம். ஆனால் பாசியும், பெர்ன் (Fern) என்னும் ஓர்வகை மலைநாட் டுச் செடிமுதலான செடிகளும் பூக்கிறதில்லை.

புஷ்பிக்கும் செடிகளுக்கெல்லாம் வேர், தண்டு, இலைகள், பூக்கள், காய்கள உண்டு. செ டிகள் காய்கள் காய்ப்பதற்காகத்தான் ஜீவிக் கின்றன. ஏனென்றால் அவைகளைப்போன்ற புதுசெடிகளை உண்டாக்கக்கூடிய விதைகள் அந்தக் காய்களில் உண்டாகின்றன. ஒரு செடி யின் தண்டானது நிலத்திலிருந்து மேல் நோக் கியாவது அல்லது நிலத்தின்மேல் படர்ந்தா வது வளரும். அப்படியிருக்க வேர்களோ அனேகமாக வெளியே தெரியாமல் மண்ணுக் குள் புகுந்து வளர்கின்றன. ஆனால் சிலவேர் கள் மண்ணுக்குள் செல்லாமல் செடிகளின் கிளைகளைப் பிடித்துக்கொண்டோ அல்லது செடி யினின்று அந்தரத்தில் தொங்கிக் கொண்டும் ஆகாய வேர்களாயிருப்பதை நீங்கள் பார்த் திருப்பீர்கள்.

பூவாத மரம் காய்க்காததலால் விதைக ளும் உண்டாகா. ஏனெனில் விதைகள் புஷ்பங்களிலேதான் உண்டாகின்றன. அப் படியானால் பூவாத செடிகளிலிருந்து அவை களைப் போன்ற கன்றுகள் எப்படி உண்டா கின்றன?

இதை அறிவதற்கு நாம் பெர்ன் என்னும் மலைநாட்டுப் பூண்டின் இலையை எடுத்துப் பார்க்கவேண்டும். அதன் அடிப்பக்கத்தில் மங்கல் நிறமான அநேகம் சிறுபுள்ளிகள் போன்ற மணிகள் காணப்படும். அவைகளுக் குள் தூசுபோன்ற அநேகம் கருஅணுக்கள் அடங்கியிருக்கும். இந்தக் கருஅணுக்களி லிருந்து புது கன்றுகள் உண்டாகும். இவ் வுலகத்தில் செடிகள் இல்லையானால் ஜீவஜந்துக் கள் இருக்கா. ஏனென்றால் அவைகளுக்கு ஆகாரம் கிடையாது. ஜீவஜந்துக்களுக்கு செடிகள் ஆகாரம் தருகின்றன வென்பதும் உங்களுக்குத் தெரியும். நமக்குவேண்டிய உண்டி, உடை, உறை விடத்தின் மேற்கோப்பு இவைகள் அனேக மாகச் செடிகளிலிருந்தே நமக்குக் கிடைக்கின்றன. மேலும் செடிகளி லிருந்து தான் நமது வண்டிகள், படகுகள், கப்பல்கள்செய்ய மரமும், அடுப்புக்கு விறகும், சாயம் ஏற்றவர்ணங்களும், வியாதி தீர்க்க மரு ந்தும் நாம் அடைகிறோம்.—கிருஷிகன்.

BONE MANURES.

எலும்பு உரங்கள்.

எலும்பு உரங்களில் முக்யமாய் நான்குவகைகள் உண்டு. அவையாவன:-போன் மீல் என்று சொல்லப்படும் எலும்புத்தூள், ஸ்டீம்ட் போன் ப்ளோர் என்று சொல்லப்படும் நீராவியால் பதம் செய்யப்பட்ட எலும்புத்தூள், டிஸ்ஸால்வ்ட் போன் அதாவது கரைத்த எலும்பு, போன்காம்பௌண்ட். எலும்பு உரங்களில் போன்மீல் தான் மிகவும் ப்ரஸித்தி பெற்றது. எலும்பிலுள்ள கொழுப்புப்பசையை நீக்கிவிட்டு அதைத் தூளாக அரைத்தால் அது போன் மீலாகிறது. அது பலவித நயத்தில் கிடைக்கும். பழத் தோட்டக்காரர்கள் உபயோகிக்கும் போன்மீல் உரத்தில் எலும்புத்தூள் ½ அங்குலம் அல்லது காலங்குலம் நீளமிருக்கும். வேறு தினுஸுகளில் இதைவிட இன்னம்சிறியதாயும் ரொம்பப் பொடியாகவும் இருப்பதுமுண்டு. போன்மீல், பயிருக்கு உணவாவதற்கு அதிககாலம் பிடிக்குமாதலால், ரொம்பப் பொடியான போன்மீல் எருவையே உபயோகிப்பது நல்லதாகும். பொதுவாய்ச் சொல்லுமிடத்து, சாகுபடி நிலங்களுக்கு இந்த எருவை இடுவதைவிட புல்வளர்க்கும் நிலங்களுக்கு இதை எருவாக இடுவது நல்லது.

போன் மீலில் நைட்ரோஜனும் பாஸ்பாரிக் ஆஸிடும் இருக்கின்றன. நல்ல போன்மீல் எருவில் நூற்றுக்கு 3·3-பாகம் நைட்ரோஜனும், 45-பாகம் பாஸ்பேட் அப் லைமும் இருக்கவேண்டும். எலும்பிலுள்ள கார்ட்லேஜ் என்னும் குருத்தெலும்பு பாகத்தை நீராவியால் போக்கிவிட்டுப் பிற்பாடு அந்த எலும்பை அரைத்தால் அதற்கு ஸ்டீம்ட் போன் ப்ளோர் என்று பெயர். இப்படிச் செய்வதால் எலும்பிலுள்ள நைட்ரோஜன் நீக்கப்பட்டுப் போகிறது. போன்மீலோடு கந்தக த்ராவகத்தைச் சேர்த்தால் எலும்பிலுள்ள கரையக்கூடாத நிலைமையிலிருக்கும் பாஸ்பேட்டில் ஒரு பாகம் கரைந்து போகக் கூடிய தன்மையை யடைகிறது. இப்படி கந்தக த்ராவகம் சேர்த்துத் தயார்செய்த எலும்பு உரத்துக்கு டிஸ்ஸால்வ்ட் போன் என்று பெயர். நல்ல டிஸ்ஸால்வ்ட் போன்எருவில் நூற்றுக்கு 2·67-பாகம் நைட்ரொஜனும், 12-பாகம் கரையக் கூடிய பாஸ்பேட்டும், 16-பாகம் கரையக்கூடாத பாஸ்பேட்டும் இருக்கவேண்டும். சுண்ணாம்பு குறைவாயிராத நிலங்களுக்கு இது ரொம்ப நல்ல எருவாகும். ஸ்டீமட் போன் ப்ளோர் எருவை கந்தகத்ராவத்தில் கலந்து தயார் செய்த எருவுக்கு போன் காம்பவுண்ட் என்று பெயர். இதில் நூற்றுக்கு 82 - பாகம் நைட்ரொஜனும் 20-பாகம் கரையக்கூடாத பாஸ்பேட்டும் இருக்கின்றன.

PADDY CULTIVATION.

நெல் சாகுபடி.

நெல்லில் ஒற்றை நாற்று நடவேண்டுமானல் ஒரு ஏக்கர் பூமிக்கு 8-ஸெண்டு நிலத்தில் 8-பக்காபடி விதை விதைக்கவேண்டும். நாற்று எத்தனை தினங்களுக்குப் பின் எடுக்க வேண்டும் என்பது நெல் தினுஸைப் பொருத்தது. 5-மாத வித்தானல் 5-வாரமும், 3-மாத வித்தானல் 3-வாரமும், 6-மாதவித்தானல் 6-வாரமும் விடவேண்டும்.

நடும்போது ஸ்வல்ப நாளில் வளரும் வித்துக்களை 3-அல்லது 4-அங்குலத்திற்கு ஒரு நாற்றாக நடவேண்டும்.

நாற்றுவிட்ட எத்தனை நாட்களுக்குப் பிறகு களைபிடுங்குவது என்பதை நிலத்தின் தாரதம்யத்தின் பேரிலும், நெல் தினுஸின்பேரிலும் களைகள் உண்டாகும் தீவிரத்தை பார்த்துந்தான் நிர்ணயிக்கலாம். ஸாதாரணமாய் 25-நாட்களுக்குப் பின் 35-நாட்கள் வரையில் முதல் களை பறிக்கலாம்.

The Co-operative World.
கோவாபரேஷன் பகுதி.

A NEW TYPE OF CO-OPERATIVE SOCIETY.
ஒரு புது வகையான கோவாபரேடிவ் ஸங்கம்.

விங்காளத்தில் ஒரு புதுவகையான கோவாபரேடிவ் ஸங்கம் நடந்து வருகிறது. அந்த ஸங்கத்தின் ஏற்பாடு எப்படி என்றால் க்ராமத்தில் ஒரு பொது நெற்களஞ்சியம் ஏற்படுத்தி க்ராமவாஸிகள் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கொருதடவை கொஞ்சம் தான்யம் அந்த பொதுநெற் களஞ்சியத்தில் கொட்டி வைப்பதற்குக் கொடுக்கிறார்கள். இந்த நெற்களஞ்சியம் க்ராமத்தில் செல்வாக்குள்ள ஒரு பஞ்சாயத்தார் வசமிருந்து வருகிறது.

தான்யம் கொடுக்க முடியாதவர்கள் அதற்கு ப்ரதியாகப் பணமாகக் கொடுக்கலாம். இந்த தான்யத்தை பஞ்சகாலத்தில் தான் உபயோகிக்கிறார்களாம். ஒவ்வொருவரும் ஸ்வல்ப தான்யமே கொடுத்து வருவதால் அது அவர்களுக்கு ஒரு ச்ரமமாகத் தோன்றுவதில்லை. ஆனால் கொஞ்ச காலத்துக்கெல்லாம் அவர்களுக்கு ஸொந்தமாக ரொம்ப தான்யம் களஞ்சியத்தில் சேர்ந்து விடுகிறது. இதனால் க்ஷாம காலத்தில் அதிக வட்டி கொடுத்துக் கடன் வாங்கி நெல் வாங்கவேண்டியதில்லை. இந்த ஏற்பாடு அனுஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் அது த்ருப்தியாக நடந்து வந்திருக்கிறதென்று தெரியவருகிறது.

ECONOMIC BENEFITS OF CO-OPERATION.
கோவாபரேஷனால் உண்டாகும் பொருளாதார நன்மைகள்.

ஐரோப்பா கண்டத்திலுள்ள பல தேசங்களில் ஜனங்கள் விவஸாய வேலைகளில் கோவாபரேஷனை அனுஷ்டித்து வருகிறார்கள். இதனால் அநேக பொருளாதார ஸம்பந்தமாய்ப் பலவித நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன.

ஜெர்மெனியில் விவஸாய ஜில்லாக்களில் 2543-ஜனங்களுக்கு ஒரு ஸங்கமாக ஸுமார் 2,000 கோவாபரேடிவ் ஸங்கங்கள் இருக்கின்றன. அந்த தேசத்திலும், ப்ரான்ஸில் சில பாகங்களிலும், வட ஜர்மெனியிலும் க்ராமாந்தரத்துப் பொருளாதார விஷயங்களை யெல்லாம் கோவாபரேஷன் முறையில் நடத்தி வருகிறார்கள்.

உதாரணமாக, பணம் கடன் வாங்குதலும் கொடுத்தலும், கால்நடைத்தீவனம், விதைகள், உரங்கள், விவஸாயத்துக்கு வேண்டிய மற்ற ஸாமான்கள், இவைகளை வாங்கிப் பங்கிட்டுக் கொள்வது ; யந்த்ரங்களை பொதுவில் வாங்கி உபயோகிப்பது ; கால்நடைகள் வளர்ப்பதும் விற்பதும் ; சர்க்கரை காய்ச்சுதல், சாராயம் இறக்குதல், முதலிய கைத்தொழில்களுக்கு வேண்டிய சரக்குகள் தயார் செய்தல், கால்நடை இன்ஷூரென்ஸ், நிலங்களின் பாசனம், வடிகால் வேலைகள் ; பொலிகாளைகள், ஆட்டுக் கடாக்கள், குதிரைகள் ஆகிய இவைகளை வைத்து வளர்த்து விவஸாயிகளுக்கு உதவுதல்; ஆகிய இந்த வேலைகளெல்லாம் கோவாபரேஷன் முறையிலேயே நடத்தி வருகிறார்கள். இவைகளுக்கு ஏற்பட்ட கோவாபரேடிவ் ஸங்கங்களைத் தவிர பசுக்களைப்பரீக்ஷிக்கும் ஸங்கங்களும் ஸ்தாபித்திருக்கிறார்கள். இன்னம் சில ஸங்கங்களின் ஸிப்பந்திகள் விவஸாயிகள் சாகுபடி செய்யும் ஒவ்வொரு வகைப் பயிருக்கும் என்ன வரும்படி கிடைத்தனவென்று கணக்குப் போட்டுக் கொடுப்பதோடு மாற்றுப் பயிர் சாகுபடி செய்வது விஷயமாயும்,

விதைகள் விஷயமாயும் யோசனை சொல்லு கிறார்கள்.

இப்படிப் பொருளாதாரமான மாறுபாடு களே யன்றி ஸன்மார்க்க ஸம்பந்தமான நன் மைகளும் உண்டா யிருக்கின்றன.

அநேக ஸங்கங்கள் க்ராமத்து பப்ளிக் ஹால்கள், லைப்ரெரிகள், க்ராமத்து நர்ஸுகள் (அதாவது நோயாளிகளைப் பாதுகாக்கும் ஸ்த் ரீகள்) ப்ராவிடண்ட் பண்டுகள் முதலியவைக ளுக்குப் பணம் கொடுத்து வருகின்றன. இந்த ஸங்கங்களின் உதவியால் 458 லைப்ரெரிகள் (புஸ்தக சாலைகள்) 345 பள்ளிக்கூடங்கள், 96 ஸாதாரண ஸங்கங்கள், 23-சிறுவா ஸங் கங்கள், 24 ப்ரஸங்க ஹால்கள் க்ராமங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளே யன்றி குழந்தைகள் ஸேவிங்க்ஸ் பாங்கிகள், பரோபகார நிதிகள், கால் நடை இன்ஷூ ரென்ஸ் ஏற்பாடு முதலியவைகளும் கோவாப ரேடிவ் ஸங்கங்களின் உதவியால் ஸதாபிக்கப் பட்டிருக்கின்றன.

கோவாபரேஷனில் நிபுணராகிய ஸர் ஹோரேஸ் ப்ளங்க்கெட் சொல்லுகிறபடி, கோவாபரேஷனால் விவஸாயியின் க்ருஷித் தொழிலும், வ்யாபாரமும், ஜீவன மார்க்கமும் உயர்வடைகிறது.

நிலத்துக்காக அதிகப் பணம் செலவழிப்ப தாலும், உயர்ந்த விதையும், எருவும், கருவிக ளும், கால்நடைகளும் உபயோகிப்பதாலும், விவஸாய விஷயமாக தக்க யோசனை கிடைப்ப தாலும் விவஸாயம் உயர்வடைகிறது. சிறு முதலாளி மற்றவர்களோடு சேர்ந்து வ்யா பாரம் செய்வதால் பெரிய வ்யாபாரிக்குள்ள ஸௌகர்யங்க ளெல்லாம் கிடைக்கின்றன. கோவாபரேஷனால் பொருளாதார அபிவ்ருத் தியும் ஒற்றுமையும் ஏற்பட்டு ஜன ஸமூக வாழ்க்கை ஒழுங்கு அடைந்து ஜனங்க ளுடைய அறிவு விசால மடைவதால் அவர்க ளுடைய ஜீவன மார்க்கம் உயர்வடைகிறது.

இன்னம் கோவாபரேஷனால் கல்வியும் ஸுகாதாரமும் வ்ருத்தி யடைகிறது. ஜனங் களுக்குள் ஐக்யம் ஏற்படுகிறது. விவஸாயி களின் ப்ரதிநிதிகள் அடங்கிய ஒரு கமிட்டி ஒரு க்ராமத்திலிருக்கிறது என்பதனாலேயே கவர்ன்மெண்டுக்கும் பொதுவாய் தேசத்துக் கும் பல விதங்களில் ப்ரயோஜனம் ஏற்பட இடமேற்படுகிறது.

DISTRIBUTIVE CO-OPERATION.

கோவாபரேடிவ் விற்பனை.

ஸமீபத்தில் வெளிவந்த காமன்வீல் பத்ரி கையில் ஒரு நிருபர் கோவாபரேஷன் முறை யில் ஸாமான்கள் வாங்கி மெம்பர்களுக்கு விற் பதைப் பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார். இந்தியா முழுவதிலும் விற்பனை ஸங்கங்கள், அதாவது, மெம்பர்கள் தங்கள் உபயோகத் துக்காக ஸாமான்களை வாங்கி தங்களுக்குள் ளேயே விற்றுக்கொண்டு லாபம் அடையும் ஸங்கங்கள், 69-இருக்கின்றன. இவைகளில் சென்னை ராஜதானியில் 9-ஸங்கங்கள் தானி ருக்கின்றன. இவைகளிலும் 6-ஸங்கங்கள் தான் லாபகரமாய் நடைபெற்று வருகின்றன. மற்ற மாகாணங்களில் ஸங்கங்கள் அதிகமாக இருந்தாலும், அவைகளில் வேலை த்ருப்திகர மாக நடக்கவில்லை. பஞ்சாப்பில் 23-ஸங்கங் கள் (இவைகளுக்கு ஸ்டோர்கள் என்று பெ யர்) இருந்தாலும், இவைகள் எல்லாவற்றிலும் மொத்தம் 2,36,780-ரூபாய்க்குத்தான் ஸா மான் விற்பனையாயிருக்கிறது. சென்னை ராஜ தானியிலோ ஸங்கங்கள் குறைவாயிருந்தா லும், விற்பனை மூன் றுமடங்கா யிருக்கிறது. பம் பாயிலோ இன்னம் குறைவு. அங்கே 15-ஸங் கங்கள் இருந்தும் 46,936-ரூபாய்க்குத்தான் வ்யாபாரம் நடந்திருக்கிறது. இதனால் ஐக்ய முயற்சியில் விற்பனை செய்வதென்பது நமது

தேசத்தில் பரவவில்லையென்று நன்கு விளங்குகிறது. கோவாபரேஷன் முயற்சியானது நாணயம் கடன் கொடுக்கும் விஷயத்தில்தான் அபிவ்ருத்தி யடைந்திருக்கிறது.

தற்போது விற்பனைஸங்கங்கள் நடந்துவரும் முறையில் ஒரு ஆக்ஷேபனைசொல்வதற்கு இடமிருக்கிறது. இந்த ஸங்கங்கள்மெம்பர்களுக்கு விற்பதற்கு வேண்டியிருக்கும் சாக்குகளை ஸாதாரண வ்யாபாரியிடமிருந்து வாங்கிகொஞ்சம் லாபம்வரும்படி விற்கின்றன. அதாவது,சில்லரை வ்யாபாரி பெரிய வ்யாபாரியிடமிருந்து ஸாமான்களை ஜனங்களுக்கு விற்றால், என்ன லாபம் அடைவனோ அந்த லாபத்தைத் தான் இந்த ஸங்கங்கள் அடைகின்றன. விற்பனை ஸங்கங்களின் நோக்கம் இதுவல்ல; ஸாமான்கள் செய்கிற, அல்லது விளைபொருள்கள் பயிரிடுகிற, ஜனங்களுக்கும், அவைகளைக் கடைசியாய் உபயோகிக்கும் ஜனங்களுக்கும் நடுவிலிருந்துகொண்டு, ஸாமான்கள் விற்பனைக்காகக் கைமாறும் ஒவ்வொரு ஸமயத்திலும் லாபம் அடித்துக் கொண்டுபோகும் தரகர்களை ஒழிப்பதே இந்த ஸங்கங்களின் நோக்கமாகும். ஆகையால் ஸாமான்களை உபயோகப்படுத்தும் மெம்பர்கள் சேர்ந்து இந்த ஸங்கங்கள் ஸாமான்களை உற்பத்தி செய்யும் அல்லது விளைபொருள்களை சாகுபடி செய்யும் ஜனங்களோடு நேரில் வ்யாபாரம் செய்யவேண்டியது அவச்யமாகும்.

விவஸாயிகளுக்கு பயிரிட அவச்யம் வேண்டியிருப்பவைகளாகிய விதைகள், நாற்றுகள், எருக்கள், கால்நடைகள், விவஸாயக்கருவிகள், க்ராம கைத்தொழில்களுக்குவேண்டியிருக்கும் கருவிகள், ஆகிய இவைகளை விற்பதற்காக க்ராமங்களில் ஸங்கங்கள் ஸ்தாபிக்கவேண்டும். விவஸாயம், கைத்தொழில் ஆகிய இவைகளில் கிடைக்கும் விளைபொருள்களையும், ஸாமான்களையும், விற்பனை செய்வதற்காகத் தகுந்த இடங்களில் விற்பனைஸங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டும். இப்போதுள்ள க்ராமஸங்கங்களில் தான்யங்களை சேகரித்து வைத்துக்கொண்டு, தங்கள் மெம்பர்களுக்கும் வேண்டுமென்கிற ஸங்கங்களுக்கும் விற்கலாம். இந்த ஸங்கங்களெல்லாம் சேர்ந்து ஒரு பொது ஏஜென்ஸி ஸங்கம் ஏற்படுத்திக்கொண்டு அந்த ஸங்கத்துக்கு தங்களிடமுள்ள விளைபொருள்களை அல்லது ஸாமான்களை அனுப்பிவிடலாம். அந்த ஏஜென்ஸி ஸங்கமானது விளைபொருள்களை அல்லது ஸாமான்களை அவைகளை விலைக்குக் கேட்கும் மற்ற ஸங்கங்களுக்கு விற்பனை செய்யும். இப்படி ஒன்றுக்கொன்று அனுஸரணையாயிருந்து க்ஷீணித்துவரும் கைத்தொழில்களைக் கூட அபிவ்ருத்தி செய்து முன்னுக்குக்கொண்டு வரக்கூடும்.

இன்னும், பால், நெய் ஸப்ளை கம்பெனிகள், எருக்கள் ஸங்கங்கள், நெசவு ஸங்கங்கள் முதலிய பல ஸங்கங்களையும் ஸ்தாபிக்கலாம். இந்த ஸங்கங்களையெல்லாம் சேர்த்து ஒரு பொது ஸங்கம் ஏற்படுத்தி அந்த ஸங்கத்தைக் கொண்டு தங்கள் ஸாமான்களை விற்பனைசெய்ய ஏற்பாடு செய்து கொள்ளளாம். இந்த ஸங்கங்கள் நன்றாய் நடப்பதற்கு முக்யமான அம்சம் என்னவென்றால் மெம்பர்கள் ரொம்ப ஊக்கமெடுத்து உழைக்கவேண்டுமென்பதே.

GOVERNMENT AND CO-OPERATIVE CREDIT.

கவர்ன்மெண்டும் ஐச்ய நாணயமும்.

நாளது ஜூன்மீ 20-தேதியன்று இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியாவில் ஐக்ய நாணய ஸங்கங்களின் அபிவ்ருத்தியைப் பற்றி ஒரு தீர்மானம் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் இந்தியாவில் ஐக்ய நாணயம் ஆரம்பித்த விதமும், அதனால் படிப்பிலும் பொருளாதார நிலைமையிலும், ஜனங்களுக்கு ஏற்பட்ட நன்மைகளும், இன்னின்னவித ஸொஸைட்டிகள் ஏற்பட்டிருக்கின்றனவென்றும், அவைகளுக்கு கவர்ன்மெண்டார் எவ்வித உதவி செய்திருக்

கிறார்கள் என்றும், இன்னும் செய்யப் போகிறார்கள் என்றும், இந்த ஐக்ய நாணய விஷயத்தில் ஜில்லா உத்யோகஸ்தர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்றும், ஆகிய பல விஷயங்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஐக்ய நாணய முயற்சியின் அபி விருத்தி.

பத்து வருஷங்களுக்கு முன்னால் ஐக்ய நாணய முயற்சி என்பது அங்குமிங்கும் இந்தியாவில் ஓரோரிடத்தில தான் இருந்தது. தற்போது 6 லக்ஷம்மெம்பர்கள் அடங்கிய 12,000 ஸொஸைட்டிகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளின் மூலதனம் 5 கோடி ரூபாய்க்கு மேலாகிறது. இன்னும ஜனங்கள ஐக்ய நாணய ஸங்கங்களை "மளமள" வென்று ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் ஜனங்கள் ஐக்ய நாணய முயற்சியின நன்மைகளைத் தெரிந்துகொண்டாலொழிய, வேறு ஸங்கங்கள் ஸ்தாபிப்பதில்லை என்பதும், அநேக ஸங்கங்களை ஏற்படுத்தி அவைகளெல்லாம் நன்றாய் நடை பெறாமல் போவதைவிட, சில ஸங்கங்கள் மட்டுமே நன்றாய் நடப்பதே நல்லதென்பதும் ஸர்க்காரின் அபிப்பிராயம். இப்படிச்செய்வதால் இந்தியாவில் கோடான கோடி ஜனங்களிருக்க,ரொம்ப ஸ்வல்ப ஜனங்களுக்கு மட்டுமே ஐக்ய நாணய ஸங்கங்களின் நன்மை கிடைக்குமென்று சொல்லலாம. ஆனால் ஐக்ய நாணய ஸங்கங்களின் மெம்பர்கள் 6 லக்ஷந்தான் என்றாலும், அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இன்னும் 4 பேர்களிருக்கிறார்களாகையால், மொத்தத்தில் 30 லக்ஷம் ஜனங்கள் ஐக்ய முயற்சியின் நன்மையை அடைகிறார்களென்று சொல்லலாம். தவிர, பொதுவாய் ஐக்ய நாணய முயற்சியால் ஏற்பட்டுள்ள வட்டியிறக்கத்தையும, இன்னம் இதர நன்மைகளையும் யோஜிக்கும்போது, மொத்தம் 60 லக்ஷம் ஜனங்கள் நன்மையடைந்திருக்கிறார்கள் என்று சொல்லலாம். 20,000 விவஸாயிகளுக்கு இத்தலி தேசத்தில் 18 ஐக்ய நாணய ஸங்கங்களும், ஜெர்மனியில் 52 ஸங்கங்களுமிருக்க, இந்தியாவில் ஒரு ஸங்கந்தான் ஏற்பட்டிருக்கிறது. இது குறைவுதான் என்றாலும், பத்து வருஷங்களுள் இவ்வளவானது மெச்சத் தக்கதே யாகும்.

கவர்ன் மெண்டின் ஸம்பந்தம்.

ஐக்ய நாணய முயற்சியில் ஜனங்களே பாடுபட்டு உழைத்து வரவேண்டுமென்றும், ஸர்க்கார ஸம்பந்தமே இருக்கக் கூடாதென்றும், சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் ஒரு தேசத்திலும் ஸர்க்கார் ஸம்பந்தமில்லாமல் ஐக்ய நாணய ஸங்கங்கள் நடைபெறவில்லை. இந்தியாவில் கவர்ன்மெண்டார முதலில் ஏற்பட்டு ஒத்தாசை செய்யாம லிருந்திருந்தால், ஐக்ய நாணய முயற்சி இப்பவும் ஏற்பட்டிருக்கிறதென்றே சொல்லலாம். கவர்ன்மெண்டார் மட்டுமே மேற்படி முயற்சியை ஆரம்பித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய சக்தியுள்ளவர்களா யிருந்தார்கள். கவர்ன்மெண்டார் இந்தவிஷயத்தில் ஸம்பந்தப்பட்டிருப்பதால்தான், ஜனங்கள் அதில் நம்பிக்கை வைக்கவும், அது நடைபெறவும் கூடியதாகிறது. கவர்ன்மெண்டார் தனிக்கை செய்கிறார்களென்பதால்தான், ஜனங்கள் ஸங்கங்களை நம்புகிறார்கள். அதனால், பொது ஜனங்களுக்கு நன்மை ஏற்படுவதால் தனிக்கை செய்யும் ஸிப்பந்திகளுக்காக ஸர்க்கார் பணம் செலவழிப்பதும் ந்யாயமாகிறது. இன்னும், இந்த ஐக்ய நாணய முயற்சியில் கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர்கள் ஸம்பந்தப் படுவதால் அவர்கள் பொது ஜனங்களோடு நெருங்கிப் பழகி அதனால் வேறு விதமாகவும நன்மைகள் உண்டாகின்றன.

ஸர்க்கார் ஸம்பந்தமே இருக்கக் கூடாதென்று சில கக்ஷிகள் வாதிக்க, வேறு சிலர் இந்த விஷயத்தில் ஸர்க்கார் ச்ரத்தை காட்டுவது போதாதென்று சொல்லி வருகிறார்கள். ஐக்யநாணய முயற்சிமேல்மேலும் விருத்தியாக வேண்டுமென்றும், அதற்காக கவர்ன்மெண்டார் தங்கள் ஸிப்பந்திகளை அதிகப்படுத்த வேண்டுமென்றும், அப்படிச் செய்யாவிட்டால் இந்த முயற்சி உபாயமாய்த்தான் பரவுமென்றும், சொல்லி வருகிறார்கள். ஆனால், ஐக்ய முயற்சிகள் நிலை பெறுவதற்கு ஸங்கத்தார்கள் தாங்களே பாடுபட்டு முன்னுக்குவர வேண்டுமென்று அறியவேண்டு மாதலால், கவர்ன்மெண்டார் ஏராளமாய் ஸிப்பந்திகளை ஏற்படுத்தி, ஐக்ய நாணய கார்யங்களை நடத்துவது கூடாது. ஆகையால் கவர்ன்மெண்டார் இந்த முயற்சியில் கலந்துகொண்ட போதிலும், பட்டும் படாததுமாகத்தான் இருக்கவேண்டும். அந்த மாதிரியாய்த் தான் இது வரையிலிருந்தும் வருகிறார்கள்.

The Commercial World.

வ்யாபாரப் பகுதி.

HIDES AND SKINS TRADE.

மாட்டுத்தோல் ஆட்டுத்தோல் வ்யாபாரம்

மிஸ்டர் ஸாம்ப்ஸன் தாம் எழுதியிருக்கும் கால் நடைகளைப்பற்றிய ஆராய்ச்சியில் ஆட்டுத் தோல் மாட்டுத் தோல் வ்யாபாரத்தைப்பற்றி ஒரு குறிப்பு எழுதியிருக்கிறார். அதை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

உள்நாட்டுத் தோல் வ்யாபாரம் வெகுவாய் லப்பை ஜாதி வ்யாபாரிகள் வசமிருந்து வருகிறது. அவர்களுடைய ஏஜெண்டுகள் ஊரூராய்ப் போய் தோல்களை சேகரித்து வருகிறார்கள். வாரந்தோறும் கால் நடைச் சந்தைகள் நடக்கும் ப்ரதேசங்களில் அந்த ப்ரதேசங்களில் விற்பனைக்கு இருக்கும் தோல்களெல்லாம் கால்நடைச் சந்தைகளில் வந்து மடிகின்றன. வ்யாபாரிகளின் ஏஜெண்டுகள் ஷை கால்நடைச் சந்தைகளுக்குப் போய் தோல்களை விலைக்கு வாங்கிப்போகிறார்கள். கால்நடைச் சந்தைகளில்லாத இடங்களில் வ்யாபாரிகளின் சில்லரை ஏஜெண்டுகள் ஊரூராய்ப் போய் அங்கங்கே கிடைக்கும் தோல்களை ஸ்வல்ப கமிஷனுக்கு வாங்கி வ்யாபாரிகளுக்கு விற்கிறார்கள். இந்தத் தோல்களில் ஒருபாகம் அன்ய தேசங்களுக்கு ஏற்றுமதியாகிப் போய்விடுகிறது. மற்ற பாகம உள்நாட்டிலேயே உபயோகிக்கப்பட்டு வருகிறது. மாட்டுத் தோல் வெகுவாய்த் தண்ணீரிறைக்கும் கவலைகள் செய்வதற்குத்தான் உபயோகிக்கப்படுகிறது. இந்தக் கவலைகள் கோயம்புத்தூர் ஜில்லாவில் ரொம்ப அதிகம். அங்கே கவலைகள் செய்வதற்காக மேற்குக் கரை ப்ரதேசங்களிலிருந்து (அதாவது மலையாளம் முதலிய இடங்கள்) மாட்டுத்தோல்கள் ஏராளமாய் வந்து கால்நடைச் சந்தைகளில் விற்பனையாகின்றன. கவலைகள் உபயோகத்திலிருந்துவரும் மற்ற விடங்களிலுங்கூட கால்நடைச் சந்தைகளில் தோல் வ்யாபாரம் பலமாக நடந்து வருகிறது. ஆனால் கொஞ்சகாலமாக இரும்புச்சால்களும், நாகம் பூசின இரும்புச் சால்களும் உபயோகத்துக்கு வந்திருப்பதில் தோல் கவலைகளுக்கு க்ராக்கி குறைந்து வருகிறதென்னலாம்.

தோல் பதனிடும் சாலைகளில் செம்மறி யாட்டுத் தோலுக்கு 12 அணாமுதல் 1 ரூபாயும், வெள்ளாட்டுத் தோலுக்கு 1- ரூபாய் முதல் $1\frac{1}{2}$ ரூபாயும் விலை கொடுக்கிறார்கள். தோல்களின் விலைவாசிகள் வெகுவாய் லண்டன் விலைவாசிகளைப் பொருத்திருக்கின்றன. லண்டன் விலைகள் ஸாதகமாயிருந்தால் இவ்விடங்களிலுள்ள தோல் பதனிடுஞ் சாலைகளுக்கு லாபமும், அங்கே பாதகமாயிருந்தால் இங்கே நஷ்டமும் ஏற்படும். காலஸ்திதிக்குத் தகுந்தபடிக்கும் விலைகள் வித்யாஸப்படும். கோடைகாலத்தில் தோல்களுக்கு விலையதிகம். மழைகாலத்தில் கொல்லப்படும் ம்ருகங்களின் தோலைப் பதனிட்டால் உறுதியற்றதாயும், வெடித்தும இருக்கும். அதனால் விலை குறைவாக விற்கும.

தோல் ஏற்றுமதியானது அன்ய தேசங்களின் விலைவாசிகளைப் பொறுத்ததாயிருக்கிறது. அதற்குத் தகுந்தபடி இவ்விடத்து விலைகளும் அடிக்கடி ரொம்ப வித்யாஸப்படும். சில ஸமயம் தோலை இவ்விடங்களிலேயே பதனிடுவது லாபகரமாயிருக்கும். சில ஸமயங்களில் தோலைப்பதனிடாமலே ஏற்றுமதி செய்வது லாபமானது. மேலும இது காலஸ்திதியையும் பொறுத்திருக்கிறது. மழை நன்றாய்ப் பெய்திருந்தால் ஆடுமாடுகள் தீனிக்

குக் கஷ்டமில்லாமல் உயிரோடிருக்கக் கூடு மாகையால் அதிகத் தோல் ஏற்றுமதிக்குக் கிடைக்காது. மழை ரொம்ப குறைவாயிருந்து, தீனியகப்படுவது அரிதாயிருந்தால் ஆடுமாடுகள் ஏராளமா யிறந்துபோய் அதிகமான தோல் ஏற்றுமதிக்குக் கிடைக்கும்.

வடக்குக் கோடி ஜில்லாக்களைச் சேர்ந்த ஏஜென்ஸி ப்ரதேசங்களிலிருந்துதான் மாட்டுத்தோல் அதிகமாக ஏற்றுமதியாகிறது. 1906-முதல் 1910-ம் வாஷம் முடிய 5-வர்ஷங்களில் வர்ஷமொன்றுக்கு சராசரி 930 டன தோல் பரஹமபுரத்திலிருந்தும் விஜயநகரத்திலிருந்தும் ஏற்றுமதியா யிருக்கிறது. ஒரு மாட்டிலிருந்து கிடைக்கும தோலின் நிறை சராசரி 12-ராத்தலென்று வைத்துக்கொண்டால் வர்ஷமொன்றுக்கு 1,75,000 மாடுகள் கொல்லப்பட்டோ இறந்தோ போயிருக்கின்றன வென்று ஏற்படுகிறது.

வெளியூருக்கு ஏற்றுமதி செய்யப்படும் தோலைத் தவிர, அந்த ப்ரதேசங்களிலேயே சில பட்டணங்களில் தோல்பதனிடுந் தொழில் மும்முரமாய் நடந்து வருவதால் அங்கேயுள்ள தோல் சாலைகளிலும் ரொம்ப தோல் உபயோகிக்கப் படக் கூடும். இந்தத் தோலையும் கணக்கில் சேர்த்துக் கொண்டால் இறந்த அல்லது கொல்லப்பட்ட மாடுகளின் தொகை இன்னும் அதிகமாக இருக்கும்.

நமது ராஜதானியில் சென்னப்பட்டணத்தில் தான் தோல் பதனிடுந் தொழில் ரொம்ப ப்ரபலமாக நடந்து வருகிறது. பதனிட்ட தோலும் பதனிடாத தோலும் வெகுவாய் இந்தத் துறைமுகத்திலிருந்து தான் அதிகமாக ஏற்றுமதியாகிறது. வடஸர்க்கார் ஜில்லாக் களிலிருந்தும, டெக்கான் ஜில்லாக்களிலிருந்தும் வெளியிலனுப்பப்படும் ஆட்டுத் தோல்களில்பெரும்பாகம் சென்னப்பட்டணத்துக்கு வந்து சேருகின்றன. ஆனல் தென்ஜில்லாக்களில் கிடைக்கும் ஆட்டுத் தோல் திருச்சினப்பள்ளி, கோயம்புத்தூர், திண்டுக்கல் ஆகிய இவ்விடங்களிலேயே பதனிடப்படுகிறது. திருச்சினப்பள்ளி ஆட்டுத்தோல்பதனிடுவதில் ரொம்பவும் பெயர் போனது. அங்கே பதனிடப்படும தோல்களில் ரொம்ப மேலானவைகளை ஐரோப்பிய வர்த்தகர்கள் இங்கிலண்டுக்கு ஏற்றுமதி செய்கிருர்கள். திருச்சினப்பள்ளியில் தினம் ஒன்றுக்கு 6600 வெள்ளாட்டு, செம்மறியாட்டுத் தோல்கள் பதனிடும் சாலைகளுக்கு வருகின்றனவாம். இவைகள் வெகுவாய் திருப்பத்தூர், வாணியம்பாடி, தஞ்சாவூர்ஜில்லா, ராமனுதபுரம், மதுரை ஆகிய இவ்விடங்களிலிருந்து வருகின்றன. உள்ளூரிலிருந்து தினம் 600 தோல்கள் வருகின்றன.

ராஜதானியில் பற்பல இடங்களில் மாட்டுத் தோல் பதனிடுகிருர்கள். மாட்டுத் தோல் பதனிடுமிடங்கள் முக்பமாய் பரஹம்புரம், விஜயநகரம், ராஜமஹேந்த்ரவரம, குத்தி, பல்லாரி, வாலாஜபாத், குடியாத்தம், சேலம், ஈரோடு, கோயமபுத்தூர், திருச்சினப்பள்ளி, திண்டுக்கல் ஆகிய இவைகளாம்.

மாட்டுத் தோல் அல்லது ஆட்டுத் தோல் விற்கப்படும் விலையில் எவ்வளவு பாகம் மாடு அல்லது ஆடு வைத்திருந்தவன் அடைகிறன் என்பதை ஒருதிட்டமாய்ச் சொல்லமுடியாது. கால்நடைச் சந்தைகளும், வ்யாபார வஸதிகளும் இருக்குமிடங்களில் தோல் விலையில் நூற்றுக்கு 75-முதல் 80 பாகம் மருகங்களின ஸொந்தக்காரர்களுக்குக் கிடைக்கலாம். வ்யாபாரிகளே க்ராமங்களுக்குப்போய தோல்வாங்கும் ஊர்களில் தோல் விலையில் 50 முதல் 60 பாகந்தான் மருகங்களின் ஸொந்தக்காரர்கள் அடைகிருர்கள். இந்தவிகிதம அந்தந்த இடங்களில் வ்யாபாரத்தின் நிலைமைக்குத் தகுந்தபடி வித்யாஸமாயிருக்கும். உதாரண

மாக தென்கன்னடத்தில் ஒரு மாப்பிள்ளை வ்யாபார ஏஜெண்டு தோல் விற்கும் க்ராம வாஸிகளினிடம ஒரு தோலை 1-ரூபாய்க்கு வாங்கினால் அதை தோல் வ்யாபாரிக்கு 2-ரூபாய்க்கு விற்பான, தோல் வ்யாபாரி பதனிடுமசாலைகளுக்கு அதையே 4-ரூபாய்க்கு விற்பான். சில இடங்களில் கைக்குக்கை மாறும்போது வ்யாபாரிகள் நூற்றுக்கு 6¼ முதல் 100 வரையில் லாபம் பெறுகிறார்களாம. பொதுவாய் வ்யாபாரிகள் ரூபாய்க்கு ஓரணாமுதல் இரண்டணாவரையில் லாபமடைகிறார்கள்,

SOME NEW INDUSTRIAL CONCERNS.

சில புது கைத்தொழில் கம்பெனிகள்.

மைஸூர் கவர்ன்மெண்டார் மைஸூர் ராஜ்யத்திலுள்ள தேவனகிரி என்னுமிடத்தில பருத்திக்கொட்டையிலிருந்து எண்ணெயெடுக்கும் சாலையொன்று ஏற்படுத்தப்போகிறார்கள்.

திருவாங்கூரிலுள்ள தென்மலை யென்னுமிடத்தில் தீப்பெட்டி செய்யும் சாலையொன்று ஏற்படப்போகிறது. அந்தக் கைத்தொழிற் சாலைக்கு திருவாங்கூர் திவானாகவிருந்த திவான்பகதூர் ராஜகோபாலாசாரியார் ஸமீபத்தில் அஸ்திரவாரக்கல்லை நாட்டினார்.

இந்தத் தொழில்சாலைக்கு திருவாங்கூர் கவர்ன்மெண்டார் பலவிதத்தில் உதவி புரிவார்கள் என்று தெரியவருகிறது.

கள்ளிக்கோட்டைக்கு ஸமீபத்திலுள்ள பெரோக் என்னும் இடத்தில் மரக்கூழிலிருந்து காகிதம செய்ய ஒரு தொழிற்சாலையும், மீன்எரு தயார் செய்ய ஒரு தொழிற்சாலையும் ஸ்தாபிக்கப்படுமென்று தெரியவருகிறது.

TUTICORIN.

தூத்துக்குடி.

இந்திய ஸிலோன் இருப்புப்பாதை ஏற்படுமுன் இந்தியாவுக்கும் ஸிலோனுக்கும் வ்யாபாரம் தூத்துக்குடி மார்க்கமாய் நடந்து வந்தது. இதனால் தூத்துக்குடிப் பட்டணம் ரொம்ப அபிவ்ருத்தி யடைந்திருந்தது. தற்போது ராமேச்வரம்வழியாய் இந்தியஸிலோன் இருப்புப்பாதை ஏற்பட்டதில தூத்துக்குடியின் நிலைமை சற்று மாறுபட்டிருக்கிறது. எவ்வளவு தூரம் மாறுபட்டிருக்கிற தென்பதை 'சத்திய வேத பாது காவலனில்' ஒரு நிருபர் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

தட்டாப்பாறை டெப்போவிலிருந்து நாளைக்கு நூறுக் கணக்காய் இந்நகர்வழியாய் ப்ரயாணம் செய்து கொண்டிருந்த தோட்டத்துக் கூலிஜனங்கள் இப்போது தினமொன்றுக்குப் பத்துப் பதினைந்துக்கு மேல் வரக்கூடியதாயில்லை. சாப்பாட்டுக் கடைகளில் முக்யமானவை அநேகமாய்ப் பூட்டப்பட்டுப்போயின. நிலபலங்கள் வீடுவாசல் களின் விலை திடீரென விழுந்துவிட்டது. கிட்டங்களில் சில அடைக்கப்பட்டு வாடகை யில்லாமல் கிடக்கின்றன. பஞ்சு வ்யாபாரக் காலமாகிய இத்தருணத்தில் முதலாய்ப் பணப்புழக்கம் மத்திமமாயிருக்கின்றது. இந்நகரத்திற்குத் தண்ணீர் வஸதிபண்ணித்தரவேண்டுமென்று கொஞ்சநாளைக்கு முன்னே இருந்த நூதன கிளர்ச்சியுங்கூட இப்போது குன்றி, முனிஸிபாலிட்டியார் ஏனோதானோவென்றிருக்கின்றனா. புதுக்கட்டிடங்கள் பெரும்பான்மை கட்டப்பெறாமல் மராமத்து வேலைகளுங்கூட வெகு குறைவாய் நடந்துவருகின்றன.

நல்லகாலமாய் அங்குள்ள பஞ்சாலைகளெல்லாம் வெள்ளியங்கிரிகளைப்போலும் பஞ்சுப் போர்களைக் கண்டவிடமெல்லாம குவித்துக் கொண்டு இரவும் பகலுமகூலி ஜனங்களை வேலைவாங்கி இந்நகரின் தறபோதிய தொழிற் குறைவுதெரிய விடாமற் காத்துவருகின்றன.

BEESWAX.

தேன் மெழுகு.

மெழுகுவர்த்திகளும் பலவித மினுக்குகளும் (Polishes) செய்வதற்குத் தேன்

மெழுகு உபயோகமாகும். தேனடை அல்லது தேன் கூண்டிலிருந்து தேன் மெழுகு செய்யப்படுகிறது.

தேனடையிலிருந்து தேனை நன்றாய்ப் பிழிந்தெடுத்த பிறகு, அந்த அடையை ஜலத்தில் போட்டு செவ்வையாய்ச் சுத்தி செய்தால் அதில் ஒட்டிக் கொண்டிருக்கும் தேனும் மற்றுள்ளவைகளும் நீங்கி விடுகின்றன. அதன் பிறகு அந்த அடையை ஜலத்தில் போட்டுக் காய்ச்சினால் அதனுள்ளிருக்கும் தேனீ முட்டைகள், சிறிய குஞ்சுகள், மற்றுமுள்ள அழுக்குகள் இவைகளெல்லாம் ஒன்றாய்த் திரண்டு குழம்பாய் விடும். அதை துணியினால் வடிகட்டிவிட்டால் அசுத்தமான பதார்த்தங்களெல்லாம் துணியில் தங்கிவிடுகின்றன. பிறகு அந்த சுத்தமான மெழுக்கை யெடுத்து, அவச்யமானால் மஞ்சள் நிறமுண்டாவதற்காக மஞ்சள் பொடி கலந்து காய்ச்சலாம். நன்றாய்க் காய்ந்ததும், அதைச்சிறிது தண்ணீருள்ள பாத்ரங்களில் போட்டால் மெழுகு உருண்டையாகி விடுகிறது.

MADRAS DEPARTMENT OF INDUSTRIES.

சென்னைக் கைத்தொழில் டிபார்ட்மெண்ட்.

சென்னையில் புதிதாக கைத்தொழில் டிபார்ட்மெண்ட் ஒன்று ஸ்தாபிக்கப்போகிறார்கள். இந்த டிபார்ட்மெண்டுக்குத் தலைவராக ஒரு கைத்தொழில் டிரெக்டர் நியமிக்கப்படுவார். கைத்தொழில் டிரெக்டரின் வேலைகள் பின்வருமாறு:—

(1) இப்போதுள்ள கைத்தொழில்கள், அவைகளை அபிவ்ருத்தி செய்வது, புதுக் கைத்தொழில்களை ஏற்படுத்துவது ஆகிய இவைகளைப்பற்றித் தெரியவேண்டிய விஷயங்களை சேகரம் செய்தல்.

(2) அந்தக் கைத்தொழில்களைப்பற்றி ஆராய்ச்சிகள் செய்வதும், மற்றவர்களைக் கொண்டு ஆராய்ச்சிகள் செய்ய ஏற்பாடுசெய்வதும்.

(3) தாம் செய்து வந்த ஆராய்ச்சிகளின் பலன்களை சென்னையிலுள்ள கைத்தொழிலாளிகளுக்குத் தெரிவித்து, அந்தப்பலன்களை யொட்டிச் செய்யப்படும் கைத்தொழில் முயற்சிகளுக்கு கைத்தொழிலாளிகளின் கூட்டுறவை ஸம்பாதித்தல்.

(4) கைத்தொழில்கள் கற்கும் மாணவர்களை மேற்பார்வை பார்ப்பது.

(5) கவர்னமெண்டார் கைத்தொழில்கள் ஸம்பந்தமாக ஏதாவது செய்ய வேண்டியிருந்தால் அவைகள் விஷயமாக யோசனை சொல்லுதல்.

BUSINESS ENTERPRISE IN INDIA.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்

இந்தியாவில் சென்ற பிப்ரவரி மாஸத்தில் அடியில் கண்டவிவரப்படி 24-கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

4	பாங்கி லேவாதேவி கம்பெனிகள்	... 5,69,970
5	இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள்	... 1,30,000
1	கப்பல் ஓட்டும் கம்பெனி	... 24,00,000
1	ரெயில்வே கம்பெனி	... 50,00,000
1	அச்சிட்டு ப்ரசுரம் செய்யும் கம்பெனி	... 20,000
7	வ்யாபாரக் கம்பெனிகள் (மேலேசொன்னவை தவிர)	... 10,05,000
1	பருத்திமில் கம்பெனி	... 9,00,000
1	தேயிலைத் தோட்டக் கம்பெனி	... 1,50,000
1	கட்டிடக் கம்பெனி	... 15,15,000
2	கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர)	... 56,00,000
24		1,72,89,970

The Educational World.

வித்யாவிஷயப் பகுதி.

HOW TO COMPUTE INTEREST.

வட்டி கணக்கிடுதல்.

ஸாதாரண வட்டிக் கணக்குகளில், அதாவது ஒரு தொகை கடன் வாங்கிக்கொண்டு ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு முதலையும் வட்டியையும் சேர்த்துக் கொடுப்பதாகச் சொல்லும் கடன் கணக்குகளில், எவ்வளவு வட்டி செலுத்தப்படுகிறதென்பது கடன் வாங்குகிறவர்களுக்கும், கடன் கொடுக்கிறவர்களுக்கும் நன்றாய்த் தெரியும். இந்தமாதிரி ஸுலபமான கணக்குகள்தான் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் கடன் வாங்கின தொகையையும் அதற்கேற்பட்ட வட்டித் தொகையையும் சேர்த்து குறிப்பிட்ட காலங்களில் தவணைகளாகச் செலுத்தி வந்து, முதலையும், வட்டியையும் தீர்த்துவிடுவதென்று பேசிக்கொள்ளும் கடன் ஏற்பாட்டில், எவ்வளவு வட்டி செலுத்துகிறார்கள் என்பது கடன் வாங்குபவர்களில பலருக்குத் தெரியவே தெரியாது. இந்தமாதிரி வட்டி கணக்குகள் வெகுவாய்ப் பாடசாலைகளில் கற்பிக்கப்படுவதுமில்லை. பாடசாலைகளில் கற்பிக்கப்படும் விஷயங்கள் தினஸரிக் காரியங்களுக்கு உபயோகப்படும்படி இருக்கவேண்டியது நல்லதாகையால் இந்தமாதிரிக் கணக்குகளையும் பாடசாலைகளில் கற்பித்து வருவது நல்லது.

கடன் வாங்க விரும்பும் ஒருவர் லேவாதேவிக் கடையொன்றில் போய் 100 ரூபாய் கடன் வாங்குகிறார் என்று வைத்துக்கொள்வோம. நூறு ரூபாயையும் மாஸம 20 ரூபாய் விதம் ஆறுமாஸம செலுத்திக் கடனைத் தீர்த்துவிடுவதாகப் பேசுகிறார் என்றும் வைத்துக்கொள்வோம். பேசினபடியே கடனைத் திருப்பிக் கொடுத்தால் கடன் வாங்குகிறவர் தாம் வாங்கின கடன் தொகையாகிய 100 ரூபாய்க்கு என்ன வட்டி செலுத்துகிறார்? புத்திசாலியாயிருப்பவர்கள்கூட நூற்றுக்கு 20 ரூபாய்க்கு மேல் அதிகமாக வட்டி செலுத்தப்படுகிறதென்று மாத்திரம் சொல்லுவார்களே தவிர, திட்டமாய் இன்னவட்டி செலுத்தப்படுகிறதென்பதைக் கணக்கிட்டுப் பார்த்து அறிந்துகொள்வது அபூர்வம்.

வட்டியென்பது கடனைக் கொண்ட தொகையை கடன் வாங்கினவர் உபயோகிப்பதற்காக அவர் கடன் கொடுத்தவருக்குக் கொடுக்கும் வாடகை அல்லது கூலியாகும். மேலே சொன்ன கணக்கில் கடன் வாங்கினவர் தாம் வாங்கின கடனில் எவ்வளவு பாகம் எத்தனை மாஸம் தம்மிடம் வைத்துக்கொண்டிருக்கிறாரென்றும், அதற்காக அவர் எவ்வளவு வாடகை அல்லது வட்டி கொடுக்கிறாரென்றும் பார்ப்போம்.

முதல் மாஸத்தில் அவர் 100 ரூபாயையும் வைத்துக்கொண்டிருக்கிறார். இந்தத் தொகைக்கு அவர் முதல் மாஸத்துக்கு ஒரு மாஸத்துக்குள்ள வட்டி கொடுக்கவேண்டும். பிறகு அவர் 20-ரூபாய் கொடுத்து விடுகிறார். பாக்கியுள்ள 80-ரூபாய்க்கும இரண்டாவது மாஸத்துக்கு ஒரு மாஸத்துக்குள்ள வட்டி கொடுக்க வேண்டியிருக்கும், மறுபடியும் 20-ரூபாய் திருப்பிக் கொடுப்பதில் அஸல் தொகை 60 ரூபாயாகிறது. இதற்கும் 3-ம் மாஸத்துக்கு 1-மாஸத்துக்குள்ள வட்டி கொடுக்கவேண்டும். 4-ம் மாஸத்தில் அஸல் 40-ரூபாயாகிறது. இதற்கும் 1-மாஸத்துக்குள்ள வட்டி கொடுக்க வேண்டும். 5-ம் மாஸத்தில் அஸல் 20-ரூபாய் இதற்கும் 1-மாஸத்துக்குள்ள வட்டி கொடுக்க

வேண்டும். ஆறும் மாஸத்தில் அஸல் தீர்ந்து போய்விடுவதால் வட்டி கொடுக்கவேண்டியதில்லை. வட்டிக்காக 20-ரூபாய் கொடுக்கப்படுகிறது. நியாயமாய் எந்தத் தொகைகளுக்கு வட்டி கொடுக்கவேண்டு மென்றால்

100	ரூபாய்க்கு	1	மாஸத்துக்கும்
80	,,	1	,,
60	,,	1	,,
40	,,	1	,,
20	,,	1	,,

ஆக 300-ரூபாய்க்கு 1-மாஸத்துக்கு வட்டி கொடுக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. 300-ரூபாய்க்கு 1 மாஸத்துக்கு வட்டியாக 20-ரூபாய் செலுத்தப்படுகிறது ஆகவே இதன்படி 100-ரூபாய்க்கு ஒரு வர்ஷத்துக்கு 80-ரூபாய் வட்டியாகிறது.

இதே கணக்கை இன்னொரு வழியில் செய்து காட்டுகிறோம். வட்டியென்பது கடனாகக் கொண்ட தொகைக்கு கொடுக்கும வாடகை யென்று ஏற்கனவே சொன்னோம். 100-ரூபாய்க்குப் பதிலாக 100-நாற்காலிகள் வாடகைக்கு வாங்குகிறோமென்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் நாம் உபயோகத்தில் வைத்துக்கொண்டிருக்கும் நாற்காலிகளுக்குத் தானே வாடகை கொடுக்கவேண்டும்? திருப்பிக் கொடுத்துவிட்ட நாற்காலிகளுக்கும் வாடகை கொடுக்கவேண்டியது அவச்யமில்லை யல்லவா? அதேபோல நாம கடனில் ஒரு பாகத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டால் நாம் திருப்பிக் கொடுத்துவிட்ட தொகைக்கு வட்டி கொடுக்கவேண்டியதில்லை. கடனை மாஸாமாஸம் ஒரு தொகையாக திருப்பிக் கொடுக்காமல் கடைசியில் எல்லாவற்றையும் கொடுப்பதாயிருந்தால் கடன் கொடுத்தவருக்கு 100-ரூபாய்க்கு 6-மாஸத்துக்கு வட்டியுண்டு; அல்லது 600-ரூபாய்க்கு 1-மாஸத்துக்கு வட்டியுண்டு என்றும் சொல்லலாம்.

ஆனால் கடன் வாங்கினவர் மாஸாமாஸம் ஒரு பாகம திருப்பிக் கொடுத்துவிடுவதால் திருப்பிக் கொடுத்த தொகைக்கு வட்டி கேட்பது கூடாது. முதல் மாஸம் 20-ரூபாய் திருப்பிக் கொடுப்பதால் அதற்குப் பிறகு அந்த 20-ரூபாய்க்கு 5-மாஸத்துக்கு கடன் வாங்கினவன் வட்டி கொடுக்கவேண்டியதில்லை. அதேமாதிரி

20	ரூபாய்க்கு	4	மாஸத்துக்கும்,
20	,,	3	,,
20	,,	2	,,
20	,,	1	,,

அவர் வட்டி கொடுக்க வேண்டியதில்லை. அதாவது 20-ரூபாய்க்கு 15-மாஸத்துக்கு அல்லது 300-ரூபாய்க்கு 1-மாஸத்துக்கு வட்டி கொடுக்கவேண்டியதில்லை.

இதுபோக கடன் கொடுத்தவருக்கு 300-ரூபாய்க்கு 1-மாஸத்துக்குள்ள வட்டிதான் உண்டென்று ஏற்படுகிறது. இதற்கு 20-ரூபாய் வட்டியாகக் கொடுத்திருப்பதால், இது 100-க்கு வர்ஷத்துக்கு 80-ரூபாயாகிறது.

வாங்கின கடனை மாஸாமாஸம் ஒழுங்காய்க் கொடுக்காமல் ஒழுங்கு தப்பிக் கொடுத்தாலும் வட்டியில் வித்யாஸம் ஏற்படுவதில்லை. இந்த ஏற்பாட்டில் வட்டி கண்டுபிடிக்கவேண்டுமானால் ஒருதடவை கடனைத் திருப்பிக் கொடுத்த தேதியிலிருந்து மற்றதடவைக் கொடுத்த தேதிவரையில் கணக்கிட்டு அந்தக் காலத்தில் எத்தனை ரூபாய் உபயோகிக்கப்பட்டதென்று கணக்கிட்டுப் பார்த்து வட்டி கண்டுபிடிக்க வேண்டும்.

ஒருவர் ஜனவரி௴ 1-தேதியன்று 100-ரூபாய் கடன் வாங்குகிறார். பிப்ரவரி௴ 7-தேதியன்று 25-ரூபாயும், மார்ச்சுமாஸம் 24-தேதியன்று 25-ரூபாயும், மே மாஸம் 4-தேதியன்று 50-ரூபாயும், மே மாஸம் 7-தேதியன்று 20-ரூபாயுமாகத் திருப்பிக் கொடுக்

கிறார். இவர் வாங்கின தொகைக்குக் கொடுத்த வட்டி எவ்வளவு?

ஜனவரிமீ 1-தேதி முதல் பிப்ரவரிமீ 7-தேதி வரையில் 37-நாள்;

பிப்ரவரிமீ 7-தேதி முதல் மார்ச்சுமீ 24-தேதி வரையில் 45-நாள்;

மார்ச்சுமீ 24-தேதி முதல் மே மாஸம் 4-தேதி வரையில் 41-நாள்;

மேமீ 4-தேதி முதல் மே மாஸம் 27-தேதி வரையில் 23-நாள்;

இவற்றில், முதல் 37-நாள் கடன் வாங்கினவரிடம் 100-ரூபாயிருந்தது. அதாவது 37-நாளுக்கு 100-ரூபாய்க்கு வட்டி கொடுக்க வேண்டும்; அல்லது 1-நாளுக்கு 3700-ரூபாய்க்கு வட்டி கொடுக்கவேண்டுமென்று சொன்னாலும் இரண்டிற்கும் வித்யாஸமில்லை.

பிப்ரவரிமீ 7-தேதியன்று 25-ரூபாய் திருப்பிக் கொடுத்துவிட்டதால், அடுத்த 45-நாளுக்கு 75-ரூபாய்க்கு வட்டி கொடுக்கவேண்டும். அதாவது 1-நாளுக்கு 3375-ரூபாய்க்கு வட்டி கொடுக்கவேண்டும்.

மார்ச்சுமீ 24-தேதி மறுபடியும் 25-ரூபாய் கொடுத்துவிட்டதால் அதற்கடுத்த 41-நாள்களுக்கு 50-ரூபாய்க்கு வட்டி அதாவது 1-நாளுக்கு 2050-ரூபாய்க்கு வட்டி கொடுக்கவேண்டும்.

மே மாஸம் 4-தேதியன்று 50-ரூபாய் கொடுத்துவிட்டதால் கடனெல்லாம் அடைபட்டுப் போகிறது. பிறகு மே மாஸம் 27-தேதியன்று வட்டிக்காக 20-ரூபாய் செலுத்துகிறார். மேலே சொன்ன கணக்குப்படி 1-நாளைக்கு 9125-ரூபாய்க்கு வட்டி செலுத்த வேண்டும். அதாவது 1 வர்ஷத்துக்கு 25-ரூபாய்க்கு வட்டி செலுத்தவேண்டுமென்று ஏற்பட்டது. இதற்காக 20-ரூபாய் செலுத்தப்படுகிறது. ஆகவே 100-ரூபாய்க்கு 1-வர்ஷத்துக்கு 80-ரூபாய் வட்டியென்று ஏற்படுகிறது.

ஆகவே தவணைக் கடன்கள் வாங்குகிறவர்கள் செலுத்தும் வட்டி விகிதம் கொஞ்சமாயிருப்பதாகத் தோன்றினாலும், உண்மையில் ரொம்ப அதிகமென்பது நன்றாய் விளங்குகிறது.

EXCURSION.

வெளி ப்ரயாணம்.

இதைப்பற்றி 'விவேகபோதினி'யின் ஸமீபத்து ஸஞ்சிகை யொன்றில் ஒரு வ்யாஸம் வெளிவந்திருக்கிறது. வெளி ப்ரயாணத்தை வெளிப்பாடம் என்றும் சொல்லலாம். இது பாடசாலைக் கட்டிடத்தில் போதிக்க முடியாதவைகளை போதிக்கவும்,பாடசாலைகளில் போதித்து வரும் விஷயங்களை நிதர்சனமாகக் காட்டி மனவில் பதியச் செய்வதற்கும், உலகஸ்ருஷ்டியை கவனித்து உற்று நோக்கும் சக்தியை வ்ருத்தி செய்வதற்கும் ஏற்பட்ட முறையாகும்.

இது இரண்டு வகைப்படும். ஒன்று பாடசாலை நேரங்களில் நடந்துவரும் பாடங்களை விளக்கிக் காட்டுவதற்காக பிள்ளைகளை வெளியே அழைத்துச் செல்லுதல்,—உதாரணமாக தபாலாபீஸைப்பற்றிப் பாடம் நடத்தும்போது தபாலாபீஸுக்குப் போவதும், பூகோளப் பெயர்களைப் பற்றி போதிக்கும்போது ஆறு முதலியவைகளுக்குப் போவதும், நெசவைப்பற்றிக் கற்பிக்கும்போது பஞ்சு நூற்கும் யந்த்ரசாலைக்கும் தறிசாலைக்கும் போவதுமாம்.

இரண்டாவது, பாடசாலையிலிருந்து வெளியிடங்களுக்குப் போக இஷ்டப்படும் குழந்தைகள் எல்லோரும் உபாத்யாயர்களுடன் முன்னால் தெரிந்தெடுக்கப்பட்ட ஓரிடத்துக்குப் போய் அங்கே ஒன்று அல்லது பல நாள்கள் தங்கியிருந்து அவ்விடத்திலுள்ளவைகளைப் பற்றியறிதல்.

வெளி ப்ரயாணத்தில் பிள்ளைகள் போக வேண்டிய இடத்தைப் பற்றியும், அங்கே அவர்

கள் கற்றறியவேண்டிய விஷயத்தைப் பற்றியும் உபாத்யாயர் நன்ருய் முன்னுடியே அறிந்திருக்க வேண்டும். தாம் கற்பிக்கப் போகும் விஷயங்களை எப்படி போதிப்பது என்பதை முன்னுடியே யோசித்து வைத்திருக்கவேண்டும். வெளிப்ரயாணம் முடிந்து பாடசாலைக்கு வந்த பிறகு வெளி ப்ரயாணத்தைப்பற்றி பிள்ளைகளை வ்யாஸம் எழுதச் சொல்லவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பல தடவை போய்ப் பார்ப்பதால் கவனிக்கும் சக்தி அபிவ்ருத்தி யடைவதோடு விஷய ஞானத்தின் அபிவ்ருத்திக்கும் இடம் ஏற்படும். உதாரணமாக தோட்டம், குளம், ஆறு முதலியவைகளை வர்ஷத்தின் பல பருவங்களில் கவனிப்பது மிகவும் நல்லது.

இரண்டாவது வகையாகிய வெளியூர்களுக்குப் போவது இங்லண்டில்தான் அதிகமாக அனுஸரிக்கப்பட்டு வருகிறது. பெற்ருேர்களின் அனுமதியின்பேல் உபாத்யாயர்கள் பிள்ளைகளை யழைத்துக்கொண்டு ஓரிடத்துக்குப் போய் கூடாரங்களில் ஒன்று அல்லது பல நாட்கள் தங்கியிருந்து அவ்விடத்திலுள்ள இயற்கைப் பொருள்கள், பூகோள விஷயங்கள், கணித ஸம்பந்தமான விஷயங்கள் முதலியவைகளை போதிப்பார்கள். இந்த மாதிரி வெளி ப்ரயாணத்தில் 15-வயஸுக்கு மேற்பட்ட பிள்ளைகளைத்தான அழைத்துப் போகலாம. இந்த வெளி ப்ரயாணங்களில் சிறுவர்கள் தங்கள் பாடசாலை மயூஸியத்துக்கு வேண்டிய பொருள்களை சேர்த்துக் கொள்ளலாம்.

BEHAVIOUR OF PUPILS IN CLASS ROOM.

வகுப்பில் மாணுக்கர்களின் நடவடிக்கை.

மிஸ்டர் பி. வி. வ்யாஸராவ் எழுதுகிருர். உபாத்யாயர்கள் பாடங்களை நடத்தும்போது பிள்ளைகளை பாடத்தை வாசிக்கச் சொல்வதுண்டு. பிள்ளைகள் நின்று வாசிக்கும்போது சிலர் இடுப்பு ஒடிந்தவர்களைப்போல் அசைந்துகொண்டும், தலையைச் சொரிந்து கொண்டும், கால்களைச் சொரிந்துகொண்டும, தலையை ஆட்டிக்கொண்டும், ஒரு கால் மடக்கிக்கொண்டும், இன்னும் இவைகளைப்போல் பல விதமான சேஷ்டைகளைச் செய்துகொண்டும் இருப்பதுண்டு. இவைகளை அப்போதைக் கப்போது கண்டித்து நிறுத்தவேண்டும்.

புஸ்தகங்களைப் பிடிக்கும்போது புஸ்தகத்தின் அடிப்புறத்தை இடதுகைப் பெருவிரலினுல் அழுத்திப்பிடித்து வருவதினுல் அந்த பாகத்தில் அழுக்காகியும் வியர்வை பட்டும் புஸ்தகங்கள் கிழிந்து போகின்றன. இதை உபாத்யாயர்கள் கவனித்து புஸ்தகத்தின் மேல் புறமாக பிடித்து வரும்படியாயும், ஒவ்வொரு மாணுக்கனும் தன்னுடைய புஸ்தகங்களை எப்பொழுதும் சுத்தமாய் வைத்திருக்கும்படியாயும செய்யவேண்டும்.

வகுப்பில் உட்கார்ந்திருக்கும்போது சிலர் நகங்களைப் பல்லால் கடித்துக்கொண்டும், வாயில் பாக்கு முதலானவைகளில் எதையாவது போட்டு மென்றுகொண்டும், கொட்டைவாங்கிக்கொண்டும் இருப்பதுண்டு. இவைகளைக் கண்டிக்கவேண்டும்.

ஸ்லேட்பலகைகளில் கணக்குகளைப்போட்டு துடைக்கும்போது எச்சில் துப்பித் துடைப்பதுண்டு. மேலும், காபி எழுதும்போது தலையை அசைத்துக்கொண்டும், உதட்டைக் கடித்துக்கொண்டும், இன்னும் என்னென்ன சேஷ்டைகளைச் செய்வார்களோ, அதே சேஷ்டைகளை கணக்குகள் போடும்போதும செய்துகொண்டும, ஸ்லேட் பென்ஸிலை சரியாய் பிடிக்கத்தெரியாமல் 'தாறுமாருமாய்' பிடித்துக்கொண்டு எழுதுவதும் வழக்கம். இக்குறைகளை யெல்லாம் சீர்திருத்தவேண்டும்.

The Legal World.

வ்யவஹாரப் பகுதி.

SALE OR MORTGAGE ?

விற்பனையா அடமானமா ?

• வாதிகளின் தகப்பனர் க்ரய சாஸன பத்ரமென்ற ஒரு பத்ரத்தை எழுதி வ்யாஜ்யஸொத்துக்களை ப்ரதிவாதிக்கு சாஸனம் செய்தார். அதன்பிறகு இரண்டுநாள் கழித்து ப்ரதிவாதி, வாதிகளின் தகப்பனர் ஆறுவது வர்ஷக்கடைசியில் கடன்வாங்காமல் ஸொந்த ஸம்பாத்யத்திலிருந்து விற்பனைத் தொகையைத் திருப்பிக் கொடுத்துவிட்டால் வ்யாஜ்ய ஸொத்தை வாதிகளின் தகப்பனருக்குத் திருப்பிக் கொடுத்துவிடுவதாய், முதலில் சொன்ன பத்ரத்திற்கு கௌண்டர் பார்ட் என்னும் எதிரிடைப் பத்ரமென்று சொல்லி வேறொரு பத்ரம் ஒன்றை எழுதிக்கொடுத்தார். இந்த இரண்டு பத்ரங்களும் ஒரே தினத்தில் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

இரண்டாவது பத்ரத்தில் சொல்லியிருக்கும் 6-வர்ஷத் தவணை முடிந்து 1½-வர்ஷமானபிறகு வாதிகள், ஷை இரண்டு பத்ரங்களாலும் வ்யாஜ்ய நிலங்கள் விற்றுவிடுவதற்கு நிபந்தனைகளுடன். அடமானம் செய்யப்பட்டிருக்கின்றன வென்று சொல்லி அடமானத்தைத் திருப்புவதற்கு வ்யாஜ்யம் போட்டார்கள்.

கீழ்க்கோர்ட்டார்கள் இரண்டு பத்ரங்களும் சேர்ந்து ஒரு நடவடிக்கையாகா தென்றும், முதல் பத்ரம் சுத்தக்ரயசாஸனமாகுமென்றும், இரண்டாவது பத்ரமானது வாதிகளின் தகப்பனர் மறுபடியும் வ்யாஜ்ய ஸொத்தை விலைக்கு வாங்கிக் கொள்வதற்குச் செய்துகொண்ட உடன்படிக்கை யென்றும், இந்த இரண்டாவது பத்ரம் 6-வர்ஷந்தான் செல்லக்கூடியதென்றும், அது விற்றுவிடுவதற்கு உடன்படிக்கை செய்து கொண்ட அடமான ஏற்பாடு ஆகாதென்றும் சொல்லி வ்யாஜ்யத்தைத் தள்ளிவிட்டார்கள். அதன் மேல் வாதிகள் ஹைகோர்ட்டுக்கு அப்பீல்செய்தார்கள். ஹைக்கோர்ட்டார் பின்வருமாறு தீர்ப்புச்சொன்னார்கள்.

இரண்டு பத்ரங்களையும் ஒரேபத்ரமாக பாவிக்கவேண்டும். அப்படிப் பார்த்தால் அந்த நடவடிக்கையானது விற்பதற்கு நிபந்தனைகளுள்ள அடமான ஏற்பாடாகும். ஆகையால் வாதிகளுக்கு அடமானத்தைத் திருப்புவதற்கு பாத்யதையுண்டு.

இரண்டு பத்ரங்களிலுமுள்ள நிபந்தனைகள் ஒரே பத்ரத்தில் எழுதக்கூடியவைகளாக இருக்க, அவைகளை இரண்டு பத்ரங்களில் எழுதியிருந்து, அதை எழுதிக்கொடுத்த பார்ட்டிகள் அவைகளில் காட்டியுள்ள நடவடிக்கைகளை ஒரே நடவடிக்கையாகக் கொள்ள வேண்டுமென்று எண்ணியிருந்ததாக ஊகிக்க இடமிருந்தால், இரண்டு பத்ரங்களெழுதினதினுலேயே, அவை இரண்டும் ஒரே நடவடிக்கையாக மாட்டா என்று சொல்வதற்கில்லை.

இரண்டு பத்ரங்களும் சேர்ந்து ஒரே நடவடிக்கை யாகுமா, அல்லது தனித்தனி நடவடிக்கைகளா, என்பதை, அந்தப் பத்ரங்களைப் பார்த்து அவைகளின் தாத்பர்யங்களின்னவென்பதையும், அவை எழுதப்பட்ட காலங்களிலிருந்த ஸந்தர்ப்பங்களையும் கவனித்து நிச்சயிக்க வேண்டும். பார்ட்டிகள் பத்ரங்களிலுபயோகிக்கப்பட்டிருக்கும்வார்த்தைகளுக்கு இன்ன தாத்பர்யம் கொண்டிருந்தார்களென்பதற்கு வாய்மொழியான ஸாக்ஷ்யம் ஒன்றையும் ஏற்றுக்கொள்வது கூடாது.

ஒரேகாலத்தில் அல்லது கிட்டத்தட்ட அதேகாலத்தில் எழுதப்பட்ட பத்ரங்களில்

ஒன்றை மற்ற பத்ரத்தின் எதிரிடை யென்று எழுதியிருந்தால் இரண்டுபத்ரங்களும் சேர்ந்து ஒரே நடவடிக்கை யாவதாகக்கொண்டு இரண்டையும் சேர்த்து கவனிக்க வேண்டும்.

1-லா வீக்லி 80.

MINOR WIDOW AND HUSBAND'S DEBT.

மைனர் விதவையும் புருஷன் பட்டிருந்த கடனும்.

ஒரு ஜட்ஜ்மெண்ட்டெட்டர்,(Judgment debtor) அதாவது கடன் வாங்கியிருந்து கோர்ட்டால் கடனைத் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புக் கொடுக்கப்பட்டிருந்த ஒருவர் தீர்ப்பு சொன்னதற்குப் பிறகு இறந்து போய் விட்டார். அதன்மேல் நிறைவேற்று நடவடிக்கையில் அந்த ஜெட்ஜ்மெண்ட் டெடரின் இரண்டு விதவைகளையும் அவருடைய லீகல் ரெப்ரெஸெண்டடிவ்வாக சேர்த்து நடவடிக்கை நடந்துவந்தது. விதவைகளில்ஒருத்தி மைனராயிருந்தாள். மற்றவள் தனக்குள்ள பாத்யதையை ஒரு அன்யருக்குப் பராதீனம்செய்து விட்டாள். மைனர் விதவை மேஜராக இருந்தால் எப்படி நடக்குமோ அப்படி நிறைவேற்று நடவடிக்கைகள் நடந்துவந்து ஜட்ஜ்மெண்ட் டெடருடைய ஸொத்துக்கள் கோர்ட்டில் ஏலத்தில் விற்கப்பட்டன. ஜட்ஜ்மெண்ட் க்ரெடிடர் அதாவது கடன் கொடுத்து கடனுக்காக கோர்ட்டில் தீர்ப்பு வாங்கியிருப்பவருக்கும், கோர்ட் ஏலத்தில் ஸொத்தை வாங்கினவருக்கும், இரண்டு விதவைகளில் ஒருத்தி மைனரென்பதும், இன்னொருத்தி தனது பாத்யதையைப் ப்ராதீனம் செய்திருந்தாள் என்பதும் தெரியும். அப்படியானால் அந்த கோர்ட் ஏலவிற்பனை செல்லாது. மைனர் விதவை ஸொத்தில் தனக்குச் சேரவேண்டிய பாகத்துக்கு வ்யாஜ்யம்போட அவளுக்கு பாத்யதையுண்டு. லிமிடேஷன் ஆக்ட் 12-வது ஸெக்ஷனும் 166-ஸெக்ஷனும் இந்தக் கேஸுக்கு ஏற்கமாட்டா.-மதராஸ் ஹைகோர்ட், 1912-ஹு எஸ். எ. 1124.

IMPROVEMENTS ON LAND.

நிலத்தில் சீர்திருத்தங்கள்.

வாதி மைனராயிருந்தபோது அவருடைய கார்டியனாகவிருந்த அவர் தாயார் அவருடைய நிலங்களில் சிலவற்றை ப்ரதிவாதிக்கு விற்பனை செய்தார். வாதி மேஜரான பிறகு அந்த விற்பனையை ரத்துசெய்யும்படி வ்யாஜ்யம் போட்டார். கீழ்க்கோர்ட்டார் தாயார் நிலத்தை விற்பனை செய்வதற்கு யாதொரு அவச்யமும் ஏற்படவில்லை யென்று சொல்லி விற்பனையை ரத்து செய்து விட்டார்கள். ப்ரதிவாதி வ்யாஜ்ய நிலங்களில் எருவிட்டு அவைகளை மேடு பள்ளமில்லாமல் நிரவிவிட்ட செலவை ஒத்துக் கொடுக்க வேண்டுமென்று வாதிமேல் வ்யாஜ்யம் போட்டார். இது ஹைகோர்ட்டுக்கு அப்பீலுக்கு வந்ததில், ஹைகோர்டார், உழுதுபயிரிட்டு ஸாகுபடிசெய்வதில், ஸாதாரணமாய் எருவிடுவதற்கும், நிலத்தை மேடுபள்ளமில்லாமல் நிரவி விடுவதற்கும் பணம்செலவழித்தால் அது நிலத்தில் சீர்திருத்தங்கள் செய்ததாகாதென்றும், ஆகையால் அதை வாதி ஒத்துக் கொடுக்கவேண்டியதில்லை யென்றும் தீர்ப்பு செய்தார்கள்.

1. லா வீக்லி. 371.

FALSE DOCUMENT.

பொய்ப் பத்ரம்.

ஒரு பத்ரம் ஒரு குறிப்பிட்ட தேதியில் எழுதப்பட்டதாக அதில் எழுதப்பட்டிருந்தது. அதில் ஒட்டப்பட்டிருந்த ஒருவித ஸ்டாம்பு அந்தத் தேதியில் விற்பனைக்கு வரவில்லை. அப்படியானால் அந்தப் பத்ரம் ஒரு பொய்ப் பத்ரமாகும். அந்தப் பத்ரம் அதில் கண்டிருக்கும் நடவடிக்கைகளை பாதிப்பதாயிருந்து ஒரு பொய் பாத்யத்துக்கு ஒரு ஆதாரமாக அதைக்கொண்டு வந்தால் அப்படிச் செய்தது போர்ஜரியுமாகும்.

SOLE OCCUPATION OF JOINT LAND.

பொது நிலத்தை தனியாய் அனுபவிப்பது.

வாதிகளும் ப்ரதிவாதிகளும் பொதுவான ஸொத்தை தங்களுக்குள் பாகம் செய்யாமல் அந்த ஸொத்தின் சில பாகங்களை தனித்தனியே அனுபவித்து வந்தார்கள். அந்த ஸொத்தில் ஒரு பாகம் மாத்ரம் ஜலம் தங்கி சதுப்பு நிலமாயிருந்ததால் அதை மீன் பிடிப்பவனுக்குக் குத்தகைக்கு விட்டு அதில் வரும் வரும்படியை தங்களுக்குள் பாகம் செய்து கொண்டு வந்தார்கள். பிறகு அந்தச் சதுப்பு நிலத்தில் ஒருபாகம் தண்ணீர் வற்றி ஸாகுபடிக்கேற்ற நிலமாக மாறிற்று. உடனே ப்ரதிவாதிகள் அந்த பாகத்தைக் கைப்பற்றிக் கொண்டு அதில் குடிகளை ஏற்படுத்தி அவர்களிடமிருந்து குத்தகை வாங்கிக்கொள்ளலானார்கள். அதாவது ப்ரதிவாதிகள் மற்றவர்களுக்கு விரோதமாக அனுபவிக்கலானார்கள். அதன்மேல் வாதிகள் ஸாகுபடி நிலமாக மாறின பாகத்தை எல்லாரும் பொதுவில் அனுபவிக்க பாத்யதை ஏற்படவேண்டுமென்று வ்யாஜ்யம் போட்டார்கள்.

கோர்ட்டின் தீர்மானம்:—நிலத்தை பாகம் செய்வதற்கு வ்யாஜ்யம் போடாமலே நிலத்தை பொதுவில் அனுபவிக்க வாதிகளுக்கு பாத்யமுண்டு. பார்ட்டிகள் பொது ஸொத்தில் ஒரு பாகத்தைப் பொதுவிலும் வேறு பாகங்களைத் தனியாயும் அனுபவித்துவர ஸம்மதப்பட்டால் அந்த நிலைமையை அப்படியேயிருக்கும்படி விட்டுவிட வேண்டும். எந்தப் பார்ட்டிக்காவது இந்த ஏற்பாட்டில் த்ருப்தியில்லா விட்டால் அவர் ஸொத்தை பாகம் செய்து கொள்ள வ்யாஜ்யம் போட்டுக்கொள்ள வேண்டும்.

18 கல்கத்தா வீக்லீ நோட்ஸ் 609.

POWER OF MANAGING MEMBER.

மானேஜ்செய்யும் மெம்பரின் அதிகாரங்கள்.

ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்தவராய் அந்தக் குடும்பத்தை மானேஜ்செய்து வரும் ஒருவர் அந்தக குடும்பத்துக்காக டிக்ரீக்களை நிறைவேற்றவும், பணங்கள் வாங்கவும், அப்படி வாங்கினதற்கு ரசீது கொடுக்கவும் கூடும். இப்படிச செய்வது அந்தக் குடும்பத்தைக் கட்டுப்படுத்தும.

இ. லா. ரி. 35 அலகாபாத் 380.

REMOVAL OF PADDY BY TENANT.

வாரக்காரன் நெல்லை அப்புறப்படுத்துவது.

முதல் குற்றவாளி ப்ராதுக்காரருடைய (கம்பெனிய்னண்டுடைய) நிலங்களை வாரத்துக்கு ஸாகுபடி செய்து வந்து அறுவடையான நெல்லை தமது வீட்டுக் கொல்லைப் புறத்தில் குவித்து வைத்திருந்தார். கம்பெனிய்னண்ட் அப்படிக் குவித்து வைத்திருக்கும் நெல்லுக்கு ஒரு ரசீது வாங்கிக் கொண்டு, நெல்லில் குறி போட்டுவிட்டுப் போனார். அதன் பிறகு முதலாவது குற்றவாளி மற்ற குற்றவாளிகளின் உதவியைக் கொண்டு ஷ நெல்லை வேறிடத்துக்கு அப்புறப்படுத்தி தம்மிடமிருந்த வேறு நெல்லோடு கலந்துவிட்டார். அதற்காக கம்பெனிய்னண்ட் குற்றவாளிகளின்மேல் நெல்லைத் திருடிவிட்டதாக ப்ராது கொடுத்தார். கீழ்க் கோர்ட்டார்கள், நெல் கம்பெனிய்னண்டுக்கும் முதலாவது குற்றவாளிக்கும் பொதுவாக இருந்ததால், முதலாவது குற்றவாளி நெல்லை அப்புறப்படுத்தினது திருட்டாகுமென்று சொல்லி குற்றவாளிகளை தண்டித்தார்கள். இது ஹைகோர்ட்டுக்கு ரிவிஷனுக்கு வந்ததில் ஹைகோர்ட்டார், மாஸூலில் கம்பெனிய்னண்டுக்குள்ள பாகத்தை அவருக்குக் கொடுக்காதிருக்கும் வரையில் மாஸூலானது முதலாவது குற்றவாளி வசமிருக்கிற தென்றேற் படுகிறது. ஆகையால் முதலாவது குற்றவாளி அதை அப்புறப்படுத்தினதற்கு திருடினதாகச் சொல்லி அவரை தண்டிக்கக்கூடாது.

1 லா வீக்லி 178.

MARRIAGE & PARTITION OF JOINT FAMILY.

கல்யாணமும் அவிபக்த குடும்பத்தில் பாகம் செய்துகொள்ளலும்.

ஹிந்து மதத்தைச் சேர்ந்த ஆண்பிள்ளைகளுக்கு கல்யாணம் செய்வதென்பது ஒரு அவச்யமான ஸம்ஸ்காரமாகும். ஒரு அவிபக்த குடும்பத்தில் பாகமாகுமுன்னேயே, அந்தக் குடும்பத்தின் பாகஸதர்களில் சிலருக்கு குடும்பச் செலவில் கல்யாணமாயிருந்தால், பாகமாகும்போது, கல்யாணமாகாத பாகஸ்தர்களுக்குக் கல்யாணச் செலவுக்காக வேண்டிய ஏற்பாடு செய்து வைக்கவேண்டியது அவச்யமாகும். (ஜட்ஜ் ஸுந்தரய்யர், ஸ்பென்ஸர் ஆகிய இவர்களின் அபிப்ராயம்.) கல்யாணமென்பது ஒரு ஹிந்துவுக்கு ஒரு அவச்யமான ஸம்ஸ்காரமாகாது. ஆகையால் அவிபக்த குடும்ப ஸொத்து பாகமாகுமுன், சில பாகஸதர்களுக்கு குடும்பச் செலவில் கல்யாணமாயிருக்கிற தென்பதை யாதாரமாகக் கொண்டு, கல்யாணமாகாத பாகஸ்தர்களுக்கும் பாககாலத்தில் கல்யாணச் செலவுக்குப் பணம் எடுத்து வைக்கவேண்டுமென்று சொல்வதற்கு அவர்களுக்கு பாத்யமில்லை. ஜட்ஜ் (ஸதா சிவய்யருடைய அபிப்ராயம்.)

1911-ம் வருஷம் எஸ். ஏ., நெம்பர் 355. மதராஸ் ஹைகோர்ட்.

THE SON AS TRUSTEE.

மகன் ட்ரஸ்டீயாவது.

ஒரு ஹிந்து தனது ஸொத்துக்களுக்கு ஒரு உயில் எழுதி வைத்து அந்த உயிலில் கண்டிருக்கும் நிபந்தனைகளை நிறைவேற்ற தமது புத்ரனை எக்ஸியூடர் அதாவது உயிலை நிறைவேற்றுகிறவராக நியமித்து, ஒரு கோவிலில் தினந்தோறும் நைவேத்யம் செய்வதற்கும், 'நமஸ்காரம்' செய்வதற்கும் வேண்டியிருக்கும் ஸொத்தைத் தனியாக வைத்துவிட வேண்டுமென்று உயிலில் கண்டிருந்தார். அப்படியானால், மகன் அந்த ஸொத்துக்கு ட்ரஸ்டீயாகிறார். அவர் அந்தக் கார்யங்களைச் செய்துக் வைக்கக் கடமைப்பட்டவர்.

ஏ. எஸ். 35; 1912 மதராஸ் ஹைகோர்ட்.

MANAGING MEMBER & NEW BUSINESS.

குடும்பத் தலைவரும் புதிதாக வ்யாபாரம் நடத்தலும்.

ஒரு அவிபக்த ஹிந்துக் குடும்பத்தின் தலைவராக இருக்கும் ஒருவர் புதிதாக ஒரு வ்யாபாரம் ஆரம்பித்துக் கடன்கள் பட்டால், அந்த வ்யாபாரமானது அவிபக்த குடும்ப வ்யாபாரமாகாது. அந்த அவிபக்த குடும்பத்தில் மற்றபாகஸ்தர்கள் அந்தக் கடன்களுக்கு எந்த விதத்திலும் பாத்யப்பட்டவர்களாக மாட்டார்கள்.

COMMISSION AGENT AND THEFT OF GOODS.

கமிஷன் ஏஜெண்டும் சரக்குகள் திருட்டுப் போவதும்.

ஒரு வ்யாபாரி (முதலாளி) சில சரக்குகளை ஒரு கமிஷன் ஏஜெண்டினிடம் விற்பனைக்குக் கொடுத்திருந்ததில் அந்த சரக்குகள் திருட்டுப் போய்விட்டன. அதன்மேல் ஏஜெண்டானவர் வ்யாபாரியின் உத்தரவில்லாமல் அந்தச் சரக்குகளைக் கண்டு பிடிப்பதற்காக சில தொகைகள் செலவு செய்தார். அப்படியானால், ஏஜெண்டானவர் செலவு செய்தது ந்யாயமாகாது. அந்தச செலவு தொகையை முதலாளியாகிய வ்யாபாரியினிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு ஏஜெண்டுக்கு பாத்யதை கிடையாது.

வி. வி. வி. ஏ. நெம்பர் 38; 1912 மதராஸ் ஹைகோர்ட்.

SERVICE OF SUMMONS.

ஸம்மன்ஸ் ஸர்வ் செய்தல்.

வாதியானவர் ப்ரதிவாதி ஸாதாரணமாய் எங்கே வஸிப்பாரோ அந்த இடத்துக்கு ஸம்மன்ஸைக்கொண்டு போய் 'ஸர்வ்' செய்யக் கடமைப்பட்டவர். ப்ரதிவாதி போகக் கூடிய ஒவ்வொரு இடத்துக்கும் வாதிபோய் ஸம்மன்ஸை 'ஸர்வ்' செய்யுக்கடமைப் பட்டவரல்ல. ப்ரதிவாதி ஸாதாரணமாய் வஸிக்கும் வீட்டில் இல்லாமலிருந்து ஸம்மன்ஸை அந்த வீட்டில் ஒட்டிவிட்டால் அது சரியாக ஸம்மன்ஸ் 'ஸர்வு' செய்ததாகும்.

வி. ஆர். பி. 920; 1912.

The Sanitary World.

ஸுகாதாரப் பகுதி

THE DETERIORATION OF OUR RACE.

நமது ஜனங்களின் க்ஷீணம்.

ராமாயண, மகாபாரத காலங்களில் இருந்த ஜனங்களைப்போல் உயரமாயும் பருமனாயும், பலமாயும் இக்காலத்து ஜனங்கள் இல்லையென்று சிலர் சொல்லி வருகிறார்கள். வேறு சிலர் இக்காலத்து ஜனங்கள் 30, 40 வர்ஷங்களுக்கு முன்னிருந்த ஜனங்களைவிட உயரமும், பருமனும், பலமும் குறைந்தவாகளாயிருக்கிறாகளென்று அபிப்ராயப்பட்டு வருகிறார்கள். மொத்தத்தில் நமது ஜனங்கள் பலமும், ஆகிருதியும் குறைந்திருப்பதாயும், அவர்களின் தேக ஸுகத்தைப்பற்றி கவனித்து சீர்திருத்தவேண்டியது அவச்யமென்பதாயும் பலர் சொல்லி வருகிறார்கள். ஸமீபத்தில் வெளியான 'ஆண்டிஸெப்டிக்' என்னும் வைத்யப் பத்ரிகையில் மிஸ்டர் ஆர். வி. க்ருஷ்ணஸ்வாமி அய்யர் நமது ஜனங்கள் திடகாத்ரர்களாயிராமலிருப்பதற்குக் காரணங்களையும், அவர்களுடைய தேகஸ்திதியைச சீர்திருத்துவதற்கு வழிகளையும் குறிப்பிட்டிருக்கிறார்.

மனிதர்களும் ம்ருகங்களும் உருவத்தில் பெரியவர்களாயும், சிறியவாகளாயுமிருப்பதற்கு அவர்கள் சாப்பிடும் ஆகாரம் முக்ய காரணமாகும். காய்கறிகளையும் செடி கொடிகளையும் தின்று ஜீவிக்கும் ப்ராணிகள் மிகவும் பெரியனவாக வளருகின்றன வென்பது யாவரும் அறிந்த விஷயம். சாக பக்ஷணிகளாகிய ப்ராணிகளில் தான் எலும்புகள் பெரியனவாயும், பலமுள்ளவைகளாயுமிருக்கின்றன. மாம்ஸ ஆகாரம் தின்னும ப்ராணிகள் ஆகிருதியில் குறைவாயிருக்கின்றன. அவைகள் ரொம்ப சீக்ரம் கோபம் கொள்ளக் கூடியவையாயும், குரூரமுள்ளவையாயுமிருக்கின்றன. சாகபக்ஷணிகள் ரொம்ப புத்தி கூர்மையுள்ளவை. மாம்ஸ பக்ஷணிகள் அறிவில் தாழ்ந்தவைகள்.

ஆதிகாலத்தில் மனிதர்களில் சிலர் காய்கறிகளையும், கிழங்குகளையும், பழவர்க்கங்களையும், தான்யங்களையும் நாம் தற்காலம் பக்வம் செய்வதுபோல் பக்வம் செய்யாமல் பச்சையாகவே தின்று வந்ததால் அவர்கள் உருவத்தில் பெரியவர்களாயும், புத்திசாலிகளாயும் இருந்து வந்தார்கள். மாம்ஸத்தை அதிகமாகச் சாப்பிட்டவர்கள் உருவத்தில் சிறியவர்களாயும், குறைந்த புத்தியுள்ளவர்களாயுமிருந்து வந்தார்கள். இரண்டையும் சாப்பிட்டு வந்தவர்கள் அவர்கள் சாப்பிட்ட உணவின் தன்மைக்கும் அளவுக்கும் தகுந்தபடி உருவமும் குணமும் அடைந்து வந்தார்கள்.

தற்காலம் அநேக காரணங்களால் நாம் ஆகிருதியில் குறைந்து போயிருக்கிறோம். அந்தக் காரணங்களில் முக்யமானது நமது ஆகார விஷயத்தில் நாம் தவறு செய்து வந்ததே. நாம் ரொம்ப பலமும் பருமனும் அடைய வேண்டுமென்றால் நாம் காய்கறிப் பதார்த்தங்களையும், கொழுப்புப் பதார்த்தங்களையும் அதிகமாகச் சாப்பிட்டு அரிசியின் அளவைக் குறைக்க வேண்டும்.

நமது தேசத்தில் அநேகர் காய்கறிகளை அதிகமாக உபயோகிப்பதில்லை. இதற்குச் சில காரணங்களிருக்கின்றன. (1) பட்டணங்களிலுள்ளவர்கள் இடவஸதியில்லாததால் தோட்டத்தில் காய்கறிகள் பயிர் செய்ய முடியாமலிருக்கிறது. (2) காய்கறிகள் விற்குஞ்

கடைகள் அதிக தூரமாயிருப்பதாலும், காய்கறிகள் வாங்க விரும்புகிறவர்கள் நேரில்போய் வாங்க முடியாதபடி அவர்களுக்கு வேலைத் தொந்தரவு அதிகமா யிருப்பதாலும், வாங்கி வருவதற்கு வேலைக்காரர்கள் கிடைப்பது கஷ்டமாயிருப்பதாலும், அநேகர் காய்கறிகளை உபயோகிக்க முடிவதில்லை. (3) அநேகர் ஏழையாயிருப்பதால் காய்கறிகள் அதிகமாக வாங்க முடிவதில்லை. அரிசி சாப்பிடுவதால் ஸ்வல்பமாய்க் கிடைக்கக்கூடிய பல உணவு ஸத்துக்கள் காய்கறிகள் சாப்பிடுவதால் அதிகமாயும் ஸுலபமாயும் தேகத்தில் சேருகின்றன. அரிசி மாத்ரம் சாப்பிடுவதென்றால், அதில் முக்யமான ஸத்துக்களில் சில குறைவாயிருக்கின்றன. இவைகளில் குறிப்பிட்ட அளவு ஒவ்வொரு நாளும் தேகத்திற்கு வேண்டியிருக்கும். அந்தக் குறிப்பிட்ட அளவு கிடைக்கும்படி அதிகமாக அரிசிச்சாதம சாப்பிடவேண்டியிருக்கும். இதனால் ஜீர்ணக் கருவிகளுக்கு அதிக ச்ரமம் ஏற்படுகிறது.

ஒரே விதமான காய்கறிகளை தினந்தோறும் சாப்பிட்டு வருவது கெடுதலானது. தினந்தோறும் ஒன்றையே சாப்பிடுவதில் மனம் சலித்துப்போகும.

காய்கறி வகைகளில் தேகத்துக்கு வேண்டிய ஸத்துக்கள் அதிகமாக இருப்பதால் அந்த ஸத்துக்கள் தேகத்தில் அதிகமாய் சேர்ந்து போய், அவைகளை வெளியில் நீக்குவதற்கு தேகத்திலுள்ள கருவிகள் ரொம்ப ச்ரமப் படுகின்றன. ஆகையால் காய்கறி வகைகளை யடிக்கடி மாற்றி உபயோகிக்க வேண்டும். அதற்கேற்றாற்போல இயற்கையில் காய்கறி வகைகளில் சில சில மாஸங்களிலும், வேறு சில மற்ற மாஸங்களிலும் காய்த்து வருகின்றன.

மனிதர்களுடைய வளர்ச்சியைத் தடைசெய்வதற்கு ஒரு முக்ய காரணம் அதிகமாய் துவரம்பருப்பை உபயோகிக்காம லிருப்பதே. தேகத்திற்கு இன்றியமையாத உணவு ஸத்தாகிய ப்ரொடீன் என்னும் பொருளை தேகத்தில் அதிகமாக சேர்க்கக்கூடிய உணவு பொருள்கள் துவரம்பருப்பும் வேறு சில பருப்புகளுமே. அநேக ஜனங்கள் நாள்கணக்காக துவரம் பருப்பையே உபயோகிப்பதில்லை. அவர்கள் பெரும்பாலும் மெலிந்தும் ரக்தமின்றியும் இருக்கிறார்கள். கடைசியில் இவர்களுடைய தேகத்தில் ரக்தம் ரொம்ப பலங் குறைந்து வ்யாதி க்ருமிகள் ரக்தத்தில் சேர்ந்து வ்யாதிக்காளாகி சீக்ரம் இறந்து போகிறார்கள்.

தேங்காய் சாப்பிடுவது தேகத்துக்கு ரொம்ப நல்லது. அதைக் கறிவகைகளி லுபயோகித்தும், அதன் எண்ணெயை ஆகார வகைகளைப் பக்வம் செய்வதி லுபயோகித்தும் வரலாம். காட் லிவர் ஆயில் என்னும் எண்ணெய்க்கு உள்ள நல்ல குணங்கள் இதற்குண்டு. தேங்கா யதிகம் சாப்பிடுகிறவர்கள் தேங்காய் உபயோகிக்காதவர்களைவிட அதிக புத்திசாலிகளாயிருப்பார்கள்.

காய்கறிகளும், பருப்பு வகைகளும், நெய் வகைகளும், தேங்காயும் ரொம்ப அதிகமாகச் சேர்த்து வரவேண்டுமென்று சொன்னது சரியான தேக வளர்ச்சி யில்லாதவர்களுக்கே யொழிய, மற்றவர்களுக்கல்ல. ஒருவர் சரியான தேக வளர்ச்சி யுள்ளவரென்றால், அவர் குறைந்தது 5-அடி 5-அங்குலம் உயரமிருக்கவேண்டும். மார்பின் சுற்றளவு 34-அங்குலமிருக்கவேண்டும். புஜத்தின் நடுபாகம் 11-அங்குலம் சுற்றளவுள்ளதா யிருக்கவேண்டும்.

ரொம்பப் பருமனும் சதை போட்டிருப்பவர்கள் பின்வரும் விதிகளை கவனிக்கவேண்டும்.

1. தினம் சாப்பிடும் எண்ணெய், நெய் ஆகிய இவைகளின் அளவைக் குறைக்கவேண்டும்.

2. துவரம்பருப்பு முதலிய பருப்பு வகைகளை அதிகமாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

3. ரொம்ப தேகப்பயிற்சி செய்யவேண்டும்.

இப்படிச் செய்தும் சதை குறையாவிட்டால் நாலைந்து நாட்களுக் கொருமுறை ஒரு நாள் முழுவதுமோ, அல்லது ஒரு வேளையோ உபவாஸ மிருக்கவேண்டும்.

மனித தேகத்தின் அமைப்பும், தேகவளர்ச்சிக்கு வெவ்வேறு காலங்களில் வேண்டியிருக்கும் உணவு ஸத்துக்களின் வகைகளும், ரொம்ப வித்யாஸப் படுவதால் இன்ன தன்மையுள்ள உணவுகளை இன்ன அளவில் சாப்பிட வேண்டுமென்று திட்டமாய்ச் சொல்வது முடியாது.

ஆகையால் ஒவ்வொருவரும் தாம் சாப்பிட்ட உணவில் தமது தேகத்துக்கு வேண்டியிராத பாகங்களை நீக்குவதற்கு வேண்டிய முயற்சிகளை செய்யவேண்டும். சில பொருள்களை தேகத்தில் நன்றாய்க்கலந்து கொள்ளுமுன் நீக்கிவிடவேண்டும். இதற்கு நமதுகுடலை சுத்தமாய் வைத்திருக்கவேண்டும், அதாவது மலச்சிக்க லில்லாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும்.

சில பொருள்களை தேகத்தில் சேர்ந்தபிறகுங்கூட ரத்தத்திலிருந்து மூத்ர ரூபமாயும், வியர்வை ரூபமாயும் நீக்கிவிடவேண்டியிருக்கும். இதற்கு ஜலம் அதிகமாகக் குடிப்பது நல்லது.

தேகத்தில் கரியமிலவாயு அதிகரிப்பதைத் தடைசெய்யவேண்டும். இதற்கு நல்ல காற்றோட்டமுள்ள இடத்தில் தேகப்பயிற்சி செய்துவந்தால் போதுமானது.

மேற்சொன்ன விதிகளை யனுசரித்து வந்து, தேகஸுகத்துக்குக் கெடுதலான கார்யங்கள் ஒன்றும் செய்யாமலிருந்தால் நாம் நல்ல ஸுகசாலிகளாய்த் தீர்க்காயுஸுள்ளவர்களாயிருக்கத் தடையில்லை.

PAREL LABORATORY.

பேரல் சாஸ்த்ரசாலை.

பம்பாயில் பேரல் சாஸ்த்ரசாலையென்று ஒரு வைத்ய சாஸ்த்ர ஆராய்ச்சி சாலை இருக்கிறது. அதில் மலேரியாவைப் பரவச்செய்யும் கொசுக்களைக்குறைப்பதற்காக சிலபரீக்ஷைகள்செய்து வருகிறார்கள். மலேரியாவைக்கொன்று தின்னக்கூடிய சில மீன் ஜாதிகளைப்பிடித்து வளர்த்து பரீக்ஷைசெய்து கொண்டிருக்கிறார்கள். இதோடுகூட அங்கே பாம்பு விஷத்துக்குமருந்து செய்வதற்காக பாம்புகளின் வாயிலிருந்து விஷத்தை எடுக்கிறார்களாம். இந்தவிஷத்தை காஸௌலியென்னும் பட்டணத்துக்கு அனுப்ப அங்கே இந்தவிஷத்தை குதிரைகளின் ரக்தத்தில் செலுத்துகிறார்கள். சில காலத்துக்குப்பிறகு குதிரைகளின் தேகத்திலிருந்து ரத்தமெடுத்து அதிலுள்ள ஸார்ப்பவின் என்னும் பொருளைப்பிரித்து மீதியான பாகத்தை பாம்பு விஷத்துக்கு முறிவாக உபயோகிக்கிறார்கள். இதற்கு ஆண்டி வெனின் என்று பெயர். இந்த மருந்தால் அநேகர் குணமடைந்திருக்கிறார்களாம். ஸமீபத்தில் கம்பல்லாஹில் என்னுமிடத்தில் ஒரு காவல்காரனைப் பாம்பு கடித்துவிட்டது. சிறிது நேரத்துக்கெல்லாம் அநேகமாய் பிழைக்க முடியாதென்று சொல்லும்படியாய் விட்டது. அப்படியிருந்தும் அவனுக்கு 'இந்த ஆண்டி வெனின்' மருந்தை அம்மை குத்துவது போல் குத்தி ரத்தத்தில் கலந்ததில் அவன் 20- நிமிஷநேரத்தில் ஸ்வஸ்த மடைந்துவிட்டான். இப்போது பேரல் லாபரேடரி (சாஸ்த்ரசாலை) யில் இருக்கும் 'ஆண்டிவெனின்' மருந்து இந்தியாமுழுவதிலும் பாம்புகடிக்கு ஸப்ளை செய்யப் போதுமானதாம்.

POLISHED RICE.

நன்றாய்த்தீட்டின அரிசி.

நம்மவர்களில் அநேகர் சாதம் தும்பைப் பூப்போல் வெண்மையா யிருக்கவேண்டுமென்று எண்ணி அரிசியை இரட்டைத்தீட்டல் தீட்டுவதுண்டு. இங்கிலண்டில் சிலவிடங்களில் அரிசி வெண்மையாயிருப்பதோடு பளபளப்பாயுமிருக்கவேண்டி நன்றாய்த் தீட்டின அரிசியில் சிறிது எண்ணெயும் மைகா அதாவது அப்ரக்த்தின் தூளும் சேர்க்கிறார்களாம். இப்படிச் செய்வதில் பலவிதத்தில் கெடுதிகள் உண்டாகின்றன. அரிசிமேல் 'வைடமைன்' (Vitamine) என்று சொல்லப்படும் உணவு ஜீர்ணமாவதற்கு ஸாதகமான பொருள் மெல்லிய படைபோல் சுற்றிக்கொண்டிருக்கிறது. அரிசியைத் தீட்டுவதால் இந்த ஜீர்ணோபகாரி அரிசியிலிருந்து எடுபட்டுப்போகிறது. ரொம்ப தீட்டின அரிசியைச் சாப்பிடுகிறவர்களுக்கு 'பெரிபெரி' யென்று சொல்லப்படும் ஒருவித ரோகம் உண்டாகிறதாம், ஆகையால் அரிசியை ரொம்பத் தீட்டாமல் உபயோகிப்பதே நல்லது.

PAPAW JUICE.

பப்பாளிப்பால்.

இந்தப் பால் வயிற்றிலுண்டாகும் க்ருமிகளைப் போக்குவதற்கு உபயோகமானது. மேனாட்டு வைத்யர்களும் இப்பொழுது இவ்விஷயத்தில் இச்சரக்கை விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள். பப்பாளிக் காயைக் குத்தி அதிலிருந்து வடியும் பாலைச் சேர்த்தெடுக்கவேண்டும். ப்ராயமானவர்களுக்கு $\frac{1}{2}$ அவுன்ஸ் பாலை அதற்கு ஸமயெடையான தேனில் கலந்து, இவற்றுடன் 2-அவுன்ஸ் கொதிக்கிற ஜலத்தைவிட்டு எல்லாவற்றையும் ஒன்றாகக் கலக்கி, ஆறியவுடனே குடிததுவிடவும். பிறகு இரண்டுமணி ஸாவகாசம் கழித்து ஒரு அவுன்ஸ் ஆமணக்கெண்ணெயை $\frac{1}{2}$ அவுன்ஸ் எலுமிச்சஞ்சாற்றுடன் கலந்து குடிக்கவேண்டும். இவ்விதமே அடுத்து இரண்டு நாள் செய்யவேண்டியது. 3-முதல் 7-வயது வரையிலுமுள்ள குழந்தைகளுக்கு மேற்படி அளவில் பாதி கொடுத்தால் போதுமானது. 3-வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு முற்கூறிய அளவில் மூன்றில் ஒரு பங்காவது, ஒரு தேக்கரண்டியளவாவது கொடுக்கலாம். இவ்விதம் செய்வதால் வயிற்றிலுள்ள க்ருமிகள் செத்துப்போய் நன்றாக வெளிவந்துவிடும். இந்தப் பாலைக்கொடுத்ததும் சிறிதுநேரத்தில் வயிற்று வலி சிலருக்குக் காணக்கூடும்; அவ்விதம் கண்டால் சர்க்கரையும் தண்ணீரும், அல்லது சர்க்கரையும் பாலும் கலந்து வேண்டியவளவு குடிக்கச் செய்தால் வயிற்றுநோய் தீரும். ஸுகமாய் பேதியுமாகும். வைத்திய கலாநிதி.

DEATH BY OVERDOSE OF QUININE.

கொய்னாவை அதிகமாகச் சாப்பிட்டதால் மரணம்.

ஸமீபத்தில் பம்பாயில் ஒரு வயஸான ஒரு பெண்குழந்தை அருகில் வைத்திருந்த க்வினைன் (கொய்னா) மாத்ரைகளை எடுத்து விழுங்கி விட்டது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம குழந்தைக்கு நோயுண்டாய் உடம்பெல்லாம் நடுங்க ஆரம்பித்தது. குழந்தையின் பெற்றோர்கள் அதை ஹாஸ்பிடலுக்கு எடுத்துக் கொண்டுபோனார்கள். அங்கே போய்ச் சேர்ந்த கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அது இறநது போய் விட்டது. அந்த மாத்ரைகள் அக்குழந்தையின் தகப்பனருக்காக வாங்கி வைத்திருந்தவை. குழந்தைக்கு எட்டக் கூடாத இடத்தில் வைக்காததனால் இப்படியாயிற்று. இவ்விஷயத்தை நம்மவர்கள் கவனிப்பார்களாக.

SLEEPING IN THE MOONLIGHT.

நிலவில் படுத்துத் தூங்குதல்.

நிலா வெளிச்சத்தில் படுத்துத் தூங்குவது ஸுகாதாரத்துக்கு ஏற்றதல்ல வென்று லான்ஸெட் என்னும் ப்ரபல இங்க்லீஷ் வைத்ய ப்பத்ரிகை சொல்லுகிறது. அப்படிக் கொஞ்ச காலம் தூங்கி வருபவர்களுக்கு மூளை ஸம்பந்தமான வ்யாதிகளும், சிரஸைப் பற்றிய வ்யாதிகளும் உண்டாகின்றனவாம்.

The Boys' World.

பையன்கள் பகுதி.

THE FLY.

ஈ

சிறுவர்கள் விளையாட்டுத் தனமாக நாய்களின் மேலும், கழுதைகளின் மேலும் கல்லெறிந்தும், கன்றுக்குட்டிகளை அடித்துத் தொந்தரை செய்தும் சேஷ்டைகள் செய்வதுண்டு. ஈக்களை நிஷ்காரணமாய் அடித்துக் கொல்வதுமுண்டு. சிறுவர்கள் மேற்சொன்ன ப்ராணிகளும இன்னும் மற்றவைகளும தங்களுக்கு யாதொரு தீங்கும் செய்யாதிருக்கும் போது அவைகளை ஹிம்ஸிப்பது தகாதென்று உபாத்யாயர்களும பெற்றோர்களும் அவர்களுக்கு புத்தி புகட்டுவதுண்டு. மற்ற ப்ராணிகளை ஹிம்ஸிப்பதும் கொல்வதும் கெடுதலென்றாலும், ஈக்களைக் கொல்வது தற்காலக் கொள்கைகளின்படி ரொம்ப ந்யாயமென்று சொல்லப்படுகிறது.

ஏனெனில் ஈக்கள், வண்டு குளவி முதலியவைகளைப் போல் நம்மைக் கொட்டித் தொந்தரை செய்யா விட்டாலும், அவைகள் நமக்கு ரொம்ப தீங்குகள் செய்யக் கூடியவைகளாக இருக்கின்றன. அவைகளால் ஒரு குடும்பமே நோய்க்கு ஆளாகக் கூடும். க்ராமங்களும் பட்டணங்களும் பாழ்த்துப் போகக்கூடும். ஈக்களால் பல வ்யாதிகள் பரவுகின்றன. ஒரு பட்டணத்தில் ஈக்கள் மூலமாய் குடலைப் பற்றிய ஒரு வ்யாதி ஜனங்களுக்குள் பரவி ஒரு ஸமயத்தில் ஏழாயிரம் ஜனங்களுக்கு மேல் இறந்துபோய் விட்டார்கள். இவைகள் மூலமாய் சிறுவர்களுக்கு அநேக வ்யாதிகள் நேரக் கூடும். ரொம்ப பலசாலியா யிருப்பவர்களும் இவைகளால் வ்யாதியுடைந்து இறந்துபோகவும் கூடுமென்றால், இவைகள் விஷயத்தில் ரொம்ப ஜாக்ரதையா யிருக்கவேண்டுமென்பது ஏற்படுகிறதல்லவா?

இந்த ஈக்கள் வேண்டுமென்று நம்மைத் தொந்தரை செய்வதில்லை. அவைகளுக்கு அப்படிப்பட்ட பகுத்தறியும் அறிவு கிடையாது. அவைகள் தம்மை யறியாமலே நமக்கு பெருந் தீங்கை விளைவிக்கக் கூடியவைகளாக இருக்கின்றன.

ஈக்கள் இன்னவிடத்தில் தான் உட்காரலாம், இன்னவிடத்தில் உட்காரக் கூடாதென்பதில்லாமல் மல ஜலங்களிலும், குப்பைகளிலும், அழுகின பொருள்களிலும் உட்கார்ந்து, பிறகு பறந்துபோய் நல்ல உணவுப் பொருள்களின் மேலும், தேகத்திலிருக்கக்கூடிய சிரங்குகள், காயங்கள் முதலியவைகளின்மேலும் உட்காருகின்றன. அழுகின பொருள்களிலும், வ்யாதிஸ்தர்களுடைய மல ஜலாதிகளிலும் வ்யாதியை உண்டாக்கக்கூடிய பாக்டீரியா என்னும் நுண்ணிய ஜீவாசிகள் இருக்கின்றன. அவைகளின்மேல் இந்த ஈக்கள் உட்கார்ந்தால் இவைகளின் கால்களில் பாக்டீரியாக்கள் ஒட்டிக் கொள்கின்றன. பிறகு ஈக்கள் நாம் சாப்பிடக்கூடிய உணவு பதார்த்தங்களில் உட்கார்ந்தால் உணவு பதார்த்தங்களில் மேற் சொன்ன பாக்டீரியாக்கள் கலந்து கொள்ளுகின்றன. புண்கள், வெட்டுக் காயங்களில் உட்கார்ந்தால் ஷை வ்யாதி க்ருமிகள் அவைகளில் சேர்ந்து புண்களை ஆறவிடாமல் செய்தும் பெரியவையாக்கியும் வருகின்றன.

அநேகம் சிறுவர்கள் பெரிய பட்டணங்களிலும், சிறு பட்டணங்களிலும் உள்ள தின்பண்டக் கடைகளில் பக்ஷணங்கள் வாங்கித் தின்பதுண்டு. இந்தக் கடைகளில் அநேகம் தெருவில் சாக்கடை யோரமாய் வைக்கப்பட்டிருக்

கின்றன. சாக்கடைகளிலும், தெருவிலுள்ள குப்பைகளிலும், அழுகிக் கிடக்கக்கூடிய பொருள்களிலும் உட்கார்ந்திருக்கும் ஈக்கள் அவைகளிலிருக்கக்கூடிய கெட்ட பாக்டீரியாக்களை தங்களுடைய கால்களில் எடுத்துக்கொண்டு வந்து தின்பண்டங்களில் உட்கார்ந்து அவைகளைக் கெடுக்கக்கூடும். அந்தத் தின்பண்டங்களில் வ்யாதிக்ருமிகள் சேர்ந்து விட்டால் அவைகளைத் தின்னும் சிறுவர்களுக்கு வ்யாதி வரக் கூடுமல்லவா ?

இப்படித் தெருவில் இருக்கும் பக்ஷணக் கடைகளில் தான் ஈக்கள் தொந்தரவு அதிகமென்பதில்லை. காபி ஹோட்டல்களிலும், சாப்பாடு ஹோட்டல்களிலும் ஈக்களின் தொந்தரவு குறைவா யிருப்பதில்லை.

வீட்டுக்குள் ஆடு மாடுகளைக் கட்டிவைத்திருந்து அவைகள் போடும் சாணம் மூத்ரங்களை அப்போதைக் கப்போது நீக்காமல் அப்படியே போட்டு வைப்பதால் அவைகள் அழுகி நாற்றமெடுத்து அவைகளில் ஈக்கள் தங்கியிருக்க இட மேற்படுகிறது. கக்கூஸுகளை காலா காலத்தில் சுத்தஞ் செய்யா விட்டாலும், சாக்கடைகளை சுத்தமாய் வைத்திருக்கா விட்டாலும் ஈக்கள் தொந்தரவு அதிகரிக்கக்கூடும். இன்னும் அழுகிப்போன வஸ்துக்களை அப்போதைக் கப்போது அப்புறப்படுத்தாமல் வீட்டுக்குள் வைத்திருந்தாலும் ஈக்கள் அவைகளில் ஏராளமாய் வந்து மொய்க்கும்.

சிலர் பால், ஜலம், முதலிய பானவகைகளில் கெட்டவ்யாதி க்ருமிகள் இருக்கக்கூடுமென்று எண்ணி அவைகளைக் காய்ச்சுவதுண்டு. அப்படிக் காய்ச்சுவதால் வ்யாதி க்ருமிகள் இறந்து போகக் கூடும். ஆனால் அவைகளைக் காய்ச்சின பிறகு ஆற்றிக் குடிக்கும்போது அவைகளில் வ்யாதிக்ருமிகள் உள்ள நரகல், அழுகின பொருள்கள், சாக்கடை, முதலியவைகளில் உட்கார்ந்த ஈக்கள் வந்து உட்கார்ந்தால், அவைகள் கெட்டுப்போகு மாதலால் நாம் மிகவும் ஜாக்ரதையாக இருக்கவேண்டும்.

ஒரு ஈ எவ்வளவு பாக்டீரியாக்களைக் கொண்டுவரக் கூடுமென்பதை யறிந்தால் அதைக் கொல்லவேண்டியது மிகவும் அவச்யமென்பது நன்றாய்த் தெரியவரும். ஸமீபத்தில் இரண்டு சாஸ்த்ரிகள் 414 ஈக்களைப் பிடித்து அவைகளின் கால்களிலும் தேகத்திலும் உள்ள ரோமங்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் பாக்டீரியாக்களை எண்ணிப் பார்த்ததில் ஒவ்வொரு ஈயினிடத்திலும் சராசரி 12½ லக்ஷம் பாக்டீரியாக்கள் இருந்தனவென்று தெரியவந்தது. இவ்வளவு பாக்டீரியாக்களில் கொஞ்சம் நமது உணவில் கலந்தாலும் அவைகள் மிக வேகமாக அபிவ்ருத்தியடைந்து நமக்குத் தீங்கு விளைவிக்கக்கூடும்.

ஆகையால் சிறுவர்களும் பெரியவர்களும் மற்ற ப்ராணிகள் விஷயத்தில் ஜீவ ஹிம்ஸை கூடாதென்று சொன்னாலும், ஈக்கள் விஷயத்தில் தயா தாக்ஷண்யம் பார்க்காமல் அவைகளை அப்போதைக் கப்போது கொன்று வரவேண்டும். ஈக்கள் வெகு வேகமாக அதிகரிக்கக் கூடியவை. ஸரியான வஸதிகள் இருந்தால் ஒரு ஈயிலிருந்து ஐந்தாறு மாஸத்தில் கோடிக் கணக்கான ஈக்கள் உண்டாகக்கூடும். குளிர் காலத்தில் ஈக்கள் தூங்குவதுண்டு. அந்தக் காலத்தில் அவைகளில் பல இறந்து போகின்றன. உயிரோடிருப்பவை வஸந்த காலத்தில் வெளிப் புறப்பட்டு அழுகிப்போன வஸ்துக்களில் உட்கார்ந்து அவைகளைத் தின்கின்றன. அழுகின வஸ்துக்களில ஏராளமான பாக்டீரியாக்கள் உண்டு. ஈக்கள் பாக்டீரியாக்களையும் உணவோடு சேர்த்துத் தின்று பிறகு அவைகளில் பெரும்பாகத்தை மலத்தோடு வெளிப்படுத்துகின்றன. இந்த மலம் ஈயின் தேகத்திலேயே ஒட்டிக்கொண்டிருக்கிறது. ஈக்கள் அங்குமிங்கும் பறந்து வந்து மனிதர்கள்

சாப்பிடும் ஆகாரத்திலும் குடிக்கும் பானத்திலும் உட்கார்ந்து அவைகளில் பாக்டீரியாக்கள் நிறைந்துள்ள மலத்தை கலந்து விடுகின்றன. அவைகள் வெளிவந்த பத்துப் பன்னிரண்டு நாள்களுக்குள் பெண் ஈயானது 100 முதல் 150 முட்டை வரையில் இடுகிறது. முட்டையிடுவதற்கேற்ற விடம் சாணக் குவியல்கள், ஈரமான அழுகின வஸ்துக்கள், முதலியவைகளாம். இந்த முட்டைகள் பத்து நாள்களில் ஈக்களாக மாறுகின்றன. இவைகளில் பெண் ஈககளா யிருப்பவைகள் இரண்டு வாரமான பிறகு முட்டை யிடுகின்றன. இந்த முட்டைகளும் பத்து தினத்தில் ஈக்களாக மாறி இந்த ஈக்களும் வழக்கப்படி முட்டையிடுகின்றன. ஸரியான வஸதிகள் மாத்ர மிருந்து விட்டால் ஒரு ஈயிலிருந்து 5 மாஸ காலத்துக்குள் 155½ கோடி ஈக்கள் உண்டாகக்கூடும். ஆகையால் ஈக்களைக் கண்டபோதெல்லாம் கொன்றுவிட வேண்டுமென்று ஏற்படுகிறதல்லவா?

ஈக்களைக் கொன்றால் மாத்ரம போதாது. ஒவ்வொன்றாய்க் கொல்வதென் றிருந்தால் ஈக்களைத் தேடித் தெரு முழுவதும் அலையவேண்டியதல்லவா? ஈக்களைக் கொல்வதோடு மட்டுமில்லாமல் ஈக்கள் வ்ருத்தியாவதற்கு ஸாதனங்களாயுள்ளகாரணங்களைவிலக்கவேண்டும்; அதாவது வீட்டுப் பக்கத்திலும், வீட்டிற்குள்ளும், தெருவிலும், சாக்கடைகளிலும், கக்கூஸுகளிலும் அசுத்தங்களும், அழுகின பொருள்களும் தங்கவிடாமல் எப்போதும் சுத்தமாயிருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டிய தவச்யம.

அமெரிக்காவைச் சேர்ந்த ப்ளாரிடாவிலுள்ள ஜாக்ஸன்வில் என்னும் ஊரில் டைபாய்ட் காய்ச்சல் மும்மரமாயிருந்து அநேகர் அதனால் இறந்து வந்தார்கள். டைபாய்ட் ஜ்வரத்தால் கஷ்டப்படுகிறவர்களுடைய மலத்தில் உட்கார்ந்த ஈக்கள் அந்த மலத்திலுள்ள டைபாய்ட் க்ருமிகளைக் கொண்டுபோய் வேறிடங்களில் சேர்த்து வ்யாதியைப் பரவச்செய்து வந்தன. இதை யறிந்த அந்தப் பட்டணத்து ஸுகாதாரத் தலைவர், அந்த ஊரில் குப்பை கூளங்கள், சாணக் குவியல் முதலியவைகளை அப்போதைக் கப்போது அப்புறப்படுத்தி கக்கூஸுகளை சரியான காலங்களில் சுத்தஞ் செய்து ஈக்கள் பரவாமல் செய்தார். அதனால் அந்த ஊரில் ஜனங்களுக்கு டைபாய்ட் காய்ச்சல் உண்டாவது ரொம்பவும் அரிதாகிவிட்டதாம்.

DEAD SEA.

சாக்கடல்.

ஆசிய துருக்கியைச் சேர்ந்த பாலஸ்டின் என்னும் ப்ரதேசத்தில் 'டெட்ஸீ' என்று ஒரு பெரிய ஏரி இருக்கிறது. 'டெட் ஸீ' என்றால் சாவுக்கடல் என்று அர்த்தம். அதை சாக்கடல் என்றும் சொல்வதுண்டு. அது 47 மைல் நீளமும, 9 மைல் அகலமும் உள்ளது. அது பக்கத்திலுள்ள மத்யதரைக் கடலின் ஜல மட்டத்துக்கு 1200 அடி தாழ்ந்து இருக்கிறது. இதைப்போல் ரொம்ப தாழ்வான ஏரி உலகில் வேறு கிடையாது. இதன் ஜலம் ரொம்ப கசப்பானதால் அதில் மீன்கள் உயிரோடிருக்க முடிவதில்லை. இதில் உப்பு ரொம்ப அதிகம். அட்லாண்டிக் ஸமுத்ரத்தில் ஒரு டன் நிறையுள்ள ஜலத்தை எடுத்துக் காய்ச்சினால் 31-ராத்தல் உப்புக் கிடைக்கும். ஆனால் இந்த ஏரி ஜலத்தில் ஒரு டன் எடுத்து காய்ச்சினால் 187 ராத்தல் உப்புக் கிடைக்கிறதாம். இவ்வளவு உப்பு அதிலிருப்பதால் அதில் ஒருவரும் மூழ்க முடியாது. கொஞ்ச காலத்துக்கு முன்னால் ஒரு யாத்ரி அதன் ஜலத்தில் மூழ்காமல் மிதந்து கொண்டே சிறிது நேரம் புஸ்தகம் வாசித்துக் கொண்டிருந்தாராம்.

MORAL SAYINGS.

நீதி வசனங்கள்.

1. ஐச்வரியம் வந்த காலத்திலும் அடக்கமாயிருப்பதே அறிவுக்கு அழகு.

2. சொல்லாலும் செய்கையாலும் ஒருவனுடைய உள்ளம் தானே வெளியாகும்.

3. பணத்தால் மரணத்தை ஓட்ட முடியாது.

4. சிறு ப்ராயத்தில் சோம்பேறியா யிருப்பவர்கள் தள்ளாத வயதில் வருத்தப்படுவார்கள்.

5. வேலை செய்பவனுக்கே அதிலுள்ளவருத்தங்கள் தெரியும்.

6. படித்தவர் பெருமை படித்தவருக்கே தெரியும்; மற்றவருக்குத் தெரியாது.

7. மரியாதை யில்லாமல் முரட்டுத் தனமாகப் பேசிக் கொடுப்பதைவிட மரியாதையோடு இல்லையென்று சொல்லி யனுப்புவது உத்தமம்.

8. கையிலிருப்பதை இல்லையென்பது கள்ளத்தனம்.- ஆத்மாபி வர்த்தனியில்.—டி. கே. ராமபத்ரசர்மா.

THE NERVES OF PLANTS.

செடிகளின் நரம்புகள்.

மனிதர்களுக்கு நரம்பு நார்கள் இருப்பது போல செடிகளுக்கும் உணர்ச்சிக் கருவிகளாகிய நரம்பு நார்கள்இருக்கின்றனவென்று டாக்டர் போஸ் என்பவர் சொல்லுகிறார். செடிகள் இரவில்தூங்குவதில்லையாம். காலையில் 6-மணி முதல் 9-மணி வரையில் நன்றாய்த்தூங்கிக் கொண்டிருக்குமாம். ஸாதாரணமாய்ச செடிகள் உணர்ச்சியற்றவை என்று சொல்வது தவறென்று அவர்சொல்கிறார். மின்ஸாரத்தால் மனிதர்க்கு அதிர்ச்சி உண்டாவது போல்,செடிகளுக்கும் அதிர்ச்சி உண்டாகும்படி மின்ஸாரத்தை ப்ரயோகித்தால் செடிகள் ரொம்ப கடுமையாக அசைந்து கொடுக்கின்றன. அதிக நேரம் மின்ஸார அதிர்ச்சி யுண்டாகும்படி செய்தால் செடிகள் மிகவும் துடித்துக்கஷ்டப்படும். மின்ஸாரத்தால் மனிதர்களைக்கொல்வதுபோல செடியையும் கொன்றுவிட்டால் அதற்குப்பிறகு மின்ஸார ப்ரயோகம் செய்தால் செடியானது துடிப்பதே கிடையாதாம்.

THE AMIR OF AFGHANISTAN

ஆப்கனிஸ்தானத்து அமீர்.

ஆப்கனிஸ்தானத்து அரசராகிய அமீர் தமது தேகஸௌக்கியத்தைப்பற்றி ரொம்பவும் கவலையெடுத்துக்கொள்கிறார். தமது சாப்பாடுவிஷயத்தில் இன்னதுதான் சாப்பிடலாம், இன்னது சாப்பிடக்கூடாதென்று ஒரு நியமம் வைத்துக்கொண்டிருக்கிறார். தினமகாலையில் எழுந்தவுடன் ஸாண்டோவின் தேகப்பயிற்சிமுறைகளை அனுஷ்டித்து வருகிறார். அவருக்கு மோட்டார் வண்டி ப்ரயாணம் செய்வதில் ரொம்ப ப்ரியம். அவர் வெகுவாய் இரண்டு பேர் உட்காரக்கூடிய வண்டியில்தான் ப்ரயாணம் செய்வது வழக்கம். அவருக்கு ஒரு ஐரோப்பிய மோட்டார் வண்டி ஸாரதி யிருக்கிறார். அவர் மோட்டார்வண்டியில் போகும் போது தாம் எங்கே போவார் என்பதை ஒருவரிடமும சொல்வதில்லையாம். அவர் எவ்விடத்திற்குப் போகிறார் என்பதை ஒருவரும் யூகிக்கமுடியாது. முன்பு அவரிடம் நான்கு பேர் உட்காரக்கூடிய வண்டி ஒன்றிருந்தது. அதில் போகும்போது இன்ன இடத்துக்கு வண்டியை ஓட்டு என்று வண்டியோட்டுபவனிடம் சொன்னால் வண்டியிலிருக்கும் மற்றவர்களுக்கும தெரிந்துவிடும் என்று எண்ணி, அவர் தாமபோகவேண்டிய இடத்தைக் கடுதாசியில் குறிப்பிட்டு மோட்டார் வண்டியோட்டுபவனுக்கு மாத்ரம் தெரியக்கூடியதான ஒரு இடத்தில் அதை வைத்துவிடுவாராம்.

A NEW TRIBE.

ஒரு நூதன ஜாதியார்.

ப்ரெஜீல் தேசத்தை ஆராய்ச்சி செய்வதற்காகப் போயிருந்த ஒரு சாஸ்த்ர ஆராய்ச்சிக் கூட்டத்தார் இது வரையில் கண்டு பிடிக்கப்படாத ஒரு நிர்வாண ஜாதியாரை கண்டு பிடித்திருக்கிறார்கள்.

The Ladies' World.

ஸ்த்ரீகள் பகுதி.

DAIRYING INDUSTRY.

BY

M. VAITHYANATHAN.

நெய், பால் தொழில்.

இக்காலத்தில் கௌரவமானதும், ஸ்வல்ப முதலுள்ளதும, தகுந்த லாபம் வரக்கூடியதும், நகரமென்றும் க்ராமமென்றும் யோசிக்காமல் இருந்த இடத்தில் க்ராக்கியுடன் விற்பனையாகக் கூடியதும் ஸ்திரீகளுக்கேற்றதுமான தொழில் பால், தயிர், நெய் வ்யாபாரமே. பால் தயிர், நெய், ஆகிய இவைகளின் விலை 10,15வர்ஷத்துக்கு முந்தியிருந்ததற்கு இப்போதுள்ள விலை ஒன்றுக்கு மூன்றாக இருக்கிறது. 10 வர்ஷத்துக்குமுன் வெண்ணெய்சேர் மூன்றணாவாக விருந்தது. இப்போது ஏழணாவாகவும் சிலஸமயங்களில் நகரங்களில் எட்டணாவாகவும் விற்கிறது. பால் சேர் அரையணாவாக விருந்தது ஒரு அணாவாகவிருக்கிறது. கடைகளில் விற்கப்படும் அசுத்தமானதும், துர்நாற்றமுள்ளதுமான நெய் ரூபாய்க்கு இரண்டு சேராகவிற்கிறது. அசுத்தமான நெய்யே இந்த விலையென்றால் நல்ல நெய் க்ராக்கியுடன் விற்கக் கேட்பானேன். இந்த க்ராக்கிக்கு காப்பிக்குடியில் பாலாய் செலவழிந்து விடுவதே முக்யகாரணமாகும. இவைகளை யோசிக்க, பால், தயிர், நெய், விலை குறையக்காரணமில்லை யென்று தெரிகிறது. நல்ல சரக்காக கிடைக்குமானல் எவ்வளவு உற்பத்தியானாலும் விற்பனையாகத் தடையில்லை.

நூறு ரூபாய் முதலைக்கொண்டு 55 ரூபாய்க்கு ஒரு எருமை மாடும் 45 ரூபாய்க்கு ஒரு பசுமாடும் வாங்கலாம். இப்போதுள்ள மாடுகள் விலை க்ராக்கியாயிருப்பதால் மேல் கண்ட விலைக்கு குறைந்து வாங்கப்படும் மாடுகளிலிருந்து லாபமடைய முடியாது. நல்ல 'மெதப்பு'ள்ளதாயும், 18 மாதங்களுக்கு குறையாமல் கறக்கக்கூடியதும், இரண்டு வேளைக்கும் குறைந்தது 12 சேர் கறக்கக்கூடியதுமான எருமை ஒன்றுக்கு ரூபா 55. நாள் ஒன்றுக்கு 8 சேர் கறக்கக்கூடிய பசு ஒன்றுக்கு ரூ. 45. ஆக முதல் ரூ. 100.

செலவு.

இவைகளை வைத்துக்காப்பாற்ற வேண்டியிருக்கும்செலவு விபரம் :— இரண்டு மாட்டுக்கும் வைக்கோல் கட்டு மாஸம் ஒன்றுக்கு 15 கட்டுக்கு ரூபா 2; புல் கட்டு 30-க்கு அணா 15; தவிடு தினம் இரண்டு வேளைக்கும் இரண்டு மாட்டுக்கும் நாலுமரக்கால் வீதம் மாஸம் 10 கலத்துக்கு ரூபா 2-8-0; பருத்திக்கொட்டை தினம் 4 சேர் வீதம் மணங்கு 3-க்கு ரூபா 3-0-0; பிண்ணாக்கு தினம் 2 சேர் வீதம் மணங்கு 1½-க்குரூபா 1-8-0; தேங்காய் பிண்ணாக்கு ரூபா 0-15-0; மேய்ச்சல் கூலி அணா 4; ஆக மாஸம் 1-க்கு செலவு ரூபாய் 11-2-0.

ஆதாயம்.

எருமை:—இரண்டு வேளைக்கும் பால் சேர் 12-க்கும் நெய் சேர ¾ வீதம் மாஸம் நெய் சேர் 22½-க்கு ரூபா 11-4-0; தயிர் சேர் 18-க்கு 4½ அணா வீதம் மாஸம் 1-க்கு ரூபா 8-7-0; ஆக எருமை வரும்படி மாதம் ஒன்றுக்கு ரூபா 19-11-0.

பசு:—வேளை 2-க்கும்பால் சேர் 8 வீதம் மாஸம் சேர் 240 க்கு சேர் ஒன்றுக்கு ஒரு அணா வீதம் ரூ. 15-0-0. ஆக இரண்டு மாட்டுக்கும் மாஸம் வரும்படி ரூபா 34-11-0. செலவு மாஸம் ஒன்றுக்கு ரூபா 11-2-0 நீக்கி மாஸம் ஒன்றுக்கு ஆதா

யம் ரூபா 23-9-0. இந்த வரும்படி ஸாதாரணமாய் கிடைக்கக்கூடியது.

நெய், பால், தயிர் இவைகளுக்கு போடப்பட்டிருக்கும் விலைகள் இப்போதுள்ளபடி போடப்பட்டிருக்கின்றன. சற்றுக் கூடக்குறைய விற்பதுமுண்டு. நெய் விலை குறைந்தால் மற்ற ஜீவனச்செலவுகள் குறைபவுங்கூடும். ஜீவனச்செலவு அதிகப்பட்டால் பால், நெய், விலை அதிகப்படும். ஆகவே போடப்பட்டிருக்கும் லாபம் சற்றேறக்குறைய தவறாமல் கிடைக்கும். நகரங்களில் பருத்திக் கொட்டை மலிவாய் கிடைக்கும். தவிடு க்ராக்கியாய் இருக்கும். மேய்ச்சல் கூலி புல், வைக்கோல் இவைகளின் செலவு அதிகமாயிருக்கும். அதை ஈடு செய்ய பால், நெய் க்ராக்கியாய் விற்கும். சராசரி மாஸம் ரூபா 20 கிடைக்குமென்பதில் தடையில்லை. நூறு ரூபாய் முதலைக்கொண்டு இருபது ரூபாய் சம்பாதிக்கக்கூடிய சிறு தொழில் பால், தயிர், நெய், வ்யாபாரத்தை தவிர ஸ்திரீகளுக்கேற்ற தொழில் வேறொன்றுமில்லை. இப்படி ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்குமானல் எவ்வளவோ லாபமென்பதில் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. அநேகம் ஏழை ஸ்திரீகள் இவ்விதம் பால், தயிர், நெய் வ்யாபாரத்தால் 1000, 500 முதலுள்ளவர்களாயிருக்கிறார்கள். கன்றுகளை நன்ருய் போஷிப்பதால் முதல் தொகை ஈடாய்விடும். கறவை நின்று விடுங் காலங்களில் கன்றுகளுடன் முதலுக்கு மேலாக விற்று புதிதாய் ஈன்ற மாடுகளாய் வாங்கிக் கொள்ளலாம். ஆதாயமான இந்த சிறந்த தொழிலை ஏழை ஸ்திரீகள் கைக்கொள்வார்களானல் தகுந்த லாபமடைவார்கள். இத்தொழில் எந்த ஜாதியாயிருந்தாலும் விரும்பத்தக்கது.

எம். வைத்யநாதன்.

MAKING JEWELS.

நகைகள் செய்தல்.

நகைகள் செய்வதைப்பற்றி ஒரு நிருபர் சுதேசமித்திரனில் ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார். நகைகள் செய்வதில் சரியான கவனம் செலுத்தாததால் பலவித நஷ்டங்கள் உண்டாகின்றன வென்று அவர் சொல்லுகிறார்.

தங்கநகைகள் பெரும்பாலும் பொடிக் கூட்டுள்ளவை. சில நகைகள் மிகவும் நுட்பகரமானவை. இவைகளுக்குக் கூலியும் அதிகம். இவ்வாறு கூலி கொடுத்து நகை செய்த பிறகு அதை அழித்தால் சில ஸமயங்களில் ஒன்றுக்குப்பாதிகூடத் தேறுகிறதில்லை. அநேக ஸமயங்களில் தட்டான்மார்கள் செம்பு, வெள்ளி முதலிய கம்பிகளைத் தங்க நகைகளில் வைத்து கார்யத்தை முடித்துவிடுகிறார்கள். அந்த நகைகளை அழிக்கும்போதுதான் தட்டான்மார்களுடைய திருட்டு வெளிப்படுகிறது. பெற்றோர்கள் தங்களுடைய பெண்களுக்குக் கல்யாணம் செய்யும்போது, கல்யாண காலத்தில் செய்ய வேண்டிய சீர் வகைகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறார்கள். பெண்ணுக்கு இஷ்டமானலுஞ்சரி, இஷ்டமில்லாவிட்டாலுஞ்சரி, ஏற்பட்ட சீர் நகைகளைச் செய்து போடுகிறார்கள். ஆனல் நாகரீகமதிகப்படவே பெண்கள் காரை, வங்கி, நெளி, பிலி முதலிய சில நகைகளை வெறுக்கிறார்கள். அவர்களுடைய படித்த கணவர்களும் அந்த நகைகளை அணியவேண்டாமென்று சொல்லுகிறார்கள். இதனல் பெண்கள் தங்கள் புக்ககம்போனதும் மேற்சொல்லிய நகைகளை விற்றும், அழித்தும் தற்கால நாகரீகத்துக்கு ஒத்தவையான கடியார ஸரம், உயர்ந்த கம்மல் முதலிய சில நகைகளை மாத்ரம் வாங்குகிறார்கள். நகைகளை யழிப்பதால் தேறுகிற பாகம் கம்மியாயிருக்கிறது. கூலி நஷ்டமும் ஏற்படுகிறது.

இன்னும் கல்யாண காலத்தில் அவஸரப்பட்டு நகை செய்வதால் கூலியும், ஸாமான்கள் விலையும் அதிகமாகக் கொடுக்க நேரிடுகிறது.

தக்க காவலில்லாமல் தட்டான்மார்கள் ஏமாற்றுவதுமுண்டு.

அநேக விடங்களில் பெற்றோர்கள் கடன் வாங்கி நகை செய்வதால் வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது. பெண்களும் ஸொத்தை நகையாக வைத்திருப்பதால் நஷ்டமடைகிறார்கள்.

இந்த நிலைமையைச் சீர்திருத்த நிருபர் சில யோசனைகள் சொல்லுகிறார்.

கல்யாண காலங்களிலும், ஸாதாரணகாலங்களிலும் நகைகள் செய்யும்போது பெண்ணின் விருப்பத்தைக் கேட்டே செய்யவேண்டும். மாப்பிள்ளையின் விருப்பத்தையும் கேட்டுக் கொள்ளுவது நல்லது.

காலத்திற்குத் தக்கவாறு நகை விஷயமும் மாறுபடுகிறது. ஒரு பெண்ணுக்கு ஆயிரம் ரூபாயில் வங்கி, காரை, கம்மல், காசுமாலை முதலிய சீர் நகைகளைச் செய்வதைவிட பெண் மாப்பிள்ளை முதலியோருடைய ஸம்மதப்படி அந்த 1000 ரூபாய்க்கே காலத்துக்கேற்ற சில நகைகள் மட்டுமே நல்லதாகச் செய்து போடுவது உசிதம். இதனால் மேற்சொல்லிய சேதங்கள் நேரா. ஒரு போல் காப்பு பண்ணுவதைவிட ஒரு கெட்டிக்காப்பு பண்ணினால் பின்னால் சேத மதிகமில்லை. சீர் நகைகளென்று பழைய ஏற்பாட்டின்படி செய்வது நஷ்டத்தை உண்டு பண்ணுகிறது.

நகை ஆசையைக் கொஞ்சம் கொஞ்சமாய் நம் பெண்கள் மனஸிலிருந்து நீக்கிவிட வேண்டும். கல்யாண காலங்களில் அவஸரப்பட்டு நகைசெய்தல் கூடாது. கல்யாணத்திற்கு முன் கொஞ்ச நகைகள் போட்டாலும், கல்யாணமான பின் மற்றவைகளை போட ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும்.

அதிக பொடிக்கூட்டு நகைகளும் சேதமாகக்கூடிய நகைகளும் செய்யக்கூடாது. தட்டான் மார்களை வீட்டில் வைத்து தக்க காவலில் நகைகளைச் செய்து முடிக்க வேண்டும்.

A WOMEN'S COLLEGE AT MADRAS.

சென்னையில் ஸ்த்ரீகளுக்கு ஒரு காலேஜ்.

சென்னை கவர்ன்மெண்டார் சென்னையில் ஒரு ஸ்த்ரீகள் காலேஜ் ஸ்தாபிக்கப் போவதாக சென்ற ஏப்ரல் மாஸத்து ஸஞ்சிகையில் எழுதியிருந்தோம். அது விஷயமாக வேண்டிய ப்ரேரணைகளை செய்தனுப்பும்படி கவர்ன்மெண்டார் வித்யா டிரெக்டருக்குத் தெரிவித்திருந்தார்கள். அதன்மேல் வித்யா டிரெக்டர் அதைப்பற்றி ஆலோசனை செய்து, பின்வருமாறு தெரிவித்திருக்கிறார். கவர்ன்மெண்டார் விரும்பி யிருந்தபடி காலேஜில் "இன்டர்மீடியேட் வகுப்புகள் மாத்ரம் வைத்து இங்கிலீஷும் வேறு ஏதாவது ஒரு பாடமும் மாத்ரம் கற்பிப்பதென்று ஏற்பட்டால், தற்போது ப்ரெஸிடென்ஸி காலேஜில் வாசிக்கும் பெண்களுக்கு தங்களுக்கு இஷ்டமான பாடங்களை யெடுத்து வாசிக்க ஸௌகர்ய மிருக்கிறதால் இந்தக் காலேஜுக்கு பெண்கள் அதிகமாக வந்து சேருவது கஷ்டமாகக் கூடும். மேலும் இன்டர்மீடியேட் பரீக்ஷைக்கு வாசிக்கும் பெண்கள் பி.ஏ. பரீக்ஷைக்கும் வாசிக்க ப்ரியப்படுவார்களாதலால், இந்தக்காலேஜில் வாசித்த பிறகு மறுபடியும் முதல் க்ரேட் காலேஜுகளுக்குப் போக வேண்டியிருக்கும். இந்தக்காலேஜை வருகிற ஜூலைமாஸத்திலேயே ஏற்படுத்துகிறதென்றால், ஐரோப்பிய உபாத்யாயர்களைத் தெரிந்தெடுப்பதும் மற்ற உபாத்யாயர்களை நியமிப்பதும் முடியாமல் போகும். ஆகையால் இந்தக்காலேஜுக்கு வேண்டிய அளவு ஸ்த்ரீகள் வந்து சேருகிறார்களா என்பதை யறியும் பொருட்டு ஒரு வர்ஷத்துக்கு டெம்பரரியாக இந்தக்காலேஜை வைத்து நடத்துவது நல்லது" என்று தெரிவித்திருக்கிறார்.

கவர்ன்மெண்டார் அவருடைய ப்ரேரணைகளை ஏற்றுக்கொண்டு ஷை காலேஜை

டெம்பரரியாக 8-மாஸம் வைத்து நடத்தும் படி ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

இந்தக் காலேஜுக்கு ஸ்த்ரீ ப்ரொபஸர்களை இங்க்லண்டிலிருந்து தெரிந்தெடுத்து தருவிக்கும் வரையில் இந்தியாவிலுள்ள, ஸ்த்ரீ உபாத்யாயர்களைத தெரிந்தெடுத்து நியமிக்கும் படிக்கும் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

POST PUBERTY MARRIAGE.

ருதுவானபின் விவாகம்.

ஆசார சீர்திருத்த விஷயமாய் பத்ரிகைகளுக்கு எழுதிவரும் 'குஷிகா' என்று புனைவு பெயர் கொண்ட ஒரு கனவான் ஸமீபத்தில் ருதுமதியானபின் விவாகம் செய்வதைப் பற்றி தங்களுடைய அபிப்ராயம் சொல்லும்படி சில கனவான்களுக்கு சில கேள்விகள் எழுதிவிட்டிருந்தார். அவர்களில் பலர் அந்தக் கேள்விகளுக்கு பதில் எழுதியனுப்பி யிருக்கிறார்கள்.

பதிலெழுதியவர்களில் 91-பேர் பெண்களுக்கு ருதுவானபின் கல்யாணம் செய்யலாமென்றும், 10-பேர் அப்படிக் கல்யாணம் செய்வது கூடாதென்றும் அபிப்ராயப்பட்டார்கள்.

38-பேர் இந்தவிவாகம் சென்னைராஜதானியில் சட்டப்படி செல்லுமென்றும், 21-பேர் இது சட்டப்படி செல்லாதென்றும், 19 பேர் சட்டப்படி செல்லுமா, செல்லாதா, என்பதை நிச்சயமாய்ச் சொல்ல முடியாதென்றும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த விவாகம் சட்டப்படி செல்லு மென்பதற்கு ப்ரத்யேகமாய் சட்டம் செய்வது அவச்யமென்று 58-பேரும், ப்ரத்யேகமான சட்டம் செய்யவேண்டியது அவச்யமில்லையென்று 25-பேரும் அபிப்ராயம் தெரிவித்திருக்கிறார்கள். இது விஷயமாக ஒரு சட்ட மசோதா கொண்டுவந்தால் அதை ஆதரிப்பதாக 79-பேர் சொல்லுகிறார்கள். 9-பேர் அதை ஆக்ஷேபிக்கிறார்கள்.

KARUVEPPILAI CHUTNEY.

கருவேப்பிலை சட்னி.

இளங் கருவேப்பிலையைக் கொண்டுவந்து காம்புகளை கிள்ளிவிட்டு ஜலத்தில் நன்றாய் அலம்பிவிடவும். பிறகு அடுப்பில் பாணலியை வைத்துக் கொஞ்சம் நெய்யைவிட்டு, மேற்சொன்ன கருவேப்பிலையைபோட்டு கொஞ்சம் வதக்கி எடுத்துக்கொள்ளவும். அதற்குத் தகுந்த உப்பு, புளி, மிளகாய் இவைகளைச்சேர்த்து அம்மியில் நன்றாய் ஜலம் படாமல் அரைத்து எடுத்துக்கொள்ளவும். பாணலியில் கடுகு உளுத்தம்பருப்புபோட்டு தாளிதம்செய்து அரைத்த விழுதைப் போட்டு கலந்து வேறு பாத்ரத்தில் எடுத்து மூடிவைக்கவும். இது அஜீர்ணம, அதிக வயிற்றுப் போக்கு, பித்தம் முதலியவைகளுக்கு கைகண்ட ஒளஷதமாகும்.-பெண் கல்வி.

GIRLS' SCHOOLS IN JAPAN.

ஜப்பானில் பெண்பள்ளிக்கூடங்கள்.

கொஞ்சகாலத்துக்கு முன்வரையில் ஜப்பான் தேசத்தில் பள்ளிக்கூடங்களில் பெண்களுக்கு குடும்ப விஷயங்கள் தான் அதிகமாகக் கற்பித்து வந்தார்கள். தற்போது வேறு வித படிப்புகளும் அதிகமாகக் கற்றுக் கொடுத்து வருகிறார்கள். அங்கே 200 ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. அவைகளில் லக்ஷம் பெண் மாணவர்கள் வாசித்து வருகிறார்கள். உயர்தரப்படிப்பே யல்லாமல் வேறு தொழிற் படிப்புகளும் பெண்களுக்கு கற்றுக் கொடுத்து வருகிறார்கள். பெண்களுக்கு ஸங்கீதம், தையல்வேலை, முதலியவைகளும், புஸ்தகம் பைண்டு செய்தல் போன்ற சில தொழில்களும் கற்றுக் கொடுத்துவருகிறார்கள். புஸ்தகம் பைண்டு செய்வதில் பெண்கள் ரொம்ப திறமையடைந்திருக்கிறார்களாம். ஸுமார் 11-வர்ஷங்களுக்கு முன்னால் ஸ்த்ரீகள் யூனிவர்ஸிட்டி ஜப்பானில் ஸ்தாபிக்கப் பட்டது. அதில் தற்போது ஸுமார் 1100 ஸ்த்ரீ மாணவர்கள் வாசித்து வருகிறார்கள்.

Biography.
ஜீவ்ய சரித்ரம்.

HON MR. G. K. GOKHALE.
ஆனரபிள் மிஸ்டர் ஜி. கே. கோகலே.

இந்தியாவிலுள்ள ஜனத்தலைவர்களுள் மிகவும் கீர்த்திபெற்றவர்களாயும், ஜனங்களால் நன்கு மதிக்கப்பட்டவர்களாயும், மிகவும் உயர்ந்த தேசாபிமானிக்ளாயும், இருப்பவர்களுள் மிஸ்டர் கோகலே ஒருவராவார். மிஸ்டர் கோபால க்ருஷ்ண கோகலே மஹாராஷ்ட்ர ஜாதியைச்சேர்ந்தவர். ஸுமார் நூறு வர்ஷங்களுக்கு முன் வரையில் மஹாராஷ்ட்ர ப்ரதேசமானது மராட்டியர்களாலேயே ஆளப்பட்ட தன்னரசு நாடாக இருந்துவந்தது. அங்கே வெகுவாய் ராஜாங்க கார்யங்களை கவனித்து நடத்திவந்தவர்கள் மஹாராஷ்ட்ர ப்ராமணர்களே. மஹாராஷ்ட்ர ப்ராமணர்கள் ராஜாங்க கார்யங்களில் ரொம்ப கவனம் செலுத்தி அதில் ரொம்ப தேர்ச்சியடைந்திருந்தார்கள். இக்காலத்திலும் மஹாராஷ்ட்ர ப்ராமணர்கள் முன்னிருந்த வாஸனையை இன்னும் விடாமல் ராஜாங்க கார்யங்களைப்பற்றி ரொம்ப கவனம்செலுத்தி வருகிறார்கள். வம்ச பரம்பரையாக இருந்த இந்த இயல்பு இப்பொழுதும் அவர்களிடம் குறைவுபடாமல் இருந்து வருகிறது. மிஸ்டர் கோகலேயும் இந்த குணம் கொஞ்சமும் குறையாமல் ராஜாங்க விஷயங்களில் ரொம்ப கவனம் செலுத்தி அதில் அவருக்குள்ள ஸாமர்த்யத்தைக் காட்டி வருவது யாவரும் அறிந்த விஷயம்.

மிஸ்டர் கோகலே 1866-ம் வர்ஷத்தில் கோலாபூரில் ஒரு எளிய மஹாராஷ்ட்ர ப்ராமண வம்சத்தில் பிறந்தார். பால்யத்தில் கோலாபூரிலுள்ள காலேஜில் கல்விபயின்று எப்.ஏ.; பரீக்ஷையில் தேறி, பிறகு பம்பாயிலுள்ள எல்பின்ஸ்டன் காலேஜிலும், பூனாவிலுள்ள டெக்கான் காலேஜிலும் படித்துவந்தார். மாணவராயிருந்த காலத்தில் ரொம்ப ஸாமர்த்யசாலியென்றும், உழைப்பாளியென்றும் பேர்வாங்கியிருந்தார். 1884-ம் வர்ஷத்தில் பி.ஏ. பட்டம் பெற்றார்.

அந்தக்கால முதல்கொண்டே அவர்மனதில் தேசாபிமானக் கொள்கைகள் குடிகொண்டிருந்தன. பூனாவில் 'டெக்கான் எடுகேஷன் ஸொஸைடி' என்னும் வித்யாபிவ்ருத்தி ஸங்கமானது கல்வியைப்பரவச் செய்வதற்காக மிகவும் ஊக்கத்துடன் உழைத்துக்கொண்டிருந்தது. பெரிய தேசாபிமானிகளாகிய ஆப்தே, ஆகர்கார், திலகர் முதலியவர்கள் அதில் சேர்ந்திருந்தார்கள். அந்த ஸங்கத்தின் நோக்கங்களையும், முயற்சிகளையும் கண்டு அதில் மெம்பராக சேர்ந்துகொண்டார். அதில் லைப் மெம்பர்கள், அதாவது வாழ்நாள் முழுவதும் மெம்பர்களாயிருப்பவர்கள், அந்த ஸங்கத்தைச் சேர்ந்தவைகளான பெர்குஸன் காலேஜிலும், மற்றப் பள்ளிக்கூடங்களிலும் 20 வர்ஷகாலம் உழைத்துவர உடன்படவேண்டும். மாதம் சம்பளம் 75 ரூபாய் தான் கொடுப்பார்கள். 20 வர்ஷமான பிறகு 30 ரூபாய் பென்ஷனில் வேலையிலிருந்து விலகிக்கொள்ளலாம். 18 வயஸாயிருக்கும்போது பெரிய உத்யோகங்களையும், செல்வத்தையும் நாடாமல் ஜனங்களின் கல்வியபிவ்ருத்திக்காக உழைக்க எண்ணங்கொண்டு மிஸ்டர் கோகலே மேற்படி ஸங்கத்தில் சேர்ந்ததனால், அவர் பால்யத்திலேயே எவ்வளவு தேசாபிமானம் உள்ளவராயிருந்தாரென்பது புலப்படும். அவர் பெர்குஸன் காலேஜில் இருந்தபோது அந்தக்காலேஜை அபிவ்ருத்தி செய்வதற்காக ரொம்ப ச்ரமப்பட்டுப் பணம் சேகரித்து அந்தக்காலேஜுக்குப்

பணத்தட்டு உண்டாகாதபடி ஏற்பாடு செய்தார்.

மிஸ்டர் கோகலே தமது காலேஜ் வ்யவஹாரங்களே யல்லாமல், பொது ஜனக்கார்யங்களைப்பற்றியும், ராஜாங்கக்கார்யங்களைப் பற்றியும், கவனம் செலுத்திவந்தார். அவர் பூனவிலுள்ள ஸர்வ ஜன ஸபை என்னும் ப்ரபலமான ஸபையில் 4 வர்ஷகாலம் ஸெக்ரெடரியாக இருந்தார். அந்த ஸபையின் பத்ரிகைக்கு பத்ராதிபராகவும் இருந்து வந்தார். நான்கு வர்ஷகாலத்துப்பிறகு பொது ஜனங்களுக்குள் அபிப்ராய பேதங்கள் ஏற்பட்டு, அந்த ஸபையிலிருந்தவர்களில் சிலர் டெக்கான் ஸபா என்று வேறு ஒரு ஸபை ஏற்படுத்தினர்கள். மிஸ்டர் கோகலே அந்த ஸபைக்கு ஸெக்ரெடரியாக நியமிக்கப்பட்டார். 1895-ம் வர்ஷம் பூனவில் இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் நடைபெற்றபோது அதன் ஸெக்ரெடரிகளில் ஒருவராக இருந்து காங்க்ரெஸைச் சிறப்பாக நடத்திவைப்பதில் மிகவும் பாடுபட்டிருக்கிறார். இந்திய வரவுசெலவுகளைப்பற்றி விசாரிப்பதற்காக இங்க்லண்டில் வெல்பி கமிஷன் என்று ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டபோது, அந்தக் கமிஷனில் ஸாக்ஷி சொல்லுவதற்காக மிஸ்டர் கோகலே 1897-ம் வர்ஷம் இங்க்லண்டுக்குப் போனர். அவர் அங்கே கமிஷனுடைய விசாரணையில் மிகவும் ஸாமர்த்யமாய் ஸாக்ஷ்யம் சொன்னது யாவராலும் புகழ்ந்து பேசப்பட்டது. அவர் இங்க்லண்டிலிருக்கையில் பூனவில் ப்ளேக் அதிகாரிகள் ஜனங்களை ரொம்பவும் ஹிம்ஸித்து வந்ததாக பூனவிலிருந்து அவருக்குக் கடிதங்கள் போயின. ஜனங்கள் அதிகாரிகளினிடம் அகப்பட்டுக் கொண்டு கஷ்டப்படுவதை யறிந்து மனம் ஸகியாமல் அவ்விஷயங்களையெல்லாம் இங்க்லீஷ் பத்ரிகைகளுக்கு எழுதி வெளியிட்டார். இதனல் இங்க்லண்டில் ஒரு ஆரவாரம் உண்டாயிற்று. அதன்மேல் பம்பாய் கவர்ன்மெண்டார் மிஸ்டர் கோகலே சொன்னவை சரியல்ல வென்றும், கூடுமானல் அவர்தாம் சொல்லுபவைகளை ரூபிக்கட்டுமென்றும் சொன்னர்கள். மிஸ்டர் கோகலே இந்தியாவுக்குத்திரும்பிவந்து தமது ஊரையடைந்து தாம் பத்ரிகைகளுக்கு எழுதியவைகளைப்பற்றி விசாரிக்கையில் தக்கபடி விஷயங்கள் வெளிக்கு வரவில்லை. அதன் மேல் மிஸ்டர் கோகலே பம்பாய் கவர்ன்மெண்டாரிடம் தாம் எழுதியவைகளை ரூபிக்க முடியவில்லை யென்று சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். இப்படிச் செய்ததில் ஜனங்கள் இவர்மேல் அருவெறுப்புக் கொண்டார்கள். ஜனங்களின் க்ஷேமத்தையும் பாத்யதைகளையும் விட்டுக்கொடுத்து விட்டார் என்று பலர் தூஷிக்கலானர்கள். கொஞ்சகாலம் வரையிலும் மிஸ்டர் கோகலே ஜனங்களினுடைய மதிப்பை இழந்திருந்தார். 1900, 1901-ம் வர்ஷங்களில் அவர் பம்பாய் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் மெம்பராயிருந்து தேச நன்மைக்காக மிகவும் பாடுபட்டு வந்தார். 1902-ம் வர்ஷம் வைஸ்ராயின் சட்டஸபைக்கு மெம்பராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். 1905-ம் வர்ஷம் காங்க்ரெஸின் ப்ரதிநிதியாக இங்க்லண்டுக்குப் போய் இந்தியர்களுடைய குறைகளைப்பற்றி இங்க்லண்டில் தெரிவித்துவிட்டு, பிறகு இந்தியாவுக்கு வந்து காசியில் நடந்த காங்க்ரெஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். தேசத்தின் க்ஷேமத்துக்கு உழைப்பதற்காக இந்தியர்களை பயிற்சி செய்விக்கவும், தேசாபிமான உழைப்பை ஒழுங்குப் படுத்தவும் பூனவில் ஒரு ஸங்கம் ஏற்படுத்தியிருக்கிறார். அதற்கு "ஸெர்வெண்ட்ஸ் ஆப் இந்தியா ஸொஸைட்டி" என்று பெயர். அதை இந்திய ஊழியர்கள் ஸங்கம் என்று தமிழில் சொல்லலாம்.

மிஸ்டர் கோகலே நாளது வரையில் இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் மெம்

பா யிருந்து வருகிறார். அவருக்கு ஸி. ஐ. இ. என்றபட்டம் கவர்ன்மெண்டால் கொடுக்கப்பட்டிருக்கிறது. சென்ற 1912-ம் வர்ஷத்தில் உயர்ந்த உத்யோகங்களைப்பற்றிப் பரிசீலனை செய்ய பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் என்ற கமிஷன் நியமிக்கப்பட்டபோது அவருடைய திறமையை அறிந்த கவர்ன்மெண்டார் அவரை அதில் ஒருமெம்பராக நியமித்தார்கள். தென்னாப்ரிக்கா இந்தியர்களின் நிலைமையை சீர்திருத்துவதற்காக இவர் மிகவும் பாடுபட்டு வந்திருக்கிறார். தென்னாப்ரிக்காவுக்கு ஒரு முறை நேரில் போய் அங்குள்ள மந்த்ரிகளை அது விஷயமாய்க்கண்டு பேசி வந்தார். தென்னாப்ரிக்கா இந்தியர்கள் சென்ற வர்ஷம் தென்னாப்ரிக்கா உத்யோகஸ்தர்களாலும் தோட்டக்காரர்களாலும் கொடுமையாக நடத்தப்பட்டபோது அவர்களுக்குப் பணவுதவி செய்வதற்காக ரொம்பவும் ஊக்கமெடுத்து உழைத்து வந்தது யாவருக்கும் தெரியும்.

மிஸ்டர் கோகலேயின் தேகஸௌகம் சிறிது காலமாக த்ருப்திகரமாயிருக்கவில்லை. அவர் நீரிழிவு வ்யாதியாலும், ஹ்ருதய ஸம்பந்தமான வ்யாதியாலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார். வ்யாதியின் கொடுமையைக் குறைப்பதற்காக அவர் அடிக்கடி ஐரோப்பாவுக்குப் போய் தேகஸௌகத்துக்குத் தங்குமிடங்கள் என்று பெயர் பெற்ற ஊர்களில் வஸிப்பதுண்டு. தேகஸௌகம் இவ்வளவு சீர்கேடாக இருந்தாலும் தேசாபிமான கார்யங்களில் சிறிதும் ஊக்கம் குறையாமல் அவைகளை நடத்தி வருகிறார்.

இவ்வளவு தேசாபிமானங்கொண்ட அவருக்கு தேகஸௌகமும் தீர்க்காயுஸும் கொடுக்கும்படி ஸர்வேச்வரனை ப்ரார்த்திக்கிறோம்.

Short Stories.

சிறு கதைகள்.

A KING AND A SAINT.

அரசனும் துறவியும்.

உலகம் பொய் என்று எல்லாவற்றையும் நீக்கிய ஒரு துறவி ஒரு வனத்தில் தனி மூலையிலிருந்து காலம் தள்ளிவந்தார். அந்நாட்டரசன் ஒருநாள் அக்காட்டில் இவர் குடிசைக்கு ஸமீபமாகப் போக நேர்ந்தபொழுது, இப்பெரியவர் அரசனை நிமிர்ந்து பார்த்து மரியாதைக் குறிப்பு யாதொன்றும் தெரிவிக்கவில்லை. தன் உயர்ந்த நிலைமையையும் பெருமையையும் தன்னுள் பெரியதாக எண்ணியிருந்த அவ்வரசன் கந்தைகளும் அகந்தைகளுமுடைய இப்பிச்சைக்காரர்கள் காட்டு ம்ருகத்தை யொத்தவர்கள் என்று கூறிப்போனார். கூடவிருந்த மந்த்ரி பரதேசியைப் பார்த்து: "உலகத்துக்கு அதிபதியான அரசன் உன்வாயில் வழியாகச் சென்றபொழுது நீ ஏன் அவரிடத்து செலுத்த வேண்டிய மரியாதைக் கடமைகளைச் செலுத்தவில்லை" என்று கேட்க, அந்தத் துறவி மந்த்ரிப் பட்டம் வகித்த மானிடனே, உன் அரசன் தயவை எதிர்பார்க்கும் சிற்றறிவுள்ளவரிடத்தினின்றும் கைகட்டி வாய் பொத்தி நிற்கும் ஸேவகம் கிடைக்கும் என்று உன் அரசனிடத்தில் சொல்லு: அன்றியும் ப்ரஜைகளைக் காப்பாற்றுவது அரசன் கடமையேயொழிய அரசனைக் கட்டிக் காத்திருப்பது ப்ரஜைகளின் கடமையல்ல. செல்வாக்கு, சிறப்பு, வல்லமை யாவும் இருந்தும் அரசன் என்பவன் ஏழைகளை காப்பவனே ஒழிய வேறல்ல. ஆட்டை மேய்ப்பது இடையன் கடமையேயின்றி, ஆட்டினின்றும் ஊழியம் எதிர் பார்ப்

பது இடையனுக்கு. ஏற்பட்டதல்ல. ஊழ் வினை முடிந்தவுடன் ராஜ்யாதி பத்யமும் அடிமைத் தனமும் இரண்டும் ஒன்றே. கல்ல றையைத் திறந்து ஒருவன் பார்ப்பானே யா னால் தனிகனுக்கும் எளியவனுக்கும் உள்ள வித்யாஸம் இன்னதென்று தெளிவாய் விள ங்க இடமில்லை'', என்று பதில் சொன்னார். இந்த வாக்யங்களைக்கேட்ட அரசன் துறவி யைக் கொண்டாடி அவருக்கு வேண்டியதை தெரிவித்தால் அளிக்கிறேன் என்று சொல்ல, அதற்கு அந்த ஸாது "இனி எப்பொழு தும் என் ஜோலிக்கு நீ வராமலிருந்தால் போதும்'' என்றார். அரசன் மறுபடியும் "ஐயா முனிவரே, ஏதாவது நற்புத்தி எனக்குத் தாங்கள் உபதேசிக்க வேண்டு'' மென்று வேண்ட, முனிவர், "உனக்கு அதிகாரமும் ஆதிக்கமும் இருக்குங் காலத்திலேயே இந்த த்ரவ்யமும் ராஜ்யமும் நிலையில்லாமல் அடிக்கடி ஒருவனிடமிருந்து மற்றொருவனிடம் தாவும் தன்மையுடையன என்பதை மனவில் நிலை நிறுத்து'' என்றார்.

A HYPOCRITE'S REASONING.

ஒரு வஞ்சகனின் வாதம்.

ஒரு வெளிவேஷம் பூண்டமாயாவி தான் அலியின் வம்சத்தைச் சேர்ந்தவ னென்று கேட்போருக்கு அறிவித்து, ஒரு நகரத்துள் ஹிஜாஸ் பாட்ட சாரிகளுடன் புகுந்து தான் மெக்காவுக்குயாத்ரைபோய் திரும்பி வருகிற வன் என்று சொல்லிக் கொண்டு, அந்நகரத் தரசனிடத்து சில கவிகளை தான் செய்ததாகச் சொல்லி திருமுகம் ஸமர்ப்பிவித்தான். அப் பொழுது அந்த ஸபையிலுள்ள ஒருவர் "இம் மனிதனை சில தினங்களுக்கு முந்தி நான் பஸ் ராவில் பார்த்தேனே; அப்படிஇருக்க இவன் எப்படித் தன்னை ஹாஜிஎன்று வழங்கிவரும் ஹிஜாஸ்பாட்ட சாரி என்று சொல்லிக் கொள் ளுகிறான்'' என்றார். மற்றொருவர் "இவன் மலாதியாவில் ஒரு கிறிஸ்தவருக்கு பிறந்த வன். அப்படி இருக்க அலியின் குலம் என்று நெஞ்சு துணிந்து உரைக்கின்றானே. தவிர இவன் தான் செய்ததாகச் சொல்லி அரச னிடம் ஸமர்ப்பிவித்த கவிகள் அன்வாரி ஸங்கீர்த்தனங்களில் இருக்கின்றனவே'' என் றார். இவ்விரண்டையும் கேட்ட அரசன் அவனைத் தண்டித்து ஊரை விட்டுத் துரத்தும் படி உத்தரவு கொடுத்ததுடன், "நீஏன் இப்படி மனந்துணிந்து பொய் சொன்னாய்'' என்று கேட்க, அவன் "பூபதியே, அடியேன் மறுபடி ஒரு வாக்யம் சொல்லுகிறேன், அது உண்மை யில்லாவிடில் தாங்கள்இட்ட ஆக்ஞைக்கு உள் படுகிறேன்'' என்றான். அதென்ன வென்று அரசன் கேட்க அவன் "தயிர்பால் விற்கும் ஒருவன் மோர் விற்பானே யானால் அந்த மோர் இரண்டு பங்கு தண்ணீரும் ஒரு பங்கு புளிப்புத் தயிரும் கொண்டது என்பது யாவ ருக்கும் தெரிந்ததுதானே. ஆகையால் என் பொய்யில் தங்களுக்கு கோபம் வேண்டாம், தேசாடனம் செய்பவர்களுக்கு பொய் சொல் வது இயல்பே'' என்றான். அரசன் இதைக் கேட்டு நகைத்து இவன் ஆயுள் நாட்களில் இம்மாதிரி உண்மை ஒருநாளும் உரைத்தவ னல்ல என்று சொல்லி அவனிஷ்டத்தை பூர்த்திபண்ணி அனுப்பினார்.

THE LEARNED AND THE ASCETIC.

வித்வானும் துறவியும்.

துறவிக் கூட்டம் அண்டின ஒரு விவேகி அந்த ஸங்கத்தினின்றும் நீங்கி வித்யாசாலை ஸங்கத்தில் சேர்ந்தார். அப்பொழுது "வித் வானுக்கும் பக்தனுக்கும் உள்ள பேதம் யாது? நீங்கள் ஏன் ஒன்றை விட்டு மற்றொன்றில் மாற்றிக்கொண்டீர்கள் என்று ஒருவன் கேட் டான். அதற்கு அவர் "பக்தன் அலைகளி னின்று தன்னை மாத்ரம் காப்பாற்றிக்கொள் வான், கற்றறிந்தவனோ தன்னை தப்பித்துக் கொள்வது மன்றி, மற்றவர்களையும் கரை யேற்றுவான்'' என்றார்.

Departmental Notes.

பகுதிக் குறிப்புகள்.

FUN AND ANECDOTE.

வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

A FUNNY JUDGMENT.

அற்புதமான தீர்ப்பு.

ஒரு பார்ப்பானுடைய பெண்சாதி தன் கொல்லையில் மேய்ந்த ஒரு கழுதையின் காலை ஒரு உலக்கையால் முறித்து விட்டாள். என் கழுதையின் காலை ஒடித்தாய் என்று வண்ணான் வந்து கேட்க, இருவருக்கும் சச்சரவு உண்டாகி காப்பணியாயிருந்த அவளை ஒரு உதை விட்டான். கர்ப்பங்கலங்கி சிசு செத்து விழுந்தது. பார்ப்பானும் வண்ணானும் ந்யாயஸ்தலத்திற்குச் சென்றார்கள். ந்யாயாதிபதி பின் வருமாறு தீர்ப்புச் செய்தார்:—

வண்ணான் பார்ப்பான் பெண்சாதியை வைத்துக் கொண்டு முன் போல எட்டுமாத கர்ப்பத்தில் கொண்டுவந்து பார்ப்பானிடம் விடவேண்டும். கழுதைக்கு கால் சொஸ்தமாகிறவரையில் வண்ணானுக்குப் பார்ப்பான் மூட்டை சுமக்க வேண்டியது.

DOCTOR'S HURRY.

வைத்யரின் அவஸரம்.

வைத்யர்:—"ராமய்யருடைய பையனுக்கு உடம்பு ஸுகமில்லையாம். என்னை வரும்படி சொல்லியனுப்பி யிருக்கிறார்கள். அவஸரமாகப் போகவேண்டும்."

வைத்யர் மனைவி:—"பையனுக் கென்ன உடம்பு."

வைத்யர்:—பையனுக்கென்ன அசௌக்யமோ தெரியாது. ஆனால் அவர்கள் வீட்டில் வைத்யர் வருமுன் என்ன செய்ய வேண்டியது என்று ஒரு புஸ்தகம் இருக்கிறது. புஸ்தகத்தைப் பார்த்து ஏதாவது கற்றுக்குட்டி வைத்யம் செய்து விட்டால்? அதற்கு முன்னால் போய்ச் சேர வேண்டும்.

PASSION IS BLIND.

காமத்துக்குக் கண்ணில்லை.

ப்ரான்ஸில் ஒரு ஊரில் ஒரு மனிதனும் அவனுடைய மகனும் ஒரு பால்காரப் பெண்ணின்மேல் காதல் கொண்டு ஒருவர்க்கொருவர் மனஸ்தாபப் பட்டு கொண்டார்கள். தங்களுடைய மனஸ்தாபத்தை சண்டை செய்து தீர்த்துக் கொள்கிறதென்று எண்ணி அந்தப் பெண்ணின் முன்னால் நின்றுகொண்டு இருவரும் ரிவால்வர் என்னும் துப்பாக்கியால் சண்டை செய்தார்கள். ரிவால்வரால் ஆறு தடவை சுட்டும் ஒருவர்மேலும் குண்டு படாததால், கத்திச் சண்டை செய்வதென்று தீர்மானித்தார்கள். மகன் தனது தந்தையின் மார்பில் கத்தியால் குத்திக் கீழே வீழ்த்தினான். தந்தை சீக்ரம் இறந்து போனான். தந்தையைக் கொன்றதற்காக மகனைப் போலீஸார் கைது செய்தார்கள்.

REVIVAL OF THE DEAD.

மாண்டவன் மீண்டுவந்தது.

பர்மா ராஜ்யத்திலுள்ள மாண்டலே பட்டணத்தில் வ்ருஜலால் என்பவன் சில தினங்களுக்குமுன் பேதியினால் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கையில், ஒருநாள் அவன் பேச்சு மூச்சு இல்லாதிருந்ததைக்கண்ட அவன்பந்துக்கள் அவனை இறந்துபோனானென்று எண்ணி, அவனைத் தூக்கிக்கொண்டு போய் அங்குள்ள ஒரு நதிக்கரையில் மணற்பாங்கான இடத்தில் அவனைப் புதைத்து விட்டுவந்தார்கள். பின்பு, அவன் இறந்ததற்கு வேண்டிய சடங்குகளையெல்லாம நிறைவேற்றி, பதின் மூன்றாவது நாள் நடத்தவேண்டிய க்ரியைகளை நடத்தி, ப்ராமணர்களுக்கு அன்னமிட்டுக் கொண்டிருக்கும்பொழுது, யாவரும் கண்டதிசயிக்கும்படி, வ்ருஜலால் தன் வீட்டுக்குள் நுழைந்தான். அந்த ஸமயம் அங்கிருந்தவர்களெல்லாம் மிகவும் ஆச்சர்யமடைந்தார்கள். அவனுடைய பந்துக்கள் அவனை மணலில்புதைத்து விட்டுத் திரும்பிய சிறிது நேரத்திற் கெல்லாம், தனக்கு ப்ரக்ஞை வந்ததாகவும் உடனே வெகுச்ரமப்பட்டு குழியினின்று வெளிப்பட்டு, அருகேயிருந்த ஒரு க்ராமத்திற்குச்சென்று, உடம்பு அனுகூலமாகும் வரையில 10, 12 நாள்வரையில அங்கு இருந்து வந்ததாகவும், பின்பு, தன் வீடு நோக்கித் திரும்பியதாகவும், அவன் தனது பந்துக்களிடம்தெரிவித்தான்,

CURIOSITIES.
விநோதங்கள்.

PIG'S EYE FOR A CHILD.
குழந்தைக்குப் பன்றியின் கண்.

அமெரிக்காவிலுள்ள பால்டிமோர் என்ற நகரில் 3-மாஸத்து சிசு வொன்றுக்கு ஒரு கண் பொட்டையாயிருந்தது. அங்குள்ள கண் வைத்யசாலைக்கு அந்தக்குழந்தையை எடுத்துப்போனார்கள். உடனே வைத்யர்கள் ஜெர்மனிதேசத்திலிருந்து ஒரு பன்றியைத் தருவித்து, அதனுடைய கறுப்பு விழியைத் தோண்டியெடுத்து, அதை அந்தக்குழந்தையின் வெள்ளை விழியின் நடுவே கறுப்புவிழிக்குப் பதிலாய் வைத்திருக்கிறார்கள். குழந்தை ஸௌக்யமாகத் தானிருக்கிறது. ஆனால் பன்றி யிறந்து போய்விட்டதாம். இதுவரையில் ப்ராணிகளின் கறுப்புவிழிகளைக் குருடராயிருக்கும் மனிதர்களின் கண்ணில் கறுப்பு விழிக்குப் பதிலாய் உபயோகித்து வந்ததில் சரியானபடி பலிக்கவில்லையாயினும், இந்தக்குழந்தையின் விஷயத்தில் பலிதமாயிருக்குமென்றே டாக்டர்கள் பலரும் நம்பியிருக்கிறார்களாம். மேலும் பன்றியின்விழியை மனிதர் கண்ணுக்கு உபயோகித்தது இதுதான் முதல் தடவையாகும்.—வைசிய மித்திரன்.

BOY WITH INVERTED BRAIN.
தலைகீழாக இருக்கும் மூளையுள்ள பையன்.

இங்கிலண்டிலுள்ள ஒருபையனுடைய மூளையானது தலைகீழாயிருப்பதனால் அவன் எல்லாப் பொருளையும் தலைகீழாக இருப்பதாகவே பார்க்கிறானாம். நாம் எல்லோரும் இடது புறத்திலிருந்து எழுதுவதுபோலில்லாமல் வலதுபக்கத்திலிருந்து எழுதுகிறான். எல்லா எழுத்துக்களையும் எண்களையும் உருவங்களையும் தலைகீழாக எழுதுகிறானாம். உதாரணமாக *u*, *m*, என்னும் எழுத்துக்களை எழுதச் சொன்னால் அவன் *n*, *w*, என்னும் எழுத்துக்களை யெழுதுகிறான். ஆனால் வாசிப்பது மாத்ரம் சரியாக இருக்கிறது. மற்றக் குழந்தைகளைப் போலவே ஸுலபமாய் வாசிக்கிறானாம்.

AERIAL TRAIN.
அந்தரத்தில் ஓடும் வண்டித்தொடர்.

பூமியில் எவ்வித ஆதரவுமில்லாமல் ஆகாயத்தில் செல்லக்கூடிய வண்டித்தொடர் ஒன்றை பாச்செலெட் என்னும் ப்ரெஞ்சுக்காரர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். மின்ஸாரத்தின் உதவியாற் செல்லும் இந்த வண்டித்தொடரின் பாகங்கள் முழுமையும் அலூமினியம் என்னும் உலோகத்தால் செய்யப்படவேண்டுமாம். இதற்கு உண்டாகும் செலவுகள் ரயில்வேக்களுக்கு ஏற்படும் செலவுகளைவிட மூன்றிலொருபங்கு குறைவாகவே ஏற்படுமென்று தெரியவருகிறது. இந்தவண்டி மணியொன்றுக்கு முந்நூறு மைல் வீதம் ஓடுமாம். இந்த வண்டிகளில் முதலில் தபால்மட்டும் கொண்டு போகலாமென்று கருதப்படுகிறது. இதைக் கண்டு பிடித்தவர் இதற்காக தம் வாழ்நாள் முழுமையும் செலவிட்டிருக்கிறாரென்று தெரியவருகிறது. இவ்வண்டிகள் உபயோகத்திற்கு வருமானால் 440 மைல் தூரமுள்ள திருநெல்வேலியி லிருந்து ஒன்றரைமணி நேரத்தில் ஒருவன் சென்னைக்குவந்துவிடலாம். இங்கிலண்டிலிருந்து சென்னைக்கு புறப்படுமொருவன் ஸுமார் 10 மணி நேரத்திற்குள் வந்து சேர்ந்து விடுவான்.

CURIOUS FOOTSTEPS.
விநோதமான காலடிகள்.

மஹா மஹோபாத்யாய பண்டித பாங்கிராய் என்பவர், டில்லியில் வாஸிராபாட் ரோட்டுக்குப் பக்கத்திலுள்ள ஓர் சிறு குன்றில், முப்பத்திரண்டு அங்குல நீளமும் பத்து அங்குல அகலமுமுள்ள காலடிகளைக் கண்டார். அவர் அந்தக் காலடிகள் பாண்டவர்களிருந்த நாளில் ஏற்பட்டிருக்கக் கூடுமென்று நினைக்கிறார். சீப் கமிஷனர், அவைகளைப் பரிசோதித்து அவைகளைச் சுற்றிக் கம்பிகள் போட உத்திரவிட்டிருக்கிறார்.

HINTS AND RECIPES.

யுக்திகளும் முறைகளும்.

COCOANUT OIL KILLS BUGS.

தேங்காயெண்ணெய் மூட்டைப்பூச்சிகளை அழிக்கும்.

டாக்டர் ஜாக்ஸன் என்பவர் தேங்காயெண்ணெய் மூட்டைப்பூச்சிகளை அழித்து விடுமென்று எழுதுகிறார். இந்தப்பூச்சிகள் பதுங்கிக் கிடக்கும் இடங்களிலெல்லாம் சிறிது தேங்காயெண்ணெயை ஒரு சிறு குச்சிமூலையால் எடுத்து விடவும்; அல்லது பலகை முதலிய வற்றின் சந்துகளில் இவை புகுந்திருந்தால், அவ்விடங்களில் தேங்காயெண்ணெயைபொட்டுப்பொட்டாக விடலாம். எந்த வைத்ய சாலை அல்லது ஆஸ்பத்ரிகளிலும், எந்த வீடுகளிலும், எவ்விதமான நாற்காலி, கட்டில், படுக்கை முதலியவைகளிலும் சிறிதளவு இந்த எண்ணெயை யுபயோகிப்பதால் வெகுசீக்ரத்தில் மூட்டைப்பூச்சிகள் அழிந்துவிடு மென்பதில் ஸந்தேஹமில்லை; இதை யுபயோகித்ததும் சிறிது நேரத்திற்கெல்லாம் மூட்டைப்பூச்சிகளாலுண்டான பாதையைக் கொஞ்சமும் அநுபவிக்கவேண்டி நேரிடாது. தேங்காயெண்ணெயை உபயோகிப்பதால் ஒரு பதார்த்தமும் கெட்டுப்போகாது. இந்த எண்ணெய் பெரிய மூட்டைப்பூச்சிகளையும் அவற்றின் முட்டைகளையும் குஞ்சுகளையும் ஒழித்துவிடும்.—வைத்தியகலாநிதி.

TO TEST DIAMONDS.

வைரங்களைப் பரீக்ஷிக்க.

வைரக்கல் நல்லகல்லா என்பதை யறிய பின்வருமாறு செய்ய வேண்டும். வெள்ளைக் காகிதத்தில் மையினால் ஒரு பொட்டு வைத்து அந்தப் பொட்டின்மேல் வைரக்கல்லை வைத்து அந்தக் கல்வழியாகப் பார்க்கையில் ஒரே ஒரு பொட்டுத் தெரிந்தால் சுத்தமான வைரமென்று தெரிந்துகொள்ளலாம். சுத்தமற்றவைரமானால் அநேக பொட்டுகள் தெரியும், அல்லது அந்தபொட்டுப்பரந்து தெரியும்.

TO REMOVE LABELS FROM BOTTLES.

ஸீஸாக்களின் மேலுள்ள கடுதாசிகளை எடுத்தல்.

ஸீஸாக்களில் ஒட்டியிருக்கும் கடுதாசித் துண்டுகளைப் பிய்த்தெடுக்கவேண்டுமானால், கடுதாசியில் ஜலத்தை விட்டு நனைத்து நெருப்பில் இரண்டொரு ஸெகண்டுகள் காட்டினால், கடுதாசியிலிருக்கும் ஜலம் ஆவியாகமாறி கடுதாசி வழியாக உள்ளேபோய் கடுதாசியை ஒட்டவைத்த பசையை மிருதுவாக்கி விடும், கடுதாசியை ஸுலபமாக எடுத்து விடலாம்.

BOILED STARCH FOR IRONING.

இஸ்திரி போடக் கஞ்சிப்பசை

இஸ்திரிபோடக் கஞ்சிப்பசை காய்ச்சும் போது, அதில் ஒரு சிறுதுண்டு ஸோப்பை (சவர்க்காரம்)ப் போட்டுக்காய்ச்சினால், பிற்பாடு இஸ்திரி பண்ணும்போது, இஸ்திரிப் பெட்டியானது துணிகளின்மேல் ஸுலபமாய் ஓடும், துணிகளும பளபளப்பாயிருக்கும்.

TO IMPROVE FLAVOUR OF COFFEE.

காப்பியின் வாஸனையை அதிகரிக்க.

காப்பிப் பொடியின்மேல் வெந்நீர் ஊற்றுவதற்கு முன்னால் காப்பித்தூளின்மேல் கொஞ்சம் உப்பைத் தூவிப் பிறகு வெந்நீரை ஊற்றினால் காப்பிக்கு வாஸனை ரொம்ப அதிகமாக இருக்கும்.

TO CLEAN RUSTY KNIFE.

துருப்பிடித்த கத்தியை சுத்தம் செய்ய

கத்தி துருப்பிடித்திருந்தால் அதை வெங்காயத்தினுள் செலுத்தி ஒரு மணிநேரம் வைத்திருந்து பின்பு எடுத்து வழக்கப்படி சுத்தி செய்தால் துருவிட்டுப் போகும்.—உதயதாரகை.

TO KEEP OUT FLIES.

ஈக்களைத் துறத்த.

படுக்கை யறைகளில் ஈக்கள் வராமலிருக்க 'ஸ்பஞ்ஜ்' என்னும் கடற்பஞ்சை லாவண்டர் ஆயில் என்னும் தைலத்தில் நனைத்து படுக்கையின் தீர் பாகத்தில் கட்டிவிட்டால் ஈக்கள் ஓடிப்போகும்.

TAMIL LITERATURE.

தமிழ்க் கல்வி.

CHOLAN KARIKALAN THE FIRST.
முதலாவது கரிகாலன்.

இந்த நூலின் முழுப்பெயர் முதலாவது கரிகாலன் என்கிற சோழன் கரிகால் பெருவளத்தானைப் பற்றிய ஆராய்ச்சி யென்பதாகும். இது தஞ்சாவூர் கல்யாண ஸுந்தரம் ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் எஸ். உலகநாதம்பிள்ளை எழுதியதாகும். இதில் சோழர்கள் வெகுகாலமாக தமிழ் நாட்டில் நாகரிகம் பெற்று வந்திருப்பதைப்பற்றியும், கரிகாலனுடைய காலம், அவனது வரலாறு, அவனுடைய அரசாட்சி முறைமை, முதலியவைகளைப்பற்றியும், விவரமாய் கூறப்பட்டிருக்கிறது. 'சங்கத்து நூல்களை'ப் பெரும்பாலும் ஆதாரமாகக்கொண்டு இந்த ஆராய்ச்சி எழுதப்பட்டிருக்கிறது. தமிழர்களின் முற்கால சரித்ரத்தைப்பற்றி ஊக்கம் பாராட்டுபவர் யாவரும் வாசிக்கத் தகுந்தது. இதன் விலை அணா 10. வேண்டுவோர் ஆசிரியர்க்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

WISE SAYINGS.
நீதி வாக்யங்கள்.

பண்பிலார் கேண்மை துன்பெலாந் தரும்.
அறமே யெவர்க்கு மருந்துணை யாகும்.
பிறமனை நோக்கல் பெருமையை நீக்கும்.
ஒழுக்க மெவரையு முயரச் செய்யும்.
சிந்தனை புறஞ்செலிற் றீமையைப் பயக்கும்.
கீழ்மைக் குணத்தார் கெடுவ தொருதலை.
மெய்ப்பொரு ளுணர்ச்சி நற்பயனளிக்கும்.
சினத்தை வென்றவன் றீநெறி யடையான்.
அடக்கமுடையா னொழுக்கமேற் கொள்வான்.
தனைத்தலை யாகத் தான் செயல் நன்றாம்.

—லோகோபகாரி.

APPASAMI SASTRY.
அப்பாஸாமி சாஸ்த்ரி

ஹாஸ்ய ரஸம் பொருந்திய இந்த நூல் 'அம்புஜ' என்று புனைவு பெயர் கொண்டவரால் எழுதப் பட்டது. ஒரு சிறிய நாடகமாகும். இது ஸுலபமான நடையில் எழுதப்பட்டு வாசிக்க இனிமையா யிருக்கிறது. இதன் விலை அணா 4. வேண்டுவோர் டாக்டர் டி. வி. ஸாமிநாத சாஸ்த்ரி, தெப்பக்குளம், திருச்சிறுப்பள்ளி என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

MATHI MOSA VILAKKAM.
மதிமோச விளக்கம்.

இந்தப் புஸ்தகம் தூசி ராஜகோபால பூபதி எழுதியது. இதில் ஸுமார் 100-வித பித்த லாட்டங்களும் மோசங்களும் விவரிக்கப் பட்டிருக்கின்றன. இதன் நடை ஸுலபமாயிருக்கிறது. யாவரும் வாசிக்கத் தகுந்தது. இதன் விலை அணா 8. வேண்டுவோர், டி. ஆர். ஞானதேசிக பூபதி, கல்லுணி வ்யாபாரம், பெரம்பூர் பாரக்ஸ், மதராஸ், என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

OTHER BOOKS.
மற்ற புஸ்தகங்கள்.

மகாபாரத விராடபருவக் கீர்த்தனை.—இது பைங்காநாடு எனவழங்கும் துளஜேந்திரபுரம் ரகுநாத சாஸ்த்ரிகள் மனைவி மீனாக்ஷியம்மாளால் இயற்றப்பட்டது. இதன் விலை அணா 2. வேண்டுவோர் எஸ். யக்ஞஸாமி சாஸ்த்ரி, பிண்ட்லேகாலேஜ், மன்னார்குடி, என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

(2) தஞ்சை ஸங்கீத வித்யா மஹாஜன ஸங்கத்தின் நான்காவது சங்க ரிபோர்ட்டு:—இதில் ஸங்கீத ஸம்பந்தமான பல விஷயங்களைப் பற்றிய ஆராய்ச்சி வ்யாஸங்கள் இருக்கின்றன. தஞ்சாவூர் ரீவ் ஸாஹிப் ஆப்ரகாம் பண்டிதரால் வெளியிடப்பட்டது.

(3) கோநகர் (கோனுப்பட்டு) ஞானசம்பந்த நற்சபையின் இரண்டாம் வருடத்து அறிக்கைப் பத்திரம்:—இதில் ஷை ஸபையின் நடவடிக்கைகளைப்பற்றிய குறிப்புகளும், கற்பக விநாயக கலாசாலை என்னும் பள்ளிக் கூடத்தின் ரிபோர்ட்டும், 'வாணீ' மந்திரம் என்னும் புஸ்தக சாலையின் ரிபோர்ட்டும் அடங்கியிருக்கின்றன.

DIARY OF THE MONTH.
மாஸ வர்த்தமானம்.

INDIAN NEWS.
இந்திய நாட்டு வர்த்தமானங்கள்.

மேமீ 26-தேதி.

• ஒரு உபசரிப்புக் கச்சேரி.—இன்றையதினம் மிஸ்டர் பி எஸ். சிவஸ்வாமி அய்யர் கவர்னரையும், லேடி பெண்ட்லண்டையும் தமது வீட்டுக் கழைத்து உபசரித்தார். அநேக உத்யோகஸ்தர்களும், கனவான்களும் வந்திருந்தார்கள்.

27-தேதி.

டெக்னிசல் ஸ்காலர்ஷிப்புகள்.—ஐரோப்பாவுக்குப் போய் டெக்னிகல் கல்வி கற்பதற்காக இந்தியா கவர்ன்மெண்டார் 10 - இந்தியர்களுக்குஸ்காலர்ஷிப்பு ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

29-தேதி.

ஸ்ரீநகரத்தில் ஒரு டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்.—வடக்கே காஷிமீர் ராஜ்யத்தின் ராஜதானி பட்டணமாகிய ஸ்ரீநகரில் கட்டப்பட்டிருக்கும் அமார்ஸிங் டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் என்னும் டெக்னிகல் பள்ளிக்கூடம் இன்றையதினம் காஷ்மீர் ஸமஸ்தானத்து ரெஸிடெண்டால் திறந்து வைக்கப்பட்டது. இந்தப் பள்ளிக்கூடம் காலஞ்சென்ற ராஜா ஸர் அமார்ஸிங்கின் ஞாபகார்த்தமாக கட்டப்பட்டிருக்கிறது.

ஜூன்மீ 4-தேதி.

ராஜாபஜார் வெடிகுண்டுக் கேஸ்.—ராஜா பஜார் வெடிகுண்டுக் கேஸில் ஒரு குற்றவாளிக்கு 15-வர்ஷமும், மற்ற குற்றவாளிகளுக்கு 10-வர்ஷமும் தீவாந்தா சிக்ஷை விதிக்கப்பட்டது.

5-தேதி.

ஒரு புது பட்டம்.—இந்தியாவில் ரொம்பப் படித்த வித்வான்களுக்கு மகா மகோ பாத்யாய பட்டம் கொடுப்பதுபோல பர்மாவில் ரொம்பப்படித்த பௌத்தமதத்து வித்வான்களுக்கு அக்கமஹாபண்டிதர் என்னும் பட்டம ஒன்று புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தப்பட்டம கொடுக்கப்பெற்றவர்களுக்கு வர்ஷம் ஒன்றுக்கு ரூ. 100-வீதம் பென்ஷனைக் கொடுக்கப்படும், பட்டம் பெற்றவர் ஸன்யாஸியாயிருந்தால் அவருக்கு நூறுரூபாய்க்கு அரிசி கொடுக்கப்படுமாம்.

5-தேதி.

ஸௌரீந்த்ரமோஹன் டாகூர்.—ஸங்கீதத்தில் ரொம்ப நிபுணரென்று ப்ரஸித்தி பெற்றிருந்த ராஜா ஸர் ஸௌரீந்த்ரமோஹன் டாகூர் இன்றையதினம் காலஞ்சென்றார். ஸங்கீதத்தில் ரொம்பதேர்ச்சி யடைந்திருந்ததற்காக அவருக்கு இங்க்லீஷ கவர்ன்மெண்டில் ஒரு பட்டம் கொடுக்கப்பட்டிருந்தது.

6-தேதி.

சேங்கல்பட்டு ஜில்லா கான்பரேன்ஸ்.—இன்றையதினம் செங்கல்பட்டு ஜில்லா கான்பரென்ஸ் காஞ்சீபுரத்தில் கூடிற்று. சென்னை வக்கீல்களில் ஒருவராகிய மிஸ்டர் ஸ்ரீனிவாஸ ஐயங்கார் ப்ரெஸிடெண்டாயிருந்து நில ஸெட்டில்மெண்ட், நிலங்களின் விலையேற்றம், க்ராம பஞ்சாயத்துகள், தர்மஸொத்துகள், முதலியவைகளைப் பற்றிப்பேசினார்.

7-தேதி.

சேங்கல்பட்டு ஜில்லா கான்பரேன்ஸ்.—இன்று செங்கல்பட்டு ஜில்லா கான்பரென்ஸில், க்ராம பஞ்சாயத்துகள் ஸ்தாபிக்கவேண்டுமென்றும், தாலுக்கா போர்டுகளின் ப்ரெஸிடெண்டுகளின் ஸ்தானத்துக்கும், ஜில்லா போர்டுகளின் வைஸ் ப்ரெஸிடெண்டுகளின் ஸ்தானத்துக்கும், உத்யோகஸ்தர்க ளல்லாதவர்களைத் தெரிந்தெடுக்க கவர்ன்மெண்டார் அநுமதி கொடுக்கவேண்டு

மென்றும், அடிக்கடி நிலவரியை உயர்த்துவது ரயத்துகளுக்கு மிகவும் கஷ்டத்தைத் தரத் தக்கதாயிருக்கிறதென்றும், காஞ்சீபுரத்தில் ஒரு நெசவு ஸ்கூல் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், தீர்மானங்கள் செய்யப்பட்டன.

9-தேதி.

ஒரு புது கோவாபரேடிவ் பாங்கிங் யூனியன்:—செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள கோவாபரேடிவ் ஸங்கங்களின் ப்ரதிநிதிகள் இன்று காஞ்சீபுரத்தில் கூடி காஞ்சீபுரத்தில் ஒரு ஸெண்ட்ரல் டிஸ்ட்ரிக்ட் பாங்கி ஸதாபிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

10-தேதி.

திருப்பூர் கால்நடைக் காட்சி:—இன்றைய தினம் திருப்பூரில் நடைபெற்ற கால்நடைக் காட்சியில் ஆனரபிள் மிஸ்டர் பக்ளீ ப்ரெஸிடெண்டாக இருந்து வெகுமதிகளை எடுத்துக் கொடுத்தார். விவஸாய டிரெக்டராகிய மிஸ்டர் சாட்விக்கும், கைத்தொழில் டிரெக்டராகிய மிஸ்டர் ட்ரெஸ்லரும், விவஸாயத்தைப் பற்றியும் கைத்தொழிலைப்பற்றியும் ப்ரஸங்கங்கள் செய்தார்கள்.

ஒரு பெண்ணின் தற்கொலை:—இன்றைய தினம் கல்கத்தாவில் தனது மாமியார் வீட்டில் வஸித்துவந்த ஒரு வங்காளச் சிறுமி தனது தேகத்தில் கெரஸின் எண்ணெயை ஊற்றி நெருப்பு வைத்துக்கொண்டு இறந்து போய் விட்டாள். தற்கொலை செய்து கொண்டதற்குக் காரணம் தெரியவில்லை.

12-தேதி.

பம்பாயில் தீவிபத்து:—பம்பாயைச் சேர்ந்த கொலாபாவில் ஒரு பஞ்சுக் கிடங்கில் தீப்பிடித்து 1660 மூட்டைகள் நாசமாயின. நஷ்டம் 2-லக்ஷ மிருக்குமாம்.

13-தேதி.

தஞ்சாவூரில் ஒரு கண்டன மீட்டிங்கு:—கண்ணம்பாடித் தேக்கம் விஷயமாய் மைஸூர் கவர்ன்மெண்டுக்கும் சென்னை கவர்ன்மெண்டுக்கும் இருந்த தகாரைத் தீர்க்க நியமிக்கப்பட்ட மத்யஸ்த கமிட்டி மைஸூர் பக்ஷமாய் தீர்ப்புச் சொன்னதை ஆக்ஷேபிப்பதற்காக தஞ்சாவூரில் ஒரு பொதுஜன மீட்டிங் கூடிற்று. திருச்சி ஜில்லா வாஸிகளில் சிலர் அந்த மீட்டிங்குக்கு வந்திருந்தார்கள். மத்யஸத கமிட்டியின் தீர்ப்பையும், கண்ணம்பாடித் தேக்க ஸம்பந்தமான 'பேபர்'களையும் இந்தியா கவர்ன்மெண்டார் தஞ்சாவூர் கான்பரென்ஸுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென்றும், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி ஜில்லாவிலுள்ள மிலஸ்வான்களின் அபிப்ராயங்களை அறிந்துகொள்ளும் வரையில் இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு உத்தரவும் செய்யாமலிருக்க வேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

15-தேதி.

கோலாபா தீவிபத்து.—பம்பாயைச் சேர்ந்த கொலாபாவில் இன்று நான்கு சிறு பையன்கள் சில பஞ்சுமூட்டைகளுக்கு நெருப்பு வைத்துக்கொண்டிருந்தபோது போலீஸார் அவர்களைக் கண்டுபிடித்துவிட்டார்கள். போலீஸாரைக் கண்டதும் பையன்கள் ஓட்டமெடுத்தார்கள். போலீஸார் அவர்களைப் பின்தொடர்ந்து கைதி செய்திருக்கிறார்கள். நெருப்பு சீக்ரம் அணைக்கப்பட்டதால் அதிக நஷ்டம் ஏற்படவில்லை. பையன்கள் விளையாட்டுத்தனமாக நெருப்பு வைத்தார்கள் என்று தெரிய வருகிறது.

விவஸாயப் பொருள் காட்சி.—திருவாங்கூர் விவஸாயப் பொருள்காட்சி இன்றையதினம் ஒக்சிரா என்னுமிடத்தில் ஆரம்பமாயிற்று. திருவாங்கூரின் ரெஸிடெண்ட் அதைத் திறந்து வைத்தார்.

16-தேதி.

பம்பாய் தீவிபத்து.—பம்பாயில் பருத்திக் கிடங்கில் நெருப்பு வைத்த பையன்கள் இன்று

போலீஸ் கோர்ட்டில் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டார்கள். பையன்கள் விளையாட்டுக்காக இப்படிச் செய்தார்கள் என்று சொல்லி நன்னடக்கை ஜாமீனின்மேல் பையன்களை விட்டிருக்கிறார்கள்.

• சைவ கான்பரேன்ஸ்.—இன்றையதினம் சைவ கான்பரென்ஸ் திருச்சிறாப்பள்ளியில் கூடிற்று. ஆனரபிள் ராவ்பகதூர் பி. கேசவ பிள்ளை ப்ரெஸிடெண்டாக இருந்துசைவஸபையின் கார்யங்கள், த்ராவிடர்களின் முற்கால நிலைமை, சைவமதம், தமிழபிவ்ருத்தி முதலியவைகளைப் பற்றிப்பேசினார்.

பால கங்காதர திலகர்:—ராஜ த்ரோகத்துக்காக 6-வர்ஷம் வெறுங் காவலில் வைக்கப்பட்டிருந்த பால கங்காதர திலகர் இன்று இரவு 1-மணிக்கு விடுதலை செய்யப்பட்டார்.

17-தேதி.

ஜெயிலில் தற்கொலை:—சில பித்தளை பாத்ரங்களைத் திருடினதற்காகக் கைதி செய்யப்பட்டு கல்கத்தாவிலுள்ள ஒரு ஜெயிலில் அடைக்கப்பட்டிருந்த தாரேந்த்ரநாத் டட் என்னும் ஒரு வங்காளி தனது இடுப்பு வஸ்த்ரத்தை கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டு இறந்துபோய் விட்டான்.

18-தேதி.

வைஸ்ராயின் உத்யோக காலம்:—பம்பாயிலுள்ள ப்ரபல வ்யாபாரியாகிய ஸர் பஸூல்பாய் கரீம்பாய், வைஸ்ராயின் உத்யோககாலம் சீக்ரம் முடிந்துபோகப் போகிறதென்றும், அவர் செய்துவரும் சீர்திருத்தங்கள் சரியாய் நிறைவேறுவதற்கு அவர் இன்னும் குறைந்தது இரண்டு வர்ஷகாலம் வைஸ்ராய் வேலையிலிருந்தால் ரொம்ப நல்லதென்றும், ஆகையால் இந்தியர்களெல்லாரும் அவருடைய உத்யோக காலத்தை இன்னும் இரண்டு வர்ஷத்துக்கு அதிகப்படுத்த வேண்டுமென்று இந்தியா மந்த்ரிக்கும், அவர் மூலமாய் அரசருக்கும் விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டுமென்றும் பத்ரிகைகளுக்கு எழுதி யிருக்கிறார்.

புது டெல்லி:—புது டெல்லிப்பட்டணம் கட்டுவதற்கு 9-கோடியே 75 லக்ஷம் ரூபாய் பிடிக்குமென்று இந்தியா கவர்ன்மெண்டார் போட்டிருந்த எஸ்டிமேட்டுகளை இந்தியா மந்த்ரி ஏற்றுக்கொண்டு விட்டார்.

நீரிழிவு ரோகஆராய்ச்சி:—தென்னிந்தியாவில் படித்தவகுப்பாருள் நீரிழிவு ரோகவ்யாதி அதிகமாயிருப்பதைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்காக சென்னை கவர்ன்மெண்டார் டாக்டர் பாட்டர்ஸன் என்பவரை நியமித்திருக்கிறார்கள். ஒரு இந்திய கனவான் அந்த ஆராய்ச்சிக்காக 50,000 ரூபாய் கொடுத்து உதவியிருக்கிறார்.

19-தேதி.

ஜெயில் நிர்வாகம்.—இந்தியாவின் ஜெயில் நிர்வாகத்தைப்பற்றிப் பரிசீலனை செய்வதற்காக ஒருகமிஷன் நியமிக்க வேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா மந்த்ரியைக் கேட்டுக்கொள்ளப் போகிறார்கள்.

20-தேதி.

இந்தியாவில் கோவாபரேஷன்.—இந்தியா கவர்ன்மெண்டார் கோவாபரேஷனைப்பற்றி ஒரு தீர்மானம் வெளியிட்டிருக்கிறார்கள்.

கோயமுத்தூர் ஜில்லா கான்பரேன்ஸ்.—இன்றையதினம் கோயமுத்தூர் ஜில்லா கான்பரென்ஸ் கோயமுத்தூரில் கூடிறறு. ஆனரபிள் மிஸ்டர் பி. கேசவபிள்ளை ப்ரெஸிடெண்டாக இருந்து தீர்வை வஜா, குடிகள் அன்ய தேசங்களுக்குப்போவது, க்ராம பஞ்சாயத்துகள், லோகல் போர்டுகள் முதலியவைகளைப் பற்றிப் பேசினார்.

கோயமுத்தூர் ஆசார சீர்திருத்த கான்பரென்ஸ்.—கோயமுத்தூர் ஜில்லா ஆசாரசீர்திருத்த கான்பரென்ஸ் இன்றையதினம் கோயமுத்தூரில் கூடிற்று. ஆனரபிள் மிஸ்டர் வி.

எஸ், ஸ்ரீனிவாஸசாஸ்த்ரி ப்ரெஸிடெண்டாக இருந்து ஜாதி ஏற்பாடு, ஸ்த்ரீகளின் நிலைமை, கல்யாண வயஸு, வர சுல்கம் முதலியவிஷயங்களைப்பற்றிப் பேசினர்.

21-தேதி.

பிறந்தநாள் பட்டங்கள்:—சக்ரவர்த்தியின் பிறந்த நாளையொட்டி பல கனவான்களுக்குப் பட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தென்னாப்ரிக்கா விசாரணைக்கமிஷனில் இந்தியா கவர்ன்மெண்டாரின் ப்ரதிநிதியாக ஸாக்ஷ்யம் சொல்லப்போயிருந்த ஸர் பெஞ்சமின் ராபர்ட்ஸனுக்கு கே.ஸி. எம்.ஜி. பட்டமும், சென்னை ஹைகோர்ட்டில் ஜட்ஜாயிருந்த மிஸ்டர் மில்லருக்கு நைட் பட்டமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சென்னை நிர்வாகஸபை மெம்பராகிய ஸர் ஹாரால்ட் ஸ்டேவர்ட்டுக்கு கே. ஸி. எஸ். ஐ. பட்டமும், சிதம்பரம் ப்ரம்ம ஸ்ரீ ஹரிஹர சாஸ்த்ரிகளுக்கு மஹாமஹோபாத்யாயா பட்டமும் வேறு சிலர்க்கு திவான் பகதூர், ராவ்பகதூர் முதலிய பட்டங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

22-தேதி.

ராஜா பிறந்த நாள்.—ஜார்ஜ் அரசருடைய பிறந்த நாள் இன்றைய தினம் எல்லாவிடங்களிலும் வெகு விமரிசையுடன் கொண்டாடப்பட்டது.

23-தேதி.

ஜமீன்தார் பத்ரிகை.—'ஜமீன்தார்' என்னும் லாகூர் பத்ரிகை சிலகாலத்து முன்பு ஆக்ஷேபணைக்கிடமான சில வ்யாஸங்கள் எழுதிற்று என்று சொல்லி கவர்ன்மெண்டார் அந்தப் பத்ரிகையின் ஸெக்யூரிடியையும், அச்சாபீஸையும் பறிமுதல் செய்துவிட்டார்கள். அதன்மேல் ஷை பத்ரிகை கவர்ன்மெண்டின் உத்தரவின்மேல் பஞ்சாப் சீப் கோர்ட்டில் அப்பீல் செய்தது. அந்த அப்பீல் கேஸ் சில நாளைக்கு முன் விசாரிக்கப்பட்டு இன்று அப்பீல் தள்ளிவிடப்பட்டது.

24-தேதி.

கனம் கெங்க ப்ரஸாத்வர்மா.—லக்னௌவில் ப்ரமுகரில் ஒருவராகிய கனம் கெங்க ப்ரஸாத் வர்மா இன்றையதினம் ஜன்னிவாத ஜுரத்தால் இறந்துபோனர். அவர் 25 வர்ஷகாலமாக முனிஸிபாலிட்டியில் மெம்பராக இருந்ததோடு அட்வகேட், என்னும் வாரம் இருமுறை ப்ரசுரமாகும் பத்ரிகையையும், இந்துஸ்தானி என்னும் பத்ரிகையும் ப்ரசுரித்து வந்தார். ஐக்ய மாகாண சட்ட நிருபண ஸபையிலும் மெம்பராக இருந்தார். அவர் பெரிய தேசாபிமானியா யிருந்ததால் அவர் இறந்ததைக்கேட்க இந்தியாவில் எல்லாரும் வருத்தப்படுவார்கள்.

25-தேதி.

பழனிபாலக்காடு ரேயில்வே.—திண்டுக்கல்லிலிருந்து பழனி பொள்ளாச்சி இந்தப் பட்டணங்களின் வழியாய் கோயம்பத்தூர் ஜில்லாவிலுள்ள போத்தனூருக்கு ஒரு ரெயில் போட உத்தேசித்திருக்கிறார்கள். இதை ஒட்டி பொள்ளாச்சியிலிருந்து பாலக்காட்டுக்கு ஒரு ரெயிலும் போடப்படும். ரெயில் பாதையின் மொத்த விஸ்தீரணம் 137 மைல். அதற்கு பிடிக்கும் செலவு 80 லக்ஷம் ரூபாய். இந்த ரெயிலானது மூன்று ஜில்லாக்களின் வழியாய்ப் போகுமாதலாலும், இது ஸம்பந்தப்பட்ட டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் தனியே இந்த ரெயிலைப்போட முடியாமலிருப்பதாலும், இதற்கு தனியாக ஒரு கம்பெனி ஏற்படுத்தி, சென்னப்பட்டணத்தில் ஆபீஸ் வைத்து, மூலதனம் சேர்க்கப் போகிறார்கள். கோயம்புத்தூர் டிஸ்ட்ரிக்ட்போர்டார் 23 லக்ஷம் ரூபாய்க்கு ஷேர்கள் வாங்கி இருக்கிறார்கள். மற்றத் தொகையை சேகரிப்பதற்கு சென்னப்பட்டணம் பின்னி கம்பெனியார் உத்திரவாதம் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ரெயில் வேலையைப் போடுவதும் நிர்வகிப்பதும் தென்

ஸிந்தியா ரெயில்வே கம்பெனியாரிடத்தில் விடப்படும்.

உதக மண்டலத்தில் 'கோசுவின் உபத்திரவம்.—ரொம்ப ஜாஸ்தியாய்விட்டதாம். அங்கேயுள்ள ஏரியில்தான் கொசுக்கள் உண்டாகின்றன வென்று சொல்லுகிறார்கள். அந்தப் பட்டணத்து வைத்ய அதிகாரியைக் கேட்டு தக்க ஏற்பாடுகள் செய்யப்போகிறார்களாம்.

29-தேதி.

பட்டணங்களை சீர்திருத்துதல்.—பட்டணங்களை சீர்திருத்தி அவைகளின் ஸுகாதார நிலைமையை வ்ருத்தி செய்யும்பொருட்டு அந்த விஷயங்களில் நிபுணரான ப்ரொபெஸர் பாட்ரிக் கெட்டீஸ என்பவரை வரவழைத்து, மதராஸ் கவர்ன்மெண்டார் ஜனங்களுக்கு உபந்யாஸம் செய்விக்கப்போகிறார்கள்.

30-தேதி.

இந்தியின் நாஷனல் காங்க்ரெஸ்.—எம். கே. காந்தி, அம்பிகாசாரன் முஸும்தார், மெஷரல் ஹேக், புபெந்த்ர நாத்பாஸு, ஆகிய இவர்களில் ஒருவரை இந்த வருஷத்து இந்தியன நாஷனல் காங்க்ரெஸ ப்ரஸிடெண்டாக நியமிக்கலாமென்று வங்காள காங்க்ரெஸ கமிட்டியார் சிப்பார்சு செய்திருக்கிறார்கள்.

FOREIGN NEWS

அன்ய நாட்டு ஸமாசாரங்கள்.

மேமீ 26-தேதி.

கனடாவில் இந்தியர்கள்.—சிலவாரங்களுக்கு முன்னால் சில இந்தியர்கள் கனடாவுக்குப் போவதற்காக ஒரு கப்பல் வாடகைக்கு வாங்கி அதில் 600 இந்தியர்களை ஏற்றிக் கொண்டு இந்தியாவை விட்டுப் புறப்பட்டார்கள். சில தினங்களுக்கு முன் அந்தக்கப்பல் கனடாவின் மேற்குப்பாகம் போய்ச்சேர்ந்தது. கனடாவிலுள்ள குடியேற்ற டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் இந்தியர்களை கனடாவிற்குள் நுழையவிட ஸம்மதமற்றவர்களா யிருக்கிறார்கள். குடியேற்றச் சட்டத்தின்படி இந்தியர்கள் நடந்திருக்கிறார்களா என்பதை அதிகாரிகள் இன்று பரீக்ஷிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

28-தேதி.

சீனாவில் ஒரு ஆலோசனை ஸபை.—சீனாவின் ப்ரெஸிடெண்டாகிய யுவான். ஷி. கே. 70 மெம்பர்கள் கொண்ட ஒரு ஆலோசனை ஸபை நியமித்திருக்கிறார்.

கனடாவில் இந்தியர்கள்.—கனடாவிலுள்ள இந்தியர்களின் தலைவர்களில் ஒருவராகிய குர்டிட்ஸிங் என்பவர் இந்தியர்களுடைய ஸ்வதந்தரங்கள் இன்னவென்பதை நிர்த்தாரணம் செய்ய ஒரு ராயல் கமிஷன் நியமிக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

29-தேதி.

'எம்ப்ரஸ் அப் ஐயர்லண்ட்' விபத்து.—இன்று காலையில் (வெள்ளிக்கிழமை) எம்ப்ரஸ் அப் ஐயர்லண்ட் என்னும் கப்பல் கனடாவிலுள்ள க்யூபெக் என்னும் பட்டணத்திலிருந்து ஸெண்ட் லாரன்ஸ் நதிவழியாகப் போய்க்கொண்டிருக்கையில் மூடுபனி வந்து மூடிக்கொண்டது. அப்போது அதன் தலைவன் ஸ்டார்ஸ்டாட் என்னும் நிலக்கரிக்கப்பல் எதிரே வருவதைக்கண்டார். உடனே அவர் தமது கப்பலை பாதிவேகத்தில் ஓட்டும்படி சொல்லிவிட்டு எதிரே வந்த கப்பலுக்கு "விஸில்" அடித்து தமது கப்பலிருப்பதைத் தெரிவித்தார். எதிரே வந்து கொண்டிருந்த கப்பலின் தலைவர் எம்ப்ரெஸ் கப்பல் மேல் மோதாமல் தமது கப்பல் போகக்கூடுமென்று எண்ணி கப்பலை ஓட்டி வந்ததில் அது 'எம்ப்ரெஸ்' கப்பலில் மோதி கப்பலின் தகடுகளைக் கிழித்துவிட்டு மறுபடியும் பின்பக்கம் போயிற்று. 'எம்ப்ரெஸ்' கப்பலின் உள்பக்கத்தில் வெகு சீக்ரம் ஜலம் புகுந்து ஸ்வல்ப நேரத்தில் கப்பலை மூழ்கச்செய்து விட்டது.

இவ்வளவு சீக்ரமாக கப்பல் முழுகிவிட்டதால், கப்பல் உத்யோகஸ்தர்கள் ப்ரயாணிகளில் அநேகரை எழுப்பக்கூட முடியவில்லையாம். கப்பலில் வேலையாட்களுள்பட 1367-பேர் இருந்தார்களாம், இதில் ஆயிரம்பேருக்கு மேல் இறந்துபோய் விட்டதாகச் சொல்லப் படுகிறது.

ஜூன்மீ 2-தேதி.

தென்னாப்ரிக்கா இந்தியர்கள்:—தென்னாப்ரிக்காவிலுள்ள இந்தியர்களுக்குள்ள சில குறைகளை நீக்குவதற்கான ஒரு மசோதாவை ஜெனரல் ஸ்மட்ஸ் இன்று தென்னாப்ரிக்கா பார்லிமெண்டில் கொண்டுவந்தார். அந்த மசோதா முதல் தடவை வாசிக்கப்பட்டது.

3-தேதி.

அரசரின் பிறந்தநாள்:—இன்றையதினந்தான் ஜார்ஜ் அரசரின் பிறந்த தேதியாகும். உலகத்தின் பற்பல பாகங்களிலிருந்தும் அரசருக்கு வாழ்த்துக் கடிதங்கள் வந்தன. சிறுவர்களிடமிருந்து 50,000 வாழ்த்துக் கடிதங்கள் வந்தனவாம்! இந்த மாஸம் 22-தேதியன்று அரசரின் பிறந்தநாள் உத்யோக முறையில் கொண்டாடப்படும்.

5-தேதி.

அல்பானியாவில் யுத்தச்சட்டம்.—அல்பானியாவில் கலகம் உண்டாயிருப்பதை யுத்தேசித்து கவர்ன்மெண்டார் டுர்ராஸோவில் யுத்தச் சட்டம் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

6-தேதி.

ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதிகள்.—ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதிகள் ஹைவைகம்ப் என்னுமிடத்தில் ஒரு மாளிகையைக் கொளுத்திவிட்டார்கள். அதிலிருந்த அநேக புராதன ஸாமான்கள் எரிந்துபோயின.

10-தேதி.

கோமகாடா மாரு.—'கோமகாடா மாரு' என்னும் கப்பலில் ஏறி கனடாவுக்குப் போயிருக்கும் இந்தியர்களை கனடாவில் இறங்கவிடாதபடி குடியேற்றச் சட்டத்தைக் கடுமையாக ப்ரயோகிக்கப்போவதாக கனடாகவர்ன்மென்டின் உள்நாட்டு மந்த்ரி தெரிவித்திருக்கிறார். இந்தியர்கள் கோர்ட் அப் என்க்வைரி என்னும் கோர்ட்டில் ஆஜராகி தங்கள் கட்சிகளைச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். 14 பேர் ஏற்கனவே கனடாவில் இருந்தார்களென்று சொல்லி கரையிலிறங்க அநுமதி கொடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

11-தேதி.

ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதிகள்.—இன்றையதினம் ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதிகள் வெஸ்ட்மின்ஸ்டர் அப்பே (கோயில்) யிலுள்ள மகுடாபிஷேக நாற்காலியை வெடிகுண்டால் சேதப்படுத்தினார்கள். அதின் அடியில் வைக்கப்பட்டிருக்கும் ஸ்கோன்கல் என்னும் ப்ரஸித்தி பெற்றகல் சற்று சேதமடைந்தது. அந்த நாற்காலியை சரிப்படுத்தி விடலாமாம்.

15-தேதி.

அல்பானியாவில் கலகம்.—அல்பானியாவில் கலகம உண்டாகியிருக்கிறது. கலகக்காரர்கள் இன்றையதினம் அல்பானியாவின் தலைநகராகிய டுராஸோவை மூன்றிடங்களில் தாக்கினார்கள்.

18-தேதி.

அல்பானியாவில் கலகம்.—அல்பானியாவில் கலகக்காரர்களுக்கும் ராஜாங்க ஸைன்யத்துக்கும் பலமான சண்டை நடந்தது. ராஜாவின் ஸைன்யத்தில் 1000 பேர் இறந்துபோய் விட்டார்கள். கலகக்காரர்கள் ஜயமடைந்தார்கள்.

கனடாவில் இந்தியர்கள்—பஞ்சாப் ஹிந்து ஸபையார் 600 இந்திய ப்ரயாணிகளை கனடாவிற்குள் போகவிடாமல கனடா அதிகாரிகள் தடுப்பதை யாக்ஷேபித்து கனடாவின் ப்ரதம மந்த்ரிக்கு ஒரு தந்தி யனுப்பியிருக்கிறார்கள்.

19-தேதி

சுரங்க விபத்து.—ப்ரிட்டிஷ் கொலம்பியாவில் பெர்னி யென்னுமிடத்தில் ஒரு சுரங்கத்தில் கெட்ட காற்றுகள் நெருப்புப் பிடித்து சுரங்கம் வெடித்து 200-பேர்கள் இறந்துபோய் விட்டார்கள்.

21-தேதி.

தர்மஞ் செய்ததற்காகக் கொலை செய்தது.—பாரன் ஹென்ரி டி ராத்ஸ்சைல்ட் என்னும் பெரிய பணக்காரர் தர்ம பால் தயிர்ச் சாலைகள் ஸ்தாபித்து தொழிலாளிகளைக் கெடுக்கிறார் என்று அவருடைய தர்மத்தொழில்களால் கஷ்டப்பட்டுப் போன ஒரு பால் சாலைக்காரன், பாரன் ராத்ஸ் சைல்ட் இன்று இரவு ஓர் நாடக சாலையிலிருந்து வரும்போது அவரைத் துப்பாக்கியால் சுட்டான். பால் சாலைக்காரனை கைதி செய்திருக்கிறார்கள். பாரன் ராத்ஸ் சைல்ட் காலில் புகுந்திருந்த குண்டை வெளியி லெடுத்து விட்டார்கள். அவர் தேகஸ்திதி த்ருப்திகரமாயிருக்கிறது.

24-தேதி.

கனடாவில் ஆசியாவாஸிகள்.—கனடாவைச் சேர்ந்த விக்டோரியா பட்டணத்தில் 3000-ஜனங்கள் கூடியிருந்த ஒரு மீட்டிங்கில், ஆசியவாஸிகள் கனடாவுக்கு வருவது அந்த தேசத்துக்குக் கெடுதலென்றும, அப்படி வருவதைத் தடுக்க, தகுந்த சட்டங்கள் செய்யவேண்டு மென்றும் தீர்மானித்தார்கள்.

ஸெர்வியா அரசர்.—ஸெர்வியாவின் அரசர் தேகஸௌகத்துக்காக வ்ராஜ்ஜி என்னும் இடத்துக்காகப் போவதால் தமக்குப் பதிலாக இளவரசரை ரீஜண்டாக நியமித்திருக்கிறார்.

25-தேதி.

லார்ட் கிச்சனர் இந்தியாவின் ராஜப்பிரதிநிதி.—யாக வேண்டுமென்று லண்டனில் ரொம்ப பேர்கள் அபிப்ராயப்படுகிறார்களாம்.

27-தேதி.

தென் ஆப்பிரிக்கா விவஸாயிகள்.—இங்கிலாந்தில் நடக்கும் சீர்திருந்திய விவஸாய முறைகளை 50 தென் ஆப்பிரிக்கா விவஸாயிகள் சுற்றிப்பார்த்து வருகிறார்கள். இன்றைய தினம் ஜார்ஜ் அரசரும் அவரது மனைவியும் அவர்களை வரவேற்று ஒவ்வொருவரோடும் பேசி அனுப்பினார்கள்.

28-தேதி.

ஆஸ்ட்ரியாவின் இளவரசர் கொல்லப்பட்டது.—ப்ரான்ஸிஸ் பெர்டினண்ட் என்னும் ஆஸ்ட்ரியாதேசத்து இளவரசையும் அவருடைய பெண்ஜாதியையும் ப்ரின்ஸிப் என்னும் பள்ளிக்கூடத்து மாணாக்கன் சுட்டுக் கொன்று விட்டான்.

SEASON.

கால ஸ்திதி.

Rainfall.

மழை.—1914ஹு ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1914ஹு ஜுன்மீ 30உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் வெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	23·81	8·89
வால்டேர்	12·87	7·87
காக்கினாடா	8·73	6·72
மசூலிப்பட்டணம்	5·97	6·66
நெல்லூர்	3·21	2·41
மதராஸ்	2·70	3·72
கூடலூர்	3·68	3·83
நாகப்பட்டணம்	2·12	3·92
பாம்பன்	1·08	2·90
கொழும்பு	28·36	28·71
திருவநந்தபுரம்	26·18	26·65
கொச்சி	36·98	45·68
கள்ளிக்கோட்டை	33·38	46·85
மங்களூர்	38·16	45·90
மெர்க்காரா	23·77	35·27
ஐதராபாத்	11·00	6·46
பல்லாரி	2·11	4·98
கர்நூல்	3·46	5·00
கடப்பை	7·15	5·32
ஹாஸ்ஸான்	4·78	11·69
பெங்களூர்	8·92	8·70
கொடைக்கானல்	17·25	14·09
உதகமண்டலம்	10·83	16·53
கோயம்புத்தூர்	1·31	5·74
வேலூர்	6·18	6·70
சேலம்	7·83	10·19
திருச்சினாப்பள்ளி	2·67	6·51
புதுக்கோட்டை	5·46	4·87
மதுரை	4·77	6·56
திருநெல்வேலி	0·83	4·9

Calendar—பஞ்சாங்கம்

அம்ருதாதி	லக்ன பாக்கி		அகர்மாந		ஆங்	இங்	தமி	வார	48-ஆநந்த௵ஆடிமூ- தக்ஷிணாயனம்-கிரீஷ்மருது. { ஆஷாடம் } ஸிராவணம் } கொல்லம்-1089 பஸலி-1324 { இங்கிலீஷ் - 1914 ஜூலை-ஆகஸ்டு } ஹிஜரி-1332 ஷாபான்- ரம்ஜான்
யோக	நா	வி	நா	வி	உ	உ	உ	ம்	
அசி	5	18	31	27	22	16	1	வி	நவ-56-22,அசு-27-39,திரு-40-27,தை-23-32,தி-16-26,ரா-23-4,சடகருன்யதி, ஸமார்க்
சி		8		26	23	17	2	வெ	தச-60-0,டர-34-30,சூல-42-16,வணி-26-59,கடகதசமீதி,கரிநாள்,த்ரிதினஸ்பிருக் [கம்
அ	4	58		25	24	18	3	ச	தச-1-20,கிரு-40-18,சண்-43-12,டவ-33-23,தி-7-32,கிருத்திகை
சி		48		24	25	19	4	ஞா	ஏகா-5-5,ரோ-14-46,விரு-43-3,சவு-36-24,தி-23-26,ரா-28-12,ஸர்வஏகாதசீ
அசி		37		23	26	20	5	தி	த்வா-7-21,மிரு-47-45,துரு-41-42,கர-37-35,சே-3-36,ப்ரதோஷம்
மசி		27		23	27	21	6	செ	த்ர-8-5,திரு-49-13,வியா-39-8,பத்-37-53,தி-9-24,கிருஷ்ணஙகாரகசதுர்த்தசீ,மாஸ }
சி		17		22	28	22	7	பு	சசி-7-19,புன-49-19,ஹர்-35-26,சது-36-26,தி-19-25,ஸர்வஅமா [சிவரா, கூற்றுவர் }
அசி		7		21	29	23	8	வி	●-5-14,பூச-48-16,வஜ்-30-45,கிம்-33-46,தி-9-4,சிம்மாயன-42-45,பிண்டபிதிரு,இஷ்டி,புஷ்களா, அலப்யம்
ம	3	57		20	30	24	9	வெ	ப்ர-2-3,உப-55-55,ஆயி-46-20,ஸித்-25-14,பால-30-6,தி-19-20,சிராவணசுத்த,அவம,சந்திரதர்சனம்
அசி		46		19	1	25	10	ச	த்ரி-53-12,மக-43-35,விய-19-6,தை-25-39,தி-15-2,விபிரா,மதுசிரவா.கரிநாள் (ரக்கூனில் அவம)
சிஅ		36		18	2	26	11	ஞா	சது-47-59,பூர-40-22,வரீ-12-28,வணி-20-38,தி-2-33,ரா-26-3-சதுர்த்தீவிரு,,தூர்வாகணபதிவிரு நாகசதுர்த்தி,
சி		26		17	3	27	12	தி	பஞ்-42-28,உத்-36-50,பரி-5-29,உப-52-49,பவ-15-15,சே-1-20,ரா-25-17,நாகபஞ்சமீ [அடிப்பூரம்
சி		16		16	4	28	13	செ	ஷஷ்-36-45,ஹஸ-33-7,சித்-51-2,சவு-9-37,சே-0-33,ரா-20-37,ஷஷ்டியுப,இராபா
சி		6		15	5	29	14	பு	ஸப்-31-2,சித்-29-23-சாத்-43-46,கர-3-53,பத்-58-12,ரா-11-17,சீதளாவிருத,திவாமா,பெருமிழலைக்குறும்பர்
அசி	2	55		14	6	30	15	வி	அஷ்-25-24,சுவா-25-44,சுப-36-35,பால-52-39,ரா-7-40,அஷ்டமீதி, சுநதரமூர்த்திசுவாமிகள்,சேரமான
சி		45		13	7	31	16	வெ	நவ-19-59,விசா-22-17,சுப்-29-35,தை-47-23,ரா-0-31,திதிதுவயம்,வரலக்ஷ்மீவிரதம் [பெருமான்
சி		35		12	8	1	17	ச	தச-14-54,அனு-19-11,பிரா-22-53,வணி-42-31,ரா-1-19,ஏகாதசீதி,கலியநாய,கோட்புலிநாயனார்
மஅ		25		11	9	2	18	ஞா	ஏகா-10-16,கேட்-16-32,மா-16-35,பவ-38-12,ரா-4-37,வைசிரா,ஸர்வஏகா,பதினெட்டாம்பெருக்கு
சிஉ		15		10	10	3	19	தி	த்வா-6-19,மூல-14-35,வை-10-50,சவு-34-38,தி-10-41,ரா-6-53,ப்ரதோஷ, விஷ்ணுபவித்ராரோப, ததிவிருதம்
சிபி		4		9	11	4	20	செ	த்ர-3-11,பூரா-13- விஷ்-5-47,கர-32-1,ரா-2-13,சிவபவித்ராரோப,கரிநாள்
அசி	1	54		8	12	5	21	பு	சசி-1-6,உரா-13-½ ,பிரீ-1-33,உப-56-46,பத்-30-30,தி-23-32,சிரவணஉப,பவித்ராரோப,ரக்ஷாபந்தம்,யஜுருபா
சி		44		7	13	6	22	வி	○-0-14,திரு-14-37,ஸவு-56-8,பால-30-18,தி-24-57,காயத்ரீஜப,இஸ்டி,ருதுபாகர்ம [கர்ம,சிரவணகர்ம,ஸர்ப்
சி		34		6	14	7	23	வெ	ப்ர-0-43,அவி-17-0,சோ-55-5,தை-31-30,ரா-5-6,சிராவணபகுள,அருன்யசயன விரு [பபலி
அம		24		5	15	8	24	ச	த்வி-2-38,சத-21-6,அதி-55-8,வணி-34-8,ரா-7-19,
சிஅ		13		4	16	9	25	ஞா	த்ரி-5-57,பூட்-26-23,சுக-56-10,பவ-38-6,ரா-21-46,சங்கடசதுர்த்தீ, பகுளா, ஸோமகல்பாதி
சி		3		2	17	10	26	தி	சது-10-31,உட்-32-46,திரு-58-4,சவு-43-11,இராபா
சி	0	53		1	18	11	27	செ	பஞ்-16-1,ரே-39-55,சூல-60-0,கர-49-0,தி-6-16,ஷஷ்டீதி,திவாமா(ரக்கூன்அதிதி)
மசி		48	31	0	19	12	28	பு	ஷஷ்-22-3,அசு-47-24,சூல-0-17,பத்-55-5,ரா-5-10,அதிதி,(ரக்கூன் ஷஷ்டீதிதி)
சிம		33	30	59	20	13	29	வி	ஸப்-28-2,பர-54-37,கண்-2-41,பவ-28-2,தி-14-20,ஸப்தமீதி,கோதுலாஷ்டமீ
சி		22		57	21	14	30	வெ	அஷ்-33-26,கிரு-60-0,விரு-4-49,பால-0-50,தி-27-59,மன்வாதி,காலாஷ்டமி,கிருத்திகை,மூர்த்திநாய, புகழ்ச்
அ	0	12	30	56	22	15	31	ச	நவ-37-46,கிரு-1-6,துரு-6-16,தை-5-47,ரா-13-49,கடகநவமீதி,ஆடிப்பண்டிகை [சோழர்

			சனி
ரா	3-மிது-பு 19-கன்செ	ரா பு	
குரு	20-கன்-சு 21-கட-பு	செசு கே	